www.padippakam.com

1-15 மே '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்

# காட்டில் வீரப்பன் நாட்டில் ஜெயா கிரிமினல் ஆட்சி




படிப்பகம்

www.padippakam.com

*ஏப்.22: லெனின் பிறந்தநாள்; மா-லெ. கட்சி நிறுவன நாள்*

# மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப்பிடிப்போம்! முதலாளித்துவ மூடர்களுக்கு குழிபறிப்போம்!

ஏப்ரல் 22:
உலகப் பாட்டாளி வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட மக்களின் மாபெரும் தலைவர் தோழர் லெனின் பிறந்த நாள்.

அடிமை[illegible]விலங்கொடித்து, உலகில் முதன் முதல[illegible]ட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக உயர்த்திக் காட்டிய புத்துலக சிற்பி அவர். ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிவகுத்த அவர் ஒரு புரட்சிப் புயல். அனைத்துலக உழைக்கும் மக்களின் கலங்கரை விளக்கமாக சோவியத் சோசலிச பூமியைக் கட்டியெழுப்பிய அம்மாமனிதனுக்கு இன்று 124-வது பிறந்த நாள்.

தோழர்கள் லெனின் - ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு, நவீன திருத்தல்வாதிகள் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றி சோசலிச பூமியை சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்ததன் தொடர்ச்சியாக, அப்பட்டமான முதலாளித்துவத்தை நிலைநாட்டிய ரஷியாவின் புதிய ஜார்கள் லெனினது சிலைகளைத் தகர்த்தார்கள். செங்கொடியைச் சிதைத்து எரித்தார்கள். போலி சோசலிசத்தின் தோல்வியால் ரஷியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட முதலாளித்துவ ஆட்சிக் கவிழ்ப்புகளை உசுப்பிவிட்டு, கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டார்கள்.

முதலாளித்துவம்தான் தீர்வு; அதுவொன்றே ஜனநாயகமானது என்றால், முதலாளித்துவ ஆட்சிமுறை — பொருளாதாரத்தைக் கொண்ட சோமாலியா, எத்தியோப்பியப்பியா, வங்கதேசம் முதலான ஆசிய - ஆப்பிரிக்க நாடுகள் வறுமையிலும் பட்டினிச் சாவிலும் சிக்கித் தவிப்பது ஏன்? முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்ட பிறகு, கடந்த ஈராண்டுகளாக ரஷியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் வேலையின்மையும், பிச்சை எடுத்தலும், விபச்சாரமும்தானே பூத்துக் குலுங்குகிறது? அதைவிட, 'ஜனநாயகத் தொட்டிலான' அமெரிக்கா, இன்று மீளமுடியாத நெருக்கடியில் அல்லவா சிக்கித் தவிக்கிறது! தனது ஒற்றைத் துருவ உலகப் பொருளாதாரத் திட்டத்திற்காக ஆட்சிக் கவிழ்ப்புகளையும் ஆயுதக் குவிப்பையும் செய்வதுதான் அமெரிக்காவின் நோக்கமாக உள்ளது. இதைத்தான் முதலாளித்துவ முட்டாள்கள் 'ஜனநாயகம்' என்று வெட்கமின்றி பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மோசடியை முறியடித்து, மார்க்சிய - லெனினியத்தைப் பற்றி நின்று பாதுகாப்பதற்குப் பதிலாக, இந்தியத் திருத்தல்வாதிகளோ காலத்திற்கேற்ப மாற வேண்டுமென்று லெனினை பூஜையறைப் படமாக்கி விட்டார்கள். இன்னும் சிலர் கலைப்புவாதிகளாக மாறி, மார்க்சியத்தையே குழிதோண்டிப் புதைக்கக் கிளம்பிவிட்டார்கள்.

இந்தத் துரோகிகளைத் தோலுரித்து, மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாத்து வளர்க்க வேண்டிய மகத்தான பொறுப்பும் கடமையும் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தோள்களில்தான் சுமத்தப்பட்டுள்ளது. ஆனாலும் லெனினியத்தின் ஜீவனாகிய போர்த் தந்திர அரசியலை முன்வைத்து புதிய நிலைமைக்கேற்ப போராட்டத்தை முன்னெடுக்காமலும், ஊக்கமான சித்தாந்தப் போராட்டம் நடத்தி ஐக்கியப்படாமலும் இன்னமும் சில மா-லெ குழுக்கள் மெத்தனமாக, கெட்டிதட்டிப் போன நிலையில் உள்ளன. இந்துவெறி பாசிச அபாயம் நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தும்போது, செயலாற்றாமல் கிடப்பது, போர்த்தந்திர அரசியலை முன்முயற்சியோடு செயல்படுத்துவோரைப் பார்த்து வறட்டுவாதம் பேசி வசைபாடுவது என்பதாக முடங்கிக் கிடக்கின்றன. இவை மீண்டும் மார்க்சிய - லெனினியப் புரட்சிகர இயக்கத்தை தேக்கத்துக்கும் பிளவுக்குமே இட்டுச் செல்லும்.

இத்தகைய தவறான போக்குகளை நிராகரித்து, முன்முயற்சியோடு போர்த்தந்திர அரசியலை நடைமுறைப்படுத்தி, கம்யூனிசம்தான் ஒரே தீர்வு என்பதை நிலைநாட்டும் வகையில் உறுதியுடன் செயல்பட தோழர் லெனினது பிறந்தநாளில் சூளுரைப்போம்!



ஏப்ரல் 22:
1969-ல் வசந்தத்தின் இடிமுழக்கமாய் எதிரொலித்த, மகத்தான நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியில் உதித்தெழுந்த இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) -யின் நிறுவன நாள்.

கிழட்டுத் திருத்தல்வாதத் திரை கிழித்து தரகுப் பெருமுதலாளிகள் - நிலப் பிரபுக்களை, அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களை குலைநடுங்க வைக்கும் முன்னணிப் புரட்சிப் படை எனும் பெருமைமிகு வீரவரலாறு நக்சல்பாரிகளுக்கு மட்டுமே உரித்தானது!

எதிரிகளின் நரவேட்டையாலும், துரோகிகள் - ஓடுகாலிகள் - கலைப்புவாதிகளின் சீர்குலைவினாலும், போர் முறைத் தவறுகளினாலும் பிளவுகளையும் பின்னடைவுகளையும் சந்தித்த போதிலும் இந்திய உழைக்கும் மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் மா-லெ புரட்சியாளர்கள்தான்!

வானத்தைக் கீறி வைகறையைப் பறித்தெடுக்கும் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த ஆயிரமாயிரம் உயிர்த் தியாகிகளின் வழியில் செம்பதாகை உயர்த்தி தொடர்ந்து முன்னேறுவோம்! ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் புரட்சியாளர்கள் ஐக்கியப்படுவோம்!

நாட்டையும் மக்களையும் மறு அடகு வைத்து அடிமைப்படுத்தும் காங்கிரசுத் துரோகிகளையும், பார்ப்பன (இந்து) வெறி பாசிசத்தையும் தகர்த்தெறிவோம்! புதிய ஜனநாயகப் புரட்சியில் வெல்வோம்!

## மே நாள் சூளுரை

- உலகின் முதல் எதிரி அமெரிக்க வல்லரசை முறியடிப்போம்!
- நாட்டை மறுகாலனியாக்கும் காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளை தகர்த்தெறிவோம்!
- பார்ப்பன (இந்து) மதவெறி பாசிசத்தை நிர்மூலமாக்குவோம்!
- தரகு முதலாளிகள் - நிலப் பிரபுக்களின் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்!
- உழுபவருக்கே நிலம் சொந்தம்! உழைப்பவருக்கே அதிகாரம்! புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் முன்னேறுவோம்!

படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

11-12

1 - 15 மே '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# 'ஜெ'யின் சட்டமன்ற ரௌடித்தனம்

தனது பத்தாண்டுகால கோமாளி - கொடூர ஆட்சியில் நாடாளுமன்ற மாயையை, கபட வேடத்தை எதிர்மறையில் அம்பலப்படுத்தி விட்டுப் போனார் பாசிச எம்.ஜி.ஆர். அவர் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுவதில் அவரது உடன்கட்டை வாரிசான பாசிச ஜெயா கும்பல் இன்று புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது.

அண்மையில் சட்டமன்றத்தில் போலீசு மானியத்தை ஒட்டி நடந்த விவாதத்தின் போது, சிதம்பரம் - அண்ணாமலை நகர் போலீசாரால் கற்பழிக்கப்பட்ட பத்மினி விவகாரத்தையொட்டி காங்கிரசுக் கட்சியினர் விவாதிக்க முற்பட்ட போது, பாசிச ஜெயா கட்சியினர் அவர்களைப் பேசவிடாமல் குறுக்கீடு செய்தனர். தேவையில்லாமல் கருணாநிதியின் மகளைப் பற்றி ஆபாசமாகப் பேசி குரூர இன்பம் கண்டனர். எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வின் ஒரே எம்.எல்.ஏ.வான திருநாவுக்கரசு பேச முற்பட்டபோது குறுக்கிட்டு தடுத்ததோடு, அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்திரவிட்டார் சபாநாயகர். அப்போது அ.தி.மு.க., எம்.எல்.ஏ.வான ஆரோக்கியசாமி ''போடா வெளியே'' என்று வசை பாடினார். இதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டதும் அவசரமாக சபையை ஒத்திவைத்துவிட்டு சபாநாயகர் வெளியேறினார். அதைத் தொடர்ந்து காங்கிரசார் மற்ற எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அவையை விட்டு வெளியேறாமல் தொடர்ந்து தர்ணா போராட்டத்தை மேற்கொண்டனர்.

ஆத்திரமடைந்த ஜெயா கும்பல் சட்டசபையின் வெளிக்கதவுகளை மூடி மின்சாரத்தையும் தண்ணீர் குழாய் இணைப்பையும் துண்டித்தது. கவர்னரிடம் காங்கிரசுப் பிரமுகர்கள் முறையிட்ட பின்னரே நாலரை மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் இணைப்பு தரப்பட்டது. எதிர்த்தரப்பினர் நள்ளிரவிலும் அவையை விட்டு வெளியேறாமல் தொடர்ந்து தர்ணா போராட்டம் நடத்தி, சட்டமன்ற வரலாறு காணாத 'புதிய சாதனை'யை நிகழ்த்தினர். இதற்கிடையே உணவுப் பொட்டலங்களுடன் தி.மு.க..எம்.எல்.ஏ. பரிதி இளம்வழுதி உள்ளே நுழைய முற்பட்டபோது சட்டசபைக் காவலர்களை ஏவி, ஜெயா கும்பல் அவரை மிருகத்தனமாக தாக்கியது.

மறுநாள் அவை கூடியதும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், ''சாத்தான் வேதம் ஓதக்கூடாது; சபாநாயகர் திருக்குறளை வாசித்து அவை நடவடிக்கைகளைத் துவக்கக் கூடாது'' என்று கோஷமிட்டனர். தான் தாக்கப்பட்டதைப் பற்றி வேதனையுடன் அழுதுகொண்டே முறையிட்டார் பரிதிஇளம்வழுதி. இவை எதைப் பற்றியும் பரிசீலிக்காமல், அனைவரையும் வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்திரவிட்டார் சர்வாதிகார சபாநாயகர். வெறியேற்றப்பட்ட உறுப்பினர்கள் சென்னை - அண்ணாசாலையில் திடீர் மறியல் போராட்டம் நடத்தியதும் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இதுவும் போதாதென்று, தி.மு.க.வின் பரிதி இளம்வழுதியும் காங்கிரசின் ஞானசேகரன், ராஜேந்திரன் ஆகியோரும் 8 காவலர்களைத் தாக்கினார்கள் என்ற அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டு அவர்களைக் கிரிமினல் சட்டப்படி கைது செய்ய உத்திரவிட்டார் பாசிச ஜெயா.

எம்.எல்.ஏ.க்கள் கைது செய்யப்பட்டதையும், ஜெயா அரசின் ஜனநாயக விரோதப் போக்கையும் கண்டித்து தி.மு.க.வும், காங்கிரசும் பல இடங்களில் திடீர் சாலை மறியல் போராட்டங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தியுள்ளன. பாசிச ஜெயாவோ, ''எனது ஆட்சியைக் கலைக்க சதி செய்கிறார்கள்; இடைத் தேர்தலை (பழனி - ராணிப்பேட்டை) நிறுத்த கேடாக முயற்சிக்கிறார்கள்'' என்று பீதியில் கூப்பாடு போடுகிறார்.

எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது போல ''வரலாறு காணாத அமளி''யும் ''ஜனநாயகப் படுகொலை''யும் தமிழக சட்டமன்றத்தில் முதன்முறையாக நடப்பது அல்ல; இதற்கு முன்பு தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் அடிதடி, ரகளை, செருப்பு வீச்சு, நாற்காலி உடைப்பு, வேட்டி அவிழ்ப்பு, ரத்தக்காயம், ஆபாச வசவுகள் எல்லாமே குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் நடந்திருக்கின்றன. ஆனால் பத்திரிகையாளர்களை சட்டமன்ற சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி கூண்டிலேற்றி தண்டிப்பது, சாதிப்பெயரைச் சொல்லித் திட்டுவது, எதிர்க்கட்சியினரைப் பேசவே விடாததோடு மீறிப் பேசினால் குண்டர்களைக் கொண்டு தாக்குவது என்பதாக ஜெயா கும்பலின் அட்டூழியங்கள் புதிய வரலாறு படைத்துள்ளது. இத்தனை நாளும் சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஜெயா கும்பலின் பாசிச அட்டூழியங்களுக்கு ஒத்தூதிக் கொண்டிருந்த காங்கிரசுக் கயவாளிகள், இப்போது கூட்டணி முறிந்ததும் ஜனநாயக சதிராட்டம் போடுவது நல்ல வேடிக்கை!

தாமே பீற்றிக்கொள்வது போல சட்டமன்ற - நாடாளுமன்ற ஜனநாயகத்தை புனிதமாகக் கருதி ஓட்டுக்கட்சிகள் ஒருபோதும் மதித்து நடந்தது கிடையாது. தமது அரசியல் ஆதாயத்துக்காக தேவையானபோது அவரவர் போடும் ஓலம்தான் இது. கவர்னர் தலையிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோருவதும்கூட பித்தலாட்டமானது. ஏனெனில் சட்டமன்ற ஜனநாயகத்தில் கவர்னர் தலையிடக் கூடாது என்று மரபுகளைக் காட்டி முன்பு ஒப்பாரி வைத்ததும் இதே கட்சிகள்தான். அதைவிட சட்டமன்றத்தைப் போலவே கவர்னர், குடியரசுத் தலைவர் உள்ளிட்ட அதிகாரவர்க்க அமைப்பே அரசியல் சுயநலன்களில் மூழ்கி சீரழிந்து கிடக்கிறது. அடி முதல் நுனிவரை புரையோடிப் போய்விட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்பு முறையின்மீது நம்பிக்கை வைத்து, ஓட்டுக் கட்சிகளின் மாய்மாலங்களைக் கண்டு உழைக்கும் மக்கள் இனிமேலும் ஏமாற முடியாது. சட்டமன்றத்துக்கு வெளியே சக்திவாய்ந்த போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லாமல் பாசிச ஜெயா கும்பலை வீழ்த்திடவும் முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# போலீஸ் சதிராட்டமும் வீரப்பனின் வெறியாட்டமும்

*மீண்டும் மீண்டும் தேடுதல் வேட்டைக்கு வருவோரையே தீர்த்துக்கட்டி தன் மேலாண்மையை நிரூபித்துள்ளது சந்தனக் கடத்தல் வீரப்பன் கும்பல். பலிகொடுத்து வரும் போலீசும் காங்கிரஸ் - அ.தி.மு.க. மாநில அரசுகளும் வக்கின்றி புதிய வேகத்துடன் பகுதி மக்கள்மீது தமது கூரத்தனத்தைக் காட்டுகின்றன.*

கடந்த ஏப்ரல் 9 அன்று சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கச் சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் துப்புக் கொடுப்பவர்கள் என்று 22 பேர் புதைகுண்டுகளுக்கு பலியாயினர். அதிரடிப் படைக்கு தலைமை வகித்த எஸ்.பி. கோபாகிருஷ்ணன் உட்பட 13 பேர் படுகாய முற்றனர். இச்சம்பவம் கர்னாடகம், தமிழகம் ஆகிய இரு மாநில அரசுகளின் அதிகார வர்க்கத்தை கதிகலங்க வைத்துள்ளது. தமிழகத்தின் சிறிபால், தேவாரம் உட்பட இரு மாநிலங்களின் போலீஸ் டைரக்டர் ஜெனரல்கள் 5 பேரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். புதை குண்டுகளின் அதிர்வு போயஸ் தோட்டத்தையும்கூட உலுப்பி விட்டது. தமது போலீஸ் விசுவாசத்தைக் காட்டிட வாரிச் சுருட்டிக் கொண்டு ஹெலிகாப்டரில் சேலத்திற்கு பறந்தார் ஜெயலலிதா. பிணங்களுக்கு மலர் வளையம்வைத்து, இறந்தவர்களின் குடும்பங்களின் ஒப்பாரியில் தலை காட்டிவிட்டு, காயமுற்று சிகிச்சை பெறுபவர்களுக்கு ஆறுதல் கூறி, தேடுதல் வேட்டையில் இறங்கியதற்கு பாராட்டு தெரிவித்து, வீரப்பனுக்கு முடிவு கட்ட சூளுரைத்து - அனைத்தையும் ஒன்றரை மணி நேரத்திற்குள் முடித்துக் கொண்டு மீண்டும் சென்னைக்கு பறந்தார் தமிழக முதல்வர்.

ஆடிப்போய்விட்ட போலீஸ், வனத்துறையினரைக் கொண்ட அதிரடிப்படைக்கு தார்மீக பலத்தை ஊட்டவும், மக்களிடையே நம்பிக்கையற்று போனதை சரிப்படுத்தவும், பெருந் திட்டங்களை தீட்டுவது போன்று ஜெயா கர்னாடகா முதல்வரை அழைத்தார். அவரும் நாடகத்தின் பாத்திரத்தை உணர்ந்து, உடன் அழைப்பை ஏற்று சென்னை வந்தார். இதுவரை இல்லாத அளவு மிக நுணுக்கமான புதிய உத்திகளை வகுத்தது போன்று இரு முதல்வர்களும் பேட்டி அளித்தனர். உயர் அதிகாரிகள் கூட்டங்களும் நடைபெற்றன.

இந்த ஏப்ரல் 9 சம்பவம் இதுகாறும் அரசு சந்தித்த மோதல்களிலேயே அதிக பட்ச இழப்பை ஏற்படுத்திக் கொண்ட ஒன்றாகும். சிறப்பு அதிரடிப்படை ஏப்ரல் 7 முதலே தேடுதல் வேட்டையைத் தொடங்கியிருந்தது. போலீசுக்கு உளவு சொல்லும் ஒருவரைத் தேடிய வீரப்பன் கும்பல் அவர் கிடைக்காமற் போகவே அவரது மைத்துனரை அழைத்துச் சென்று கொன்றதும், ''முடிந்தால் காட்டுக்குள் வந்து பார்'' என்ற சவாலுடன் கிராமச் சந்தையில் தட்டி கட்டி வைத்திருந்ததும் அதிரடிப்படை சிலுவைக் கல் பகுதிக்கு தேடிச் செல்ல தூண்டுதல்களாக அமைந்தன. ஏப்ரல் 9-ல் இருவேன்களில் போலீசார், வனத்துறையினர், துப்புக் கொடுப்பவர்கள் புறப்பட்டு பாலாறு பாலத்தைக் கடந்து காட்டுக்குள் சென்றனர். சிறிது தூரத்திலேயே புதைதது வைத்த வெடிகுண்டுகள் வெடித்து முதல் வேன் 30 அடி உயரத்தில் தூக்கியெறியப்பட்டு, அதில் சென்ற பலரும் மாண்டனர். இந்த வேனுக்கு சற்று தொலைவாக பின் வந்து கொண்டிருந்த இரண்டாவது வேன் பாதிக்கப்படவில்லை. மீட்புப்பணியில் அவர்கள் இறங்கினர்.

கடந்த 9 ஆண்டுகளில் வனத்துறையும் அதன்பின் போலீசும், யானைத் தந்தங்களை கடத்தலிலிருந்து சந்தனக்கட்டை கடத்தலுக்கு மாறிய வீரப்பனைக் கட்டுப்படுத்தவோ, ஒழித்துக் கட்டவோ முடியவில்லை. இதுகாறும் பெரும் தோல்விகளையே தழுவியுள்ளனர். வீரப்பனைப் பிடிப்பதற்கென்றே தனிச்சிறப்பான அதிரடிப்படை அமைத்தும் 4 வருடங்களாகிவிட்டன. இன்னும் வீரப்பன் கையே ஓங்கி நின்று வருகிறது.

1984-86 -ல் 4 தனித்தனிச் சம்பவங்களில் 4 வனத்துறை அதிகாரிகள் வீரப்பனால் கொல்லப்பட்டனர். சத்திய மங்கலம் வனச் சரகத்தைச் சேர்ந்த அதிகாரி சிதம்பரம் ஜூலை 87-ல் வீரப்பனுடன் நடத்திய மோதலில் கொல்லப்பட்டார். இதனை அடுத்து 3 வனத்துறை அதிகாரிகள் ஒரு மோதலில் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்கள் 19 நாட்கள் கழித்தே கண்டுபிடிக்கப்பட்டன. 1989 ஆகஸ்டில் சந்தனக் கட்டையைக் கடத்திச் சென்ற லாரியைத் தடுத்ததற்காக வனக் காவலர் மோகனய்யா ஆதி பாலாரில் பட்டப்பகலில் கொல்லப்பட்டார்.

1990 ஜனவரியில் இரு மாநில அரசுகளின் போலீசாரைக் கொண்டு சிறப்பு அதிரடி நடவடிக்கை (ஆப்ரேசன் ஸ்நாப் என்ற பெயரில்) மேற்கொள்ளப்பட்டது. முதல் கட்டமாக இரு இடங்களில் முகாம்களும் 7 இடங்களில் போலீஸ் புறக்காவல் நிலையங்களும் அமைக்கப்பட்டன. அடுத்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் வீரப்பன் ஆட்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பிப்ரவரி 9, 10-ல் 65 டன்கள் சந்தனக் கட்டைகளை போலீசு கைப்பற்றியது. இதற்கு பழி வாங்குவது போன்று மூன்றே நாட்களில் தமிழக, கர்னாடக அரசு போக்குவரத்து பஸ்கள் தலா ஒன்று கொளுத்தப்பட்டன. கூட்டுறவு சங்க அலுவலகம், ஒரு வங்கி, ஊராட்சி மன்றம் ஆகியன சூறையாடப்பட்டன. ஏப்ரல் 9-ல் ஒகேனக்கல் அருகே, நடந்த மோதலில் 3 துணை ஆய்வாளர்கள், ஒரு காவலர் கொல்லப்பட்டனர். 5 காவலர்கள் படுகாயமடைந்தனர். அருகிலுள்ள மாதேஸ்வர மலையில் அடுத்த 10 நாளில் இன்னொரு துணை ஆய்வாளர் கொல்லப்பட்டார். மூன்றாம் கட்டமாக வீரப்பனின் உதவியாட்கள் என்று கூறி 100-க்கும் அதிகமானோரை கைதுசெய்து போலீஸ் விசாரித்

புதைக்குண்டுகளால் சின்னாபின்னமான போலீசு வேன்.



படிப்பகம்

www.padippakam.com

தது.

வீரப்பனை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த ''மென்மை வழி'' யொன்றை மேற்கொண்டார், கர்னாடக வனத்துறை அதிகாரி சீனிவாஸ். வீரப்பனின் சொந்த ஊரான கோபிநத்தத்தில் பள்ளி, ஆஸ்பத்திரி ஏற்படுத்தி பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். பலருக்கும் வேலை வாய்ப்புக்கு உதவினார். வீரப்பனின் உறவினர்கள் சுமார் 50 பேரை ஏற்றுக்கொள்ள வைத்து கணிசமான ஆயுதங்களை அதிரடிப் படை கைப்பற்றியது. வீரப்பனின் சொந்த குடும்பத்தினரையேகூட கடத்தல் தொழிலை கைவிடச் செய்தார் சீனிவாஸ். கிராம மக்களிடம் அவரது செல்வாக்கு ஓங்கிவந்தது. 1991 நவம்பரில் வீரப்பன் சரணடைவதாக தகவல் வந்ததின்பேரில் காட்டுக்குள் சென்றார் சீனிவாஸ். சற்றும் எதிர்பாராத வேலை சுட்டுக் கொல்லப்பட்டார். தன் வழியில் வருவோருக்கு இதுதான் கதி என்று எச்சரிப்பது போல், வக்கிரமாக சீனிவாசின் தலை துண்டிக்கப்பட்டு, குதறி வைக்கப்பட்ட முண்டம்தான் கிடந்தது.

1992 மே-இல் ராம்புரா காவல் நிலையத்தில் தூங்கிக் கொண்டிருந்த 5 காவலர்களைச் சுட்டுக் கொன்று 18 துப்பாக்கிகளை கைப்பற்றிச் சென்றது வீரப்பன் கும்பல்.

நயவஞ்சகமாக ஏமாற்றிப்பிடிக்க இரு போலீசார் கையாண்ட அதே உத்தியை வீரப்பனும் கடைபிடித்து அவர்களை தீர்த்து கட்டியுள்ளான். 1992 ஜூனில் சிறப்பு அதிரடிப்படைத் தலைவர் எஸ்.பி. அரிகிருஷ்ணா, உதவி ஆய்வாளர் ஷகீல் அகமது இருவரும் ஆயுத வியாபாரிகள் போல் நடித்து வீரப்பன் ஆட்கள் நால்வரைக் கொன்றனர். இரண்டே மாதங்களில் ஆகஸ்டில் தந்தங்கள் விற்க வீரப்பன் விரும்புவதாக துப்பு கிடைத்ததின் பேரில் வியாபாரிகள் போல வேடமணிந்து வந்த இவ்விருவரையும் வீரப்பன் கும்பல் சுட்டுக் கொன்றது. உடன்வந்த போலீசாரும் தொடர்ந்து வந்த வேனில் இருந்த போலீசாரும் சுட்டனர். சிலரைக் காயப்படுத்தினர். போலீஸ் தரப்பில் மேலும் நால்வர் இறந்தனர் எஞ்சியவர்கள் திரும்பி விட்டார்கள். இந்த தகவல் அறிந்தும் அருகில் ராம்புரா காவல் நிலையத்திலிருந்த போலீஸ் டி.ஜி.பி. சீனிவாசன் உடன் மோதலுக்கு செல்லாமல் திரும்பினார். அவ்வாறு சென்றிருந்தால் வீரப்பன் ஆட்களில் காயமடைந்த சிலரை யாவது பிடித்திருக்கலாம்.

வீரப்பனைப் பிடிப்பதில் உயர் மட்ட அதிகாரிகள் அக்கறை காட்டாமலும் போலீஸ் - வனத்துறையென்றும் கர்னாடகம் - தமிழகம் என்றும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பின்றி பழியை பிறர் மேல் சுமத்துவதுமாகவும் இருந்திருக்கின்றனர்.

வனத்துறை அதிகாரி சீனிவாஸ், வீரப்பன் பற்றி தொகுத்த விவரங்கள் அடங்கிய அறிக்கையை காவல் துறையோ, எஸ்.பி. அரிகிருஷ்ணாவோ பயன்படுத்தவில்லை என்று இதனை வைத்திருந்த பத்திரிக்கையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுகளில் வனத்துறை, போலீசார், துப்புகொடுப்பவர்கள் என்று 47 பேர் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்டுள்ளனர். போலீஸ் வீரப்பன் ஆட்கள் 10 பேரை கொன்றிருப்பதாக கூறுகிறது. இதுகூட நம்புவதற்கு இல்லை. ஏனெனில் 1992 ஜூனில் கொல்லப்பட்ட நால்வர் நெல்லூரைச் சேர்ந்த சாதாரண மக்கள்; கைது செய்யபட்டு போலீஸ் கொலை செய்து மோதல் என சித்தரித்தது என்பது அம்பலமானது. 1993 ஜனவரியில் கொல்லப்பட்ட ஒருவர் 'அந்தோணிராஜ்' என்றோ, வீரப்பன் நபர் என்றோ அடையாளம் காணப்படவில்லை என்பது அம்பலமானது.

இதுகாறும் வீரப்பன் 200-க்கும் மேலான யானைகளைக் கொன்றிருப்பதாகவும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் கடத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது. தமிழகத்தில் கோவை, பெரியார், சேலம், தர்மபுரி மாவட்டங்கள், கர்னாடகாவில் பெங்களூர், கூர்க், மைசூர் மாவட்டங்கள் என்ற, சுமார் 4000 சதுர கிலோ மீட்டர்



**வீரப்பனை, பிடிக்க சவடாலடித்து முகாமிட்டிருக்கும் 'சூரப்புலி' தேவாரமும், கோபலகிருஷ்ணனும்; சுயவிளம்பரப்படம்!**

பரப்பளவு கொண்ட பகுதிகளில் வீரப்பனின் செயல்பாடு காணப்படுகிறது. மலைகள், காடுகள், காவிரிநதி ஆகியன இயற்கை அரணாகவும் வீரப்பன் கும்பலுக்கு பெரும் சாதக அம்சமாகவும் இருக்கின்றன. காடுகள் முழுவதும் அலசுவது என்றால் வைக்கோல் போரில் ஊசி தேடுவது போலத்தான்.

இந்த பின்னணியில் போலீஸ் அதிகாரிகள், அமைச்சர்கள் விடுகின்ற சவால்கள் அனைத்தும் வெற்று சவடால்களாகவே இருந்துள்ளன. ''வீரப்பனை நாங்கள் நெருக்கி வளைத்துள்ளோம். அவனது கடைசி நாட்களை எண்ணிக் கொண்டுள்ளான்'' என்று கர்னாடகா மாநில ரிசர்வ் போலீஸ் ஐ.ஜி. ரெட்டி மே 1990-ல் ஒரு பேட்டியில் கூறினார். தமிழக டி.ஜி.பி துரை ஜூன் 90-ல், ''வீரப்பன் வெற்றிகொள்ள முடியாத கும்பல் என்ற கருத்து பழங்குடி மக்களிடமும் காட்டுப் பகுதிகளில் வாழும் பிறரிடம் முறியடிக்கப்பட்டுவிட்டது. வீரப்பனுடன் ஒரு சிலரே எஞ்சியுள்ளனர். தப்பிச்செல்லும் எல்லா வழிகளையும் அடைத்துவிட்டோம். விரைவில் உயிருடனோ பிணமாகவோ பிடிப்போம் அல்லது சரணடையச் செய்வோம்'' என்றார். 1993 ஜனவரியில் தமிழகத்தில் கூடுதல் டி.ஜி.பி. ஆக உள்ள ''சூரப்புலி'' தேவாரம், தனக்கு ஒரே மாத கால அவகாசம் அளித்தால் வீரப்பனை உயிருடனோ, பிணமாகவோ பிடிப்பேன் என்றார். இவர் 3 நாட்கள் எஸ்.பி. கோபால கிருஷ்ணனோடு காட்டில் சுற்றித் திரிந்து விட்டு வீணாகத் திரும்பினாலும் முதல்வர் ஜெயலலிதாவின் பாதுகாப்புக்கு பொறுப்பு ஏற்று இருப்பதால்தான் தேடுதலைத் தொடர முடியவில்லை என்றார். நக்சலைட்டுகளால் தாக்கப்பட்டுவிடுவோமோ என்று தனது பயணத்தை கோவை வழியாக காட்டிற்குள் மேற்கொண்டு இரகசியமாக திரும்பிவிட்டார். ''வீரப்பனை பிடிக்காமல் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை'' என்று எஸ்.பி. கோபால கிருஷ்ணன் சபதம் எடுத்து பேட்டி அளித்தார்.

இன்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, இத்தனை தோல்விகளுக்குப் பின்னரும், ''எந்த சவாலையும் துணிச்சலாக சமாளிக்க பெயர் எடுத்த தமிழக போலீசார் வீரப்பன் கும்பலின் அட்டகாசத்தை சமாளிப்பார்கள். விரைவில் இந்த அட்டூழியங்களுக்கு தமிழக அரசு முடிவு கட்டும் என மக்களுக்கு உறுதி அளிக்கிறேன்'' என்கிறார்.

வீரப்பன் கும்பல் ஏதோ காட்டில் அலைந்து கொண்டிருக்கும் அராஜக கும்பல் அல்ல. தந்தங்களையும் சந்தன கட்டைகளையும் காடுகளிலிருந்து எடுத்துத் தருவதைத்தான் வீரப்பனும் அவனது உதவியாளர்களும் செய்கின்றனர். கணிசமாக பணமும் பெறுகின்றனர். ஆனால் இவற்றை காடுகளிலிருந்து விற்பனை செய்யும் வரை கடத்திச் செல்ல கிரிமினல் மஃபியா கும்பல்களை ஏற்பாடுசெய்து, விற்பனை செய்து கொள்ளையின் பெரும் பங்கை எடுத்துச் செல்லும் வல்லூறுகள் தான் உண்மையில்

படிப்பகம்

www.padippakam.com

உச்ச பட்ச சமூக விரோதக் கும்பல் ஆகும். இது காடுகள் மற்றும் அருகாமையிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் கட்சித் தலைவர்கள், ஆதிக்க சக்திகள், அமைச்சர்கள், உயர்மட்ட அதிகாரிகள் அடங்கியதாகும். இவர்கள் வீரப்பன் கும்பலுக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்து கோடிக் கணக்கில் பணம் சுருட்டும் புரவலர்கள். வீரப்பனுக்கு ஆயுதங்கள் வழங்குவது மட்டுமின்றி, பயிற்சியுள்ள முன்னாள் இராணுவ வீரர்கள் - ரிசர்வ் படையினரின் உதவியைக்கூட பெற்றுத் தருகின்றனர். போலீஸ் - வனத்துறை - காவல்துறையின் திட்டங்களை அறிந்து கொள்வதற்கும் பதில் திட்டங்களை வகுப்பதற்கும் தக்க நபர்களை அத்துறைகளிலேயே உருவாக்கிவைத்துள்ளனர். போலீசின் தேடுதல் வேட்டை பற்றிய செய்திகள் வீரப்பனுக்கு போய்ச் சேருவதும், அவன் முன்கூட்டியே பதில் நடவடிக்கை எடுக்க காத்திருப்பதும் இந்த வலைப்பின்னலின் மேலாண்மையைக் காட்டுகிறது.

கிரிமினல்கள் அம்பலமாகும் வரை அவர்களை தமது நலனுக்கு ஒட்டுப் பொறுக்கிகள் பயன்படுத்துகின்றனர். அதே போல அதிகாரிகளும் உறவுவைத்து ஆதாயம் பெறுகின்றனர். அம்பலமான பின்னரோ உத்தம வேடங்கட்டி கிரிமினல்களை அடக்கி ஒடுக்குவதற்கு கூப்பாடு போடுகின்றனர். 1990-ம் ஆண்டு தொடக்கத்திலேயே எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருந்த முன்னாள் அமைச்சர் முத்துசாமி, மேட்டூர் முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ நாச்சிமுத்து, ஹன்னூர் முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ராஜகௌடா, பெண்ணாகரம் முன்னாள் போலி கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. நஞ்சப்பன் ஆகியோர் வீரப்பனுடன் கூட்டு வைத்திருந்ததாக பலராலும் பேசப்பட்டுவந்தது. காட்டிலாகா மந்திரியாக இருந்த ஆர்.எம்.வீரப்பன் — தினகரன் முதலாளி கே.பி.கந்தசாமி முதல் இன்றைய மந்திரி செங்கோட்டையன் வரை ஒருபுறம் காட்டு வளத்தை காப்பதாகப் பேசிக் கொண்டே பல்வேறு வகைகளில் தமது வளத்தை பெருக்கிக் கொண்டவர்கள்தான். இருமாநில சட்டமன்ற தேர்தல்களிலும் வீரப்பனின் ஆட்கள் காங்கிரஸ் - அ.தி.மு.க. கட்சிகளுக்காக பிரச்சாரம் செய்துள்ளனர். பெருந்தொகையும் செலவழித்துள்ளனர்.

வீரப்பனால் ஆதாயம் பெறும் இந்த ஆதிக்கக் கும்பலில் ஒருவரைக்கூட கர்னாடக மாநில காங்கிரஸ் அரசோ ஜெயலலிதா அரசோ விசாரிக்கவோ, கைது செய்யவோ இல்லை. அதேசமயம் விறகு வெட்டி, சுள்ளிகள் பொறுக்கி, ஆடு மாடுகள் மேய்த்து அற்ப சொற்ப வருவாயில் காலம்தள்ளும் கூலி ஏழை விவசாயிகளைத்தான் குண்டர்கள் தடுப்பு சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதிகள் தடுப்பு சட்டம் ஆகியவற்றின்கீழ் சிறையிலடைத்துள்ளது.

தமது கட்டுப்பாட்டிலிருந்து மீறிவிட்டதால், உயர் போலீசு அதிகாரிகளை மீண்டும் மீண்டும் தீர்த்துக்கட்டி, அரசு அதிகாரத்தின் யோக்கியதையையே கேள்விக் குறியாக்கி விட்டதால் வீரப்பனை ஒழித்து கட்ட வேண்டிய கட்டாயத்தில் ஜெயா அரசு உள்ளது.

தமது இலக்கான வீரப்பனைப் பிடிக்க அவனைபற்றி துப்பு சொல்ல உருவாக்கிய அனைவரையும் இழந்து விட்ட நிலையில் ''புதிய உத்திகள்'' வகுக்க உயர்மட்ட அதிகாரிகள் முனைந்துள்ளனர்.



**கிராமவாசிகள் பலர்; அதிகாரிகளால் எடுபிடி வேலைகளுக்காகவும், வழி காட்டுவதற்காகவும் பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இறந்தவர்களில் அவர்களும் அடங்கும். இக்கதறலுக்கு பதிலுரைப்பது யார்?**

கல்குவாரி முதலாளிகளிடம் வீரப்பன் பணம் வசூலிப்பதால் அத்தொழிலையே மூடச் செய்துள்ளனர். மரம் வெட்டுதல், ஏலம் தடை செய்யப்பட்டதுடன் எந்த போக்குவரத்தும் இல்லாமல் காடுகளின் வழக்கமான நுழைவு இடங்கள் மூடப்பட்டு விட்டன.

இவையெல்லாவற்றையும் விட மிகவும் கொடூரமான அடக்கு முறையும் துன்புறுத்தலும் வாழ்வுக்கே மிகுந்த நெருக்கடியும் அப்பகுதிவாழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுவதுதான் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மக்கள் மீது அனாவசியமான கெடுபிடிகள் ஏவவேண்டியிருக்கும் என்று கூறி இராணுவம் - எல்லை பாதுகாப்புப் படையை ஈடுபடுத்த வேண்டாம் என்கிறார் ஜெயலலிதா. ஆனால் சிறப்பு அதிரடிப் படையின் அணுகுமுறை மட்டும் என்ன வாழ்கிறது? 1990 ஜனவரியில் தொடங்கிய சிறப்பு அதிரடி நடவடிக்கையின் போது இன்றைய எஸ்.பி. அன்று மேற்கொண்ட நடவடிக்கைகளே எடுத்துக் காட்டும்.

100-க்கும் மேலானோர் வீரப்பனின் ஆட்கள் என பழிசுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்; சித்திரவதைக்கு ஆளாயினர்; சிலர் மரணமும் அடைந்தனர். போலீசுக்கு துப்பு தருபவர்கள் என சிலர் கட்டாயமாக போலீசுடனேயே வைத்துக் கொள்ளப்பட்டனர். ஆடுமாடு மேய்ப்பது, விறகு பொறுக்குவதுகூட சாத்தியமின்றி அல்லற்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாவது, மக்களை மிரட்டி லஞ்சம் பறிப்பது நடந்தன, அதிகாரிகள் சுகபோகத்துக்கு, விவசாயிகள் அற்ப சொற்ப உடைமைகளையும் பறி கொடுக்க வேண்டியிருந்தது.

இப்போது குண்டு வெடிப்பில் இறந்த 15 பேருமே, எஸ்.பி.யால் பலாத்காரமாக கொண்டு செல்லப்பட்டு, போலீசுக்கு துப்பு கொடுப்பவர்கள் என்று வைத்துக் கொள்ளப்பட்டவர்கள் என்று அவர்களது குடும்பத்தினர் கூறுகின்றனர். வீரப்பனைத் தேடிக் காட்டுக்குள் போகும் போது லக்கேஜ் சுமக்க, தண்ணீர் கொண்டுவர; சமைக்க இப்படிப்பட்ட வேலைகளுக்காக என இவர்களை போலீசார் பயன்படுத்தியுள்ளனர்.

இதேபோல போலீசுக்கு உதவுபவர்கள் என்று சிலர் வீரப்பன் கும்பலால் கடத்தப்பட்டு கொல்லப்படுகின்றனர்; மிரட்டப்படுகின்றனர். இருந்தாலும் வீரப்பன் கும்பலைவிட போலீஸ் - வனத்துறையின் அதிகாரவர்க்க மற்றும் லஞ்ச ஊழல்தான் மக்களுக்கு சகிக்க வொண்ணாததாக ஆகியுள்ளது.

எந்த மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு நலிந்து நாசமாக்கப்படுகின்றனரோ, அவர்கள்தான் சமூக விரோத கும்பல்களிடமிருந்தும் அதிகாரவர்க்க - ஆதிக்க சக்திகளிடமிருந்தும் காட்டு வளங்களைக் காத்திட முடியும். அதிகாரமும், பொறுப்பும், நல்வாழ்வுக்கான அடிப்படையும் அவர்களுக்கு ஏற்படாமல், எத்தகைய போலீஸ் நடவடிக்கைகளும் வீரப்பன்களை ஒழித்துக் கட்டப் போவதில்லை. ● உதயணன்.


படிப்பகம்

www.padippakam.com

# "புழுங்கித் தவிக்கும் எங்களுக்கு போராட்டம் ஒன்றே இனிய காற்று"

நாங்கள் வசதி கேட்டு போராட வில்லை; வாழ்க்கை நடத்தப் போராடுகி றோம். ''புழுங்கித் தவிக்கும் எங்களுக்கு போராட்டம் ஒன்றே இனிய காற்று'' என்ற முழக்கங்களுடன் பொது மக்களிடம் ஆத ரவு கேட்டு விநியோகிக்கப்பட்டது ஒரு பிர சுரம். தமிழ்நாடு அரசு வருவாய்த் துறை கடைநிலை கிராம ஊழியர்கள் சங்கம். தமது கோரிக்கைகளையும், போராட்டங்க ளையும் அறிவித்து மக்கள் மத்தியில் வந்து ஆதரவு கோரியது.

வெள்ளையர் ஆட்சிகாலம் முதல் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டவர்கள் தான், கடைநிலை கிராம ஊழியர்கள். வரு வாய்த்துறையில் கிராம நிர்வாக அலுவல ருக்கு கீழ் பணிபுரியும் பகுதிநேர ஊழியர்க ளாக வைத்து இரவு, பகல் பாராது உழைப் பைச் சுரண்டி வருகிறது, அரசு. தேர்தல் பணி, நிலவரி - நீர்வரி வசூல், ரயில்வே பாதுகாப்பு பணி, முதல்வர் - அமைச்சர்கள் வருகை தரும் போது பாதுகாத்தல், இலங்கை அகதிகளைப் பாதுகாத்தல் போன்ற மத்திய - மாநில அரசுகளுக்கு 24 மணி நேரமும் இவர்கள் உழைக்கிறார்கள். இதற்கு ஒரு மாற்று வேண்டுமெனக் கோரி மனுக்கள், ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள் அமைச்சர்களைக் கூட்டி மாநாடு, எல்லாம் நடத்தியும் எவ்வித பயனும் இல்லை. எனவே அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கக் கோரியும், முழு நேர ஊழியர்களாக்கக் கோரியும் கடந்த 5.2.93 அன்று சென்னை யில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடத்தி னார்கள். இக் கடைநிலை ஊழியர் சங்கத்தி லுள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப் பட்ட 32,600 தொழிலாளர்களும் தமிழ்நா டளவில் 11.2.93 முதல் வேலை நிறுத்தத் தில் ஈடுபடுவதாக இம்மாநாட்டில் முடிவெ டுத்தனர். இம்மாநாட்டின் மீது குண்டர் களை வைத்து சோடாபாட்டில் வீசி தாக்கி அச்சுறுத்தியது 'ஜெ' அரசு. ஆட்சியாளர்க ளின் வக்கிர - கொடூர புத்தியைப் பாருங் கள். தொழிலாளர்கள் - ஊழியர்களின் போராட்ட அறிவிப்பைக் கூட இவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஆனாலும் கடைநிலை கிராம ஊழியர் கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை 11.2.93 முதல் அமுல்படுத்தினர். தொடர்ந்து வட்டாட்சியர், மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் முன்பு மறியல், குடும்பத்து டன் மறியல், முற்றுகை எனப் போராடினர். ஒரு மாதம் கழித்து அதாவது 11.3.93 அன்றே அரசு பேச்சு வார்த்தைக்கு அழைத் தது. ஆனால், பேச்சு வார்த்தை மூலம் கால நீட்டிப்பு, இழுத்தடிப்பு செய்ய முனைந்த அரசின் தந்திரத்தைப் புரிந்து கொண்ட ஊழியர்கள் 15.3.93 முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம், குடும்பத்தி னருடன் மறியல் எனப் போராடினர். எல் லாப் போராட்டங்களிலும் போலீசு கைது செய்து விடுவித்து வந்தது. கோரிக்கைக ளைப் பரிசீலிக்காமல் அரசு அலட்சியப்ப டுத்தியது.

எனவே 19.3.93 அன்று உச்சக்கட்ட போராட்டமாக அரசு ஆணை 141-ஐ (பகுதி நேர ஊழியர் என வரையறுக்கும் ஆணை) கொளுத்தும் போராட்டம் என ஊழியர்கள் சங்கம் அறிவித்தது. 141-ஐ எரிக்க முயன்றபோது போலீசையும், தீ அணைப்பு ஊழியர்களையும் ஒன்று திரட்டி போட்டத்தை ஒடுக்கினார்கள். தண்ணீர் பீய்ச்சியடித்து தாக்கினார்கள். இப்படி மேலும் மேலும் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதால் ஊழியர்கள் சங்கம் அஞ்சி அடங்கிவிடவில்லை. முன்னிலும் வீச்சான போராட்டத்தை முன்னெடுப்போம் என இச்சங்கத்தின் மாநில போராட்டக் குழு அறிவித்துள்ளது.

### கோவை போலீசு மீண்டும் இந்து வெறியை நிரூபித்தது

கடந்த பிப்ரவரி மாதம் கோவையில் இந்து முன்னணி மாநாடு நடப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையென முன் னூறுக்கும் மேற்பட்டோரை நகர போலீசு, இந்து வெறியர்களின் விசுவாசிகளான கமி ஷனர் கணேசன், துணை கமிஷனர் இராதா கிருஷ்ணன் ஆகியோர் ஆணையின் பேரில் கைது செய்து சிறையிலடைத்தது. சிறையில் மக்கள் கலை இலக்கியக் கழகம், மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், தி.மு.க. ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த வர்கள் கைது செய்தவர்களை நிபந்தனை யின்றி விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர். எனினும் எல்லோரையும் இந்து முன்னணி மாநாட்டுக்குப் பின்னரே மெது வாக வெளியேவிட்டது போலீசு.



ஆனால் தி.மு.க. மாநாடு அண்மை யில் (மார்ச் 26, 27, 28) நடந்த பொழுது முன்னெச்சரிக்கை நடவடிக்கையென பார திய ஜனதா, இந்து முன்னணியைச் சேர்ந்த வர்களை கைது செய்யாததோடு (தி.மு.க. மாநாட்டு பந்தல் எரிந்து ஆர்.எஸ்.எஸ். காரன் ஒருவனை தி.மு.க. காரர்கள் பிடித் துக் கொடுத்த பின்னே வேறுவழியின்றி கைது செய்தது) மாநாட்டு திடலில் புத்தகம், கேசட் விற்றதற்காக ம.க.இ.க. வினர் இரு வரை கைது செய்தது, அதிகாரத்திமிரெ டுத்த போலீசு. மாநாட்டில் புலிகள் ஆதர வுப் பிரச்சாரம் செய்யப்பட்டதாகவும் பிர பாகரன் படம் கொண்டு செல்லப்பட்டதாக வும் கூறி விசாரணைக்கென 29-3-93 அன்று கைது செய்து சிங்காநல்லூர் போலீசு நிலையத்தில் வைத்திருந்தது. மேலதிகாரி கள் விசாரரணைக்கு வருவார்கள் என்றே இரண்டு நாட்கள் சட்ட விரோதமாக வைத் திருந்துவிட்டு 31-ந் தேதி இரவு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எடுத்ததெற்கெல் லாம் ம.க.இ.க. வினரை கைது செய்வது கோவை போலீசின் வாடிக்கையாக உள் ளது. குறிப்பாக ஆர்.எஸ்.எஸ்., இந்து முன் னணியின் அடிவருடியான கமிஷனர், துணை கமிஷனர் ஆகியோர் இதில் முனைப்பாக, பொதுக்கூட்ட அனுமதிகூட கொடுக்க மறுத்து வெறிபிடித்து செயல்படு கிறார்கள். இதை மக்களிடையே அம்பலப் படுத்தி வருகிற ம.க.இ.க. வினர், அதேசம யம் சட்டபூர்வ வழிகளிலும் போலீசுக்கு பதிலடி கொடுக்க முயன்று வருகின்றனர்.

### மசூதியை இடித்தவனை எதிர்த்ததற்காக சிறை!

மசூதியை இடித்து, மதவெறியை தூண்டி ரத்தம் குடித்து பேயாட்டம் போட்டு வரும் வானரக் கூட்டங்களுக்கு ஜெயா பட் டுக்கம்பளம் விரித்து வரவேற்பு கொடுத் தார். சென்னையில் ஏப். 2-ம் தேதி பாரதீய ஜனதாவின் பேரணி - பொதுக்கூட்டம் நடந்தது. இதைக் கண்டித்து வேதாரண்யம் புதிய ஜனநாயக வாசகர் வட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சுவரொட்டி ஒட்டி னார். இதற்காக அவரைக் கைது செய்து சட்ட விரோதமாக 3 நாள் கழித்து 5-ம் தேதி நீதிமன்றத்தின் முன் நிறுத்தியது போலீசு. 1967-ம் ஆண்டின் சட்ட விரோத நடவடிக் கைகள் (தடுப்பு) சட்டத்தின்கீழ் குற்றம் சுமத்தி திருச்சி சிறையிலடைக்கப்பட்டார், கிருஷ்ணமூர்த்தி. சட்டம் யாருக்காக உள் ளது பாருங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

## சாமியின் 'ஜெ' மீதான ஊழல் வழக்கு

# அவிழாத முடிச்சா?

**சாமி மனுமீது சேசன் நடவடிக்கை எடுப்பாரா? எடுக்க முடியுமா? என்ன நடவடிக்கை? போன்ற சர்சைகள் கிளம்பிவிட்டன.**

தமிழக கவர்னர், ஜெயலலிதா ஊழல் தொடர்பான சு.சாமியின் மனுவை தலைமை தேர்தல் கமிஷனருக்கு அனுப்பாத சர்ச்சை முடிவுக்கு வந்துவிட்டது. இப்பொழுது தலைமை தேர்தல் கமிஷனர் அம் மனுமீது நடவடிக்கை எடுப்பாரா? எடுக்க முடியுமா? எடுத்தால் என்ன நடவடிக்கை? போன்ற சர்ச்சைகள் கிளம்பி விட்டன.

1951, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 191 (e) 9A பிரிவின்படி ஒரு எம்.எல்.ஏ.வோ, எம்.பி.யோ அரசு துறையுடன் எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளக் கூடாது. ஆனால் ஜெயலலிதாவோ தனது 'ஜெயா பப்ளிகேஷன்ஸ்' நிறுவனம் மூலம் தமிழ்நாடு பாடநூல் சொசைட்டியுடன் 94 லட்சம் ரூபாய்க்கு பாடநூல் அச்சடித்து வழங்கும் ஒப்பந்தம் போட்டுள்ளார். எனவே சட்டப்படி ஜெயலலிதா எம்.எல்.ஏ. பதவி வகிக்கத் தகுதியற்றவர்; ஜெயலலிதாவின் எம்.எல்.ஏ. பதவியை ரத்து செய்ய வேண்டும் என்பதே சு.சாமியின் கோரிக்கை. 'சட்டப்படி' இதன்மீது விசாரணை நடத்தி முடிவு அளிக்கும் அதிகாரம் தேர்தல் கமிஷனுக்கே உண்டு. எனவே 'ஜெயா பப்ளிகேஷன்ஸ்' ஊழல் தொடர்பான மனுவை முறைப்படி கவர்னரிடம் ஒப்படைத்து தேர்தல் கமிஷனுக்குச் அனுப்பும்படி கோரியிருந்தார், சாமி. கடந்த 1992, அக்டோபர் 2-ந் தேதியே இம்மனு கொடுக்கப்பட்டும் கவர்னர் அதை தேர்தல் கமிஷனுக்கு அனுப்பாது காலம் தாழ்த்தியதால் இதற்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் சாமி வழக்கு ஒன்றை தொடுத்தார். உச்ச நீதி மன்றம் தமிழக கவர்னரிடம் விளக்கம் கேட்டு, பிறகு கடந்த 1993 மார்ச் 29-ந் தேதிக்குள் அனுப்பும்படி கெடு விதித்ததும் வேறு வழியின்றி கவர்னர் மனுவை தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைத்தார்.

மகிழ்ச்சி தாளாத சாமியோ, ஜெயலலிதா ஆட்சியைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியை அறிவிக்க வேண்டும் எனக் கோரி அறிக்கை விட்டார். வாழப்பாடியோ, ஜெயலலிதா தானாகவே ஆட்சியைக் கலைத்து விடுவார் எனக்கூறி பூரித்துப் போனார். தமிழக அரசியலிலும் ஜெயலலிதா ஆட்சி கலைந்துவிடும் என்கிற பீதியும் கிசுகிசுக்களும் அதிகமாகப் பரவியது. பீதியின் உச்சக் கட்டத்திலிருந்த ஜெயலலிதாவும் ஊழல் செய்ததற்கான ஒப்புதல் வாக்குமூலத்தோடு(?) சென்னை உயர்நீதி மன்றத்தில், தலைமை தேர்தல் அதிகாரி சேசன், சாமியின் மனுவை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு எதிராக வழக்கு தொடுத்து இடைக்காலத் தடையுத்தரவும் வாங்கினார். உயர் நீதிமன்றம் சேசனிடமும், சாமியிடமும் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டிற்கு விளக்கம் கோரியுள்ளது.

இந்நிலையில் சாமி மேலும் இரண்டு ஊழல் குற்றச்சாட்டுகளை வைத்து இரண்டு மனுக்களை கவர்னரிடம் கொடுத்தார்.

'ஜெயா பப்ளிகேஷன்ஸ்', தமிழக தொழிற் துறையிடம் 1992-93 வருடத்திற்கான பட்ஜெட்டுக்குரிய தொழிற் கொள்கை குறிப்புகளை அச்சிடுவதற்காக ஒப்பந்தம் போட்டுள்ளது என்பது சாமியின் இரண்டாவது குற்றச்சாட்டு மனு. ஜெயலலிதாவை பங்குதாரராகக் கொண்ட ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் அ.தி.மு.க.வின் கட்சிப் பத்திரிக்கையான 'நமது எம்.ஜி.ஆர்.' நிறுவனமும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையுடன் அரசுத்துறை விளம்பரத்திற்கான ஒப்பந்தம் போட்டு கேடாக பயன்படுத்தியுள்ளன. ஜெயா பப்ளிகேஷன்ஸ்-க்கு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையிடமிருந்து காசோலை அனுப்பப்பட்டுள்ளது என்பது சாமியின் மூன்றாவது குற்றச்சாட்டு மனு.

இதில் சாமியின் முதலாவது ஊழல் குற்றச்சாட்டை ஜெயலலிதாவே ஒப்புக்கொள்கிறார். தலைமை தேர்தல் அதிகாரி சேசன், சாமியின் மனுவை விசாரிப்பதற்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதா தொடுத்த வழக்கு மனுவில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ''புகார் மனுவில் கூறப்பட்ட சம்பவத்தில் (ஜெயா பப்ளிகேஷன்ஸ் ஒப்பந்தம் பெற்றது) எந்த சர்ச்சையும் இல்லை. ஏற்றுக் கொள்ளப்பட்டதே. அதனால் நான் எம்.எல்.ஏ. பதவி இழக்கிறேனா என்ற சட்டரீதியான கேள்விதான் இப்போது உள்ளது. இதை கோர்ட்டிலேயே முடிவு செய்யலாம்''.... ''பாடநூல் கழகம், சொசைட்டி சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. எனவே பாடநூல் கழகத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தம் அரசுடன் செய்த ஒப்பந்தமாகாது''. ''ஒரு புகார் மனுமீது தேர்தல் கமிஷன் பரிசீலிக்கும் போது குற்றம் சாட்டப்பட்டவர் அன்றைய தேதியில் அரசுடன் ஒப்பந்தம் வைத்திருந்தால் மட்டுமே அவரை பதவி வகிக்கத் தகுதியற்றவர் என அறிவிக்க முடியும். ஜெயா பப்ளிகேஷன்ஸ் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்துடன் ஏற்படுத்திய ஒப்பந்தம் கடந்த செப்டம்பர் 30-ம் தேதியுடன் முடிவடைந்தது. ஆனால் சாமி புகார் கொடுத்ததோ அக்டோபர் 2-ம் தேதி.''

> **ஊழல் குற்றச்சாட்டு மனு, வழக்கு போன்றவற்றையே பரபரப்பாக்கி, இதன் மூலமே தீர்வு காணலாம் என்ற பிரமையை உருவாக்க முனைகிறது சாமி கும்பல்.**

சகுனி சுப்ரமணியசாமி



ஒப்பந்தம் போட்டேன் - ஊழல் செய்தேன்; ஆனால் தண்டிக்க முடியாது - நடவடிக்கை எடுக்க முடியாது என்பதுதான் ஜெயலலிதாவின் வாதம். உப்புக்கும் உதவாத வாதங்களையும் சட்ட ஓட்டைகளையும் பயன்படுத்தி தப்பிக்க முனைகிறார் ஜெயலலிதா. எம்.எல்.ஏ. பதவி வகிப்பவர் அக்காலத்தில் அரசுடன் ஒப்பந்தம் போடக் கூடாது என்றால் ஒப்பந்தம் முடிந்தபின் சாமி கொடுத்த மனுவிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? பாடநூல் கழகம் கூட்டுறவு பதிவு சட்டப்படி சுயாட்சி கழகம் என்பது ஜெயாவின் வாதம். தேர்தலே இல்லாமல் அரசு நியமன அதிகாரிகள், ஊழியர்கள் அரசின் சம்பளங்கள், திட்டங்கள் என அரசின் ஒரு உறுப்பாகவே இருக்கையில் பாடநூல் கழகம், சுயாட்சி கழகம் என்பது ஏமாற்று. மேலும் சேசன் யு.என்.ஐ. எனும் இந்திய செய்தி நிறுவனத்தின் மீது தொடர்ந்துள்ள அவதூறு வழக்கு ஒன்றின் வக்கீலாக சாமியின் மனைவி ரோக்சேனா வழக்காடி வருகிறார். இதனால் சேசன், சாமிக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு வழங்குவார்; பாரபட்சமாகவே நடந்துகொள்வார்; எனவே சாமியின் மனுமீதான விசாரணையை சேசன் நடத்தக்கூடாது என்பது ஜெயலலிதாவின் இன்னொரு வாதம். சாதிக்காரன், சொந்தக்காரன் என்ற காரணத்தினாலும், காசு வாங்கிக் கொண்டும் வழங்கப்படும் அநீதியான தீர்ப்புகளால் எத்தனையோ அப்பாவிகள் பாதிக்கப்பட்டும் அவர்கள் தட்டிக்கேட்டாலும் நீதி கிடைக்காத போது ஜெயலலிதாவின் வழக்குக்கு மட்டும் உயர்நீதி மன்றம் காதுகொடுத்து கேட்டு சேசன் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.

சட்ட ஓட்டைகள், நீதிமன்ற கால நீட்டிப்புகள், சிவப்பு நாடா முறைகள் போன்றவற்றின் மூலம் தப்பிவிட முயற்சி செய்கிறார் ஜெயலலிதா. இதற்கு பார்ப்பன பத்திரிக்கைகள், 'சோ' முதலான சட்ட 'வல்லுனர்கள்', ஆளுங்கட்சி பிரமுகர்கள் எல்லோரும் சேர்ந்து அரும்பாடு படுகிறார்கள். தற்போது ஜெயலலிதா மீது சேசன் நடவடிக்கை எடுக்க முடியுமா, முடியாதா, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்றெல்லாம் சட்டம் - சம்பவ ஆதாரங்களை அடுக்கி சர்ச்சை கிளப்பும் மூலகர்த்தாக்கள் இக்கும்பல்தான். உண்மையில் ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்கிற

படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையிலேயே கருத்தைப் பரப்புகிறார்கள். இதில் 'சோ' ஜெயலலிதாவிற்கு எதிர்மறையில் அணுகி வழிகாட்டிச் செல்கிறார்.

கருணாநிதியைக் காட்டிலும் ஜெயலலிதா ஊழல் பெருச்சாளி என்றும் இந்த வகையில் சாமியின் மனு முறையாக பரிசீலிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது தனது விருப்பம் என்றும் 'சோ' கூறுகிறார். ஜெயலலிதா சேசனுக்கு எதிரான உயர்நீதிமன்ற வழக்கையும் இடைக்கால தடையையும் 'சோ' கடிந்து கொள்கிறார். ஆனால் பார்ப்பனீய - பாசிச விசுவாசத்தோடு, கருணாநிதியின் மாற்றை விரும்பாததினால் ஜெயலலிதாவின் ஆட்சியே நீடிக்க வேண்டும் என்பதே 'சோ'வின் உள்ளார்ந்த கருத்து. இதற்கேற்ப நடுநிலைமை என்கிற தோரணையில் இரட்டை வேடம் போட்டு 'ஜெ'யின் ஆட்சி நீடிப்பதற்கான சட்ட - வழக்கு ஆதாரங்களை அடுக்கி விளக்குகிறார். சாமியின் வழக்கினால் ஜெயாவின் ஆட்சியே போய்விடும் என்று பரவியிருந்த கருத்தை உடைத்த பெருமையும் பீதியிலிருந்த ஜெயலலிதாவுக்கு நம்பிக்கையூட்டிய பெருமையும் 'சோ'வையேச் சாரும். சட்ட - வழக்கு ஆதாரங்களைக் காட்டி சாமியின் மனுமீதான நடவடிக்கை ஜெயலலிதாவின் எம்.எல்.ஏ. பதவி போவதாக மட்டுமே இருக்கும். எம்.எல்.ஏ. பதவிக்கு போட்டியிட முடியாமல் போகாது; மீண்டும் 6 மாதத்திற்குள் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆகிவிடலாம் என்று பேட்டியளித்தார் 'சோ' மேலும், எம்.எல்.ஏ. பதவி பறிப்பும் உடனடியாக நடக்காது என கால நீட்டிப்பு செய்வதற்குரிய வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தார். இன்றும் சேசன் விசாரிக்கக் கூடாது என உயர்நீதி மன்றம் சென்ற ஜெயாவை கண்டித்துவிட்டு மாறாக சேசன் மட்டும்தான் விசாரிக்க வேண்டும் என்றல்ல; வேறு நபர்களைக் கொண்ட தேர்தல் கமிஷன் விசாரிக்கும்படி கோரலாம் எனக் கூறி வழிகாட்டி நிற்கிறார். அதாவது ஜெயலலிதா பீதியில் - முட்டாள் தனத்தில் தாறுமாறாக செயல்படுவதை 'சோ'வால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; நிதானமாக - அறிவுப்பூர்வமாக செயல்பட்டு சமாளிக்கத் தெரியவில்லையே என்ற 'சோ'வின் ஏக்கம்தான் கண்டனங்களாக மாறுகின்றன.

இக்கும்பல், சட்டமன்றமா? நீதிமன்றமா? எது உயர் அதிகாரம் படைத்தது என்ற சர்ச்சையைப் போலவே உயர் அதிகாரம் படைத்தது, தேர்தல் கமிஷனா? நீதிமன்றமா? என்கிற சர்ச்சையையும் கிளப்பி வருகிறது. ஜெயலலிதா தேர்தல் கமிஷனை மதிக்காமல் நீதிமன்றத்திற்குப் போய் இடைக்காலத் தடை வாங்கியதும், தேர்தல் கமிஷன் எம்.எல்.ஏ. பதவி செல்லாது என தீர்ப்பளித்தாலும் அதற்கு எதிராக உச்ச நீதி மன்றம் செல்வேன் என்று ஜெயலலிதா அறிவித்ததும் இச்சர்ச்சைக்கு அடித்தளமாகியுள்ளது. உயர்நீதி மன்றத்தின் இடைக்காலத் தடையை தேர்தல் கமிஷன் மதிக்குமா என்ற கேள்வியையும் தேர்தல் கமிஷன் முடிவை மீறி ஜெயலலிதா உச்சநீதி மன்றம்




'ஜெ' விசுவாசி சோ.

செல்ல முடியுமா என்ற கேள்வியையும் கிளப்புகிறார்கள்.

மக்களை அடக்கி - ஒடுக்கி ஆள்வதற்கென்று சட்டமன்றம், பாராளுமன்றம், நீதிமன்றம், கவர்னர் - ஜனாதிபதி, தேர்தல் கமிஷன், அதிகார வர்க்கம் என்ற அமைப்பு முறைகளையும் விதிகளையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஆளும் கும்பல்களுக்கிடையிலான சுயநலன்களால் இப்படி அதிகார மோதல்கள் உருவாகி இந்த அமைப்பு முறையின் ஓட்டாண்டித் தன்மையை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. ஒரு சாதாரண நபர் தவறிழைத்து தண்டனை வழங்கும் போது மட்டும் இவ்வமைப்புகளுக்கிடையில் முரண்பாடுகள் வருவதில்லை; ஆனால் உயர் பதவியிலிருப்பவர்கள், அரசியல் முக்கிய புள்ளிகள் தவறிழைக்கும் போது மட்டும் இவ்வமைப்புகளுக்கிடையில் அதிகார மோதல்கள் வருகின்றனவே. ஏன்?

தாங்கள் உருவாக்கிய அமைப்பு - விதிமுறைகளையும் கடைபிடிக்காமல் காலில் போட்டு மிதிக்கிறார்கள் என்பது தான் எல்லா சம்பவங்களிலும் நடக்கிறது. இந்த அத்துமீறலை - ஒழுங்கீனத்தை மக்கள் உணரமுடியாத வண்ணம் இவர்கள் கிளப்பும் அதிகார மோதல் சர்ச்சை திசை திருப்பி விடுகிறது. இதே



சாமி கூட்டாளி சேசன்

ஜெயலலிதா முன்பு பத்திரிக்கை உரிமை மீறல் பிரச்சினையின் போது நீதிமன்றத்தை உதாசீனப்படுத்தினார். இன்று நீதிமன்றத்தை உயர்த்திப் பிடித்து தேர்தல் கமிஷனை உதாசீனப்படுத்துகிறார்.

'சோ' முதல் இக்கும்பலைச் சேர்ந்த எல்லோரும் இந்த அமைப்பு முறையின் கேடுகெட்ட, கையாலாகாத, ஓட்டாண்டித் தனத்தை தோலுரித்துக்காட்ட தயாரில்லை. குற்றவாளிகளை தப்புவிக்காமல் தண்டிப்பதற்குரிய சட்ட விதிமுறைகள் இவ்வமைப்பு முறைகளில் இல்லை என்பதை மூடிமறைக்கிறார்கள். போபார்ஸ் ஊழலில் ராஜீவ் காந்திக்கு என்ன தண்டனை கிடைத்தது? அல்லது அந்த ஊழல் வழக்குதான் என்ன ஆனது? நீதிமன்ற நிர்வாக இழுத்தடிப்புகள், சட்ட ஓட்டைகளுக்கிடையில் உருத்தெரியாமல் மறைந்து போனது. நேரு, இந்திரா காந்தி முதல் இங்குள்ள எம்.ஜி.ஆர்., கருணாநிதி வரையாகட்டும் எல்லோர் மீதான ஊழல் வழக்குக்கும் நேர்ந்த கதி இது தானே? அரசியல்வாதிகள் மட்டுமல்ல வருமானவரி கட்டாத சினிமா நடிகர்கள், தாழ்த்தப்பட்ட - கூலி விவசாயிகள் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தும் நிலப்பிரபுக்கள், கற்பழிப்பு கொலைக் குற்றம் புரியும் போலீசு - ராணுவ அதிகாரிகள், ஊழல் புரிந்த நீதிபதிகள், அரசு ரகசியங்களை கடத்தும் - அரசு பணத்தை கோடிக்கணக்கில் முறைகேடாக பங்குச் சந்தை சூதாட்டத்தில் வாரியிறைத்த அதிகாரிகள் எவரும் இந்த அமைப்பு முறையில் தண்டிக்கப் படவில்லை. இவர்கள் பாதுகாக்கவே படுகிறார்கள். இந்த அமைப்பு முறையின் கோரப் பற்களுக்கிடையில் சிக்கி தவிப்பது என்னவோ பாமர மக்கள்தான்!

எனவே ஜெயலலிதாவின் ஊழல் குற்றத்திற்கு **உரிய தண்டனை** கிடைக்கும் என்பது சந்தேகமே! எம்.எல்.ஏ. பதவி போனால் கூட மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுவிட ஜெயலலிதா இப்போதே தயாரிப்புகளை தொடங்கிவிட்டார். சாமியின் வழக்கு நெருக்கடி, காங்கிரசின் சட்டமன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள், மக்களின் அதிருப்தி - வெறுப்பு இவைகளுக்கு மத்தியிலும் எப்படியாவது ஆட்சியைக் காப்பாற்றிவிடத் துடிக்கிறார், ஜெயலலிதா.

இன்னொருபுறம் சாமி கும்பலோ, கவர்னரிடம் மனு கொடுப்பதிலும் ஜெயலலிதா மீது அவதூறு வழக்கு தொடுப்பதிலும் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை விலைபேசி - குதிரை வியாபாரம் நடத்தி ஆட்சியைக் கவிழ்ப்பதிலுமே குறியாய் இருக்கிறது. இதையே பரபரப்பாக ஆக்கி அரசியல் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். சட்டம், வழக்குகளின் மூலமாகவே காரியத்தை சாதித்துவிடலாம் என்ற பிரமையை உருவாக்குகிறார்கள்.

ஜெயாவின் ஊழல்களை - சுயரூபத்தை மக்களுக்கு உணர்த்த இக்கும்பல் மக்கள் மத்தியில் செல்வதில்லை. மாறாக இவர்களது 'அதிரடி' நடவடிக்கைகள், கிசுகிசுக்கள், சவடால்கள் மக்கள் மத்தியில் சென்று தவறான கருத்தை உருவாக்குகின்றன. அதைத் தடுக்க வேண்டும்.

● சுப்பு

www.padippakam.com




*● அரைக் காலனிய நாடாகிய இந்தியா மறுபடியும் காலனியாகும் அளவுக்கு ஏகாதிபத்தியப் பிடிக்குள் சென்று கொண்டிருக்கும் இந்த வேளையில், விவசாயிகள் மற்றும் வெகு மக்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு பெருகி வரும் இந்த நேரத்தில் ராமர் பட எரிப்பு, கருவறை நுழைவு போன்ற போராட்டங்கள், ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டங்களாக வளர்வதற்கான வாய்ப்பு உண்டா? அல்லது வெறும் கலாச்சாரப் போராட்டங்களாக நீங்கள் பார்க்கிறீர்களா?*

*- செல்வம், சென்னை.*

★ போலிக் கம்யூனிஸ்டுகள், போலிப் புரட்சியாளர்களிடையே கட்டிதட்டிப் போயிருக்கும் பொருளாதார வாதத்தை விலக்கி வைத்துவிட்டுப் பார்க்கவில்லை என்றால் ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவு போன்ற போராட்டங்களின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இந்தப் போராட்டங்களை நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரானவையாக வளர்ப்பதற்கான வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் இவை இயல்பிலேயே இந்திய நிலப்பிரபுத்துவத்தின் உயிர்நாடியான சாதிய சமூக அமைப்பிற்கு எதிரானதுதானே! இந்நாட்டின் சாதிய சமூக அமைப்பையும், இன்றைய இந்து மதவெறி பாசிசத்திற்கு எதிரான அரசியல் இயக்கத்தின் அவசியத்தை ஏற்கும் போதுதான் ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவுப் போராட்டங்கள் கலாச்சாரப் போராட்டங்கள் மட்டுமல்ல, பிரதானமாக சமூக, அரசியல் போராட்டங்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ நலன்களுக்கான அரசியல் அமைப்பாக இந்து மதவெறி பாசிசத்தை ஆளும் வர்க்கங்கள் தெரிவு செய்து கொண்டுள்ளன; நாடும் மக்களும் அப்பாசிசத் தாக்குதலை எதிர் கொண்டுள்ளார்கள். ''ஆயிரம் சாதிகள் இருந்தாலும் அனைவரும் இந்துக்களே; இந்துத்துவமே இந்திய தேசியம்; ராமனே அனைவருக்கும் கடவுள்; இந்திய தேசியத்தின் சின்னம் ராமன்'' என்கிற சித்தாந்தத்தோடு இந்து மதவெறி பாசிசம் பரப்பப்படுகிறது. ''ராமன் அனைத்து மக்களின் கடவுள் அல்ல, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, சூத்திர வழிவந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக பார்ப்பன சனாதன சாதிய - வருணாசிரம தர்மத்தை நிலைநாட்டவும், காக்கவும் போரிட்டதே ராமன் கதை'' ''எல்லோரும் இந்துக்கள் என்றால் பார்ப்பனன் தவிர ஏனையோர் கருவறைக்குள் நுழைய அனுமதியில்லையே'' என்கிற பிரச்சினைகளை எழுப்பி இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிராகப் போராடுவதன் மூலம் பரந்துபட்ட மக்களிடையே சமூக, அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுதான் ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவுப் போராட்டங்களின் நோக்கம். இவை மக்களின் இந்து மத உணர்வைப் புண்படுத்தும் என்று (பார்ப்பன சனாதன மதத்தை இந்து மதமென்று) வெட்கமின்றி ஆர்.எஸ்.எஸ். ஆதரவுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர் போலிக் கம்யூனிஸ்டுகளும் போலிப் புரட்சியாளர்களும்!

*● உழைக்கும் மக்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும் போது, இன்று நீங்கள் தி.க. (அன்றைய) -வைப்போல் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்துகிறீர்கள். இது தேவை தானா? இது எந்த வகையில் எல்லா சாதியையும் மதங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டமாகும்?*

*மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் உழைக்கும் மக்கள் அனைவருக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் உங்கள் ''அசுர கானம்'' ஒலிப்பேழையைக் (கேசட்டைக்) கேட்டால் இது ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இயக்கம் மட்டுமாகத் தெரிகிறது. உழைக்கும் மக்கள் என்றால் பள்ளன், பறையன் என்றழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமா? உங்களுக்கு மற்ற சாதிகளில் உள்ள உழைக்கும் மக்களின் ஆதரவு இன்றி புதிய ஜனநாயகப் புரட்சி செய்யப் போகிறீர்களா? இதன் மூலம் நீங்கள் சில பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாத மக்களிடமிருந்து தனிமைப்படப் போகிறீர்கள் என்று கருதுகிறேன்.*

*- N. சுந்தர், சாத்தூர்.*

*● இன்றைய கட்டத்தில் கோவில் நுழைவுப் போராட்டம் அவசியமா?*

*- R. கணேசன், ஆத்தூர்*

★ ''இந்துத்துவம் - சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட இந்திய தேசியம், இந்தியப் பண்பாடு'' என்கிற கோட்பாட்டை முறியடிப்பதுதான் ''அசுர கானம்'' ஒலிப்பேழைப் பாடல்களின் அடிப்படை. பார்ப்பன சனாதன சாதிய வருணாசிரம தரும சமூக அமைப்பின் மிகவும் அடிமட்டத்தில் தள்ளி ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை இந்த ''இந்திய தேசியத்தில் எப்படி இருக்கிறது என்பதை முன்னிறுத்துவதன் மூலம் ''இந்துவத்தின்'' பித்தலாட்டங்களைத் தீர்க்கமாகவும், தெளிவாகவும் படம் பிடித்துக் காட்டுவதுதான் ''அசுரகானம்'' ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவுப் போராட்டங்களின் அவசியத்திற்கான விளக்கம் இதற்கு முதல் கேள்விக்கான பதிலில் உள்ளது.

சில போலிக் கம்யூனிஸ்டுகளும், போலிப் புரட்சியாளர்களும் இந்தப் போராட்டங்கள், வர்க்கப் போராட்டப் பாதையிலிருந்து திசை திரும்பிப் போவதாகவும், இந்து மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும் புலம்புகின்றனர். அதே சமயம் சில திராவிட, தமிழினவாதக் குழுக்கள் இவ்வளவு காலமும் வறட்டு மார்க்சியம் பேசிக் கொண்டிருந்துவிட்டு இப்போதுதான் திருந்தி, நாம் சரியான அரசியலுக்கு (பார்ப்பன எதிர்ப்பு) திரும்பியிருப்பதாகவும் பெருமையோடு கேலி செய்கின்றன. ஆனால், உண்மையோ வேறானதாக உள்ளது. நமது அமைப்பு அதன் ஆரம்ப காலத்திலிருந்து பார்ப்பன வருணாசிரம சாதிய சமூக அமைப்பை எதிர்த்துப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்திருக்கிறது. இப்போது கணிசமான அளவு அமைப்புப் பலம் பெற்றிருப்பதோடு, இன்றைய அரசியல் தேவையை ஒட்டி நமது இந்து மதவெறி பாசிச எதிர்ப்பு செயல் தந்திர முழக்கத்துக்கு போராட்ட வடிவம் கொடுக்கும் வகையில் ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவு ஆகிய போராட்டங்களை நடத்துகிறோம். நமது அமைப்பு பார்ப்பனத் தலைமையிலானது என்று அவதூறு பேசும் போலிப் புரட்சியாளர்கள்தாம் இப்போது பார்ப்பன சனாதன மத ஆதரவு பிரசுரங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணக் காலங்களில் சம்பந்தமில்லாமலேயே பார்ப்பன எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து வந்த திராவிட, தமிழின இயக்கங்களோ இன்று இந்து மதவெறி பாசிச அபாயத்தை எதிர்க்கத் துணிவின்றிக் கிடக்கின்ற அதே சமயம் நமது போராட்டங்களைக் கூட தமது கொள்கைக்கு மாறியதன் விளைவு என்று பீற்றிக் கொள்கிறார்கள்.

புதிய ஜனநாயகப் புரட்சிக்கான உந்து சக்திகளில் தலைமை சக்தி பாட்டாளி வர்க்கம்; பிரதான, அடிப்படை சக்தி விவசாயிகள், குறிப்பாக கூலி, ஏழை விவசாயிகள். புதிய ஜனநாயகப் புரட்சியின் சாராம்சம் விவசாயிகளின் விவசாயப் புரட்சியும், தொழிலாளர்கள் - விவசாயிகள் கூட்டை அச்சாக கொண்டதும் ஆகும். மற்ற பிற சாதிகளிலும் உழைக்கும் மக்கள் இருப்பினும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சேவை சாதிகளை உள்ளடக்கிய ''சூத்திர'' மக்கள் தாம் மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களைக் கொண்ட பிரிவு. இந்த மக்களைத் தட்டியெழுப்பி அணி திரட்டாத வரை புரட்சி என்பது வெறும் வாய்ச் சவடாலாகவே இருக்கும். பிரதானமாக இந்தப் பிரிவு மக்களை அணி திரட்டுவதால், ஒருவேளை பிற சாதி, குறிப்பாக மேல் சாதி உழைக்கும் மக்களிடம் இருந்து தனிமைப்பட நேரிடுமானால் அது அவர்கள் கூலிக்காரர்களேயானாலும் தாம் சமூக ரீதியில் உயர்ந்தவர்கள் என்கிற ''அதிகார'' உணர்வின் விளைவாகவே இருக்க முடியும். இத்தகைய ''அதிகார'' உணர்வு இருக்கும் வரை பிறசாதி, குறிப்பாக மேல் சாதி உழைக்கும் மக்கள் விடுதலை பெறவே முடியாது. இவர்கள் நமது இயக்கத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இயக்கமாகக் கருதி விடுவார்களோ என்கிற அச்சம் தேவையில்லை. அதைவிட முக்கியமாக தாழ்த்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட, பழங்குடி மற்றும் ''சூத்திர'' மக்கள் இதைத் தமது இயக்கமாகக் கருதி அணிதிரள வேண்டும் என்பதே அக்கறையாக இருக்க வேண்டும். அதில்தான் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்கான உயிர்நாடியே அடங்கியிருக்கிறது.

● *நீங்கள் புரட்சி செய்து அதிகாரத்திற்கு வந்த பின்னர், கலெக்டருக்கு ஒரு சம்பளம், பியூனுக்கு ஒரு சம்பளம் என்றுதான் வகைப்படுத்துவீர்களா? அதேபோல் விவசாயத் தொழிலில் ஆணுக்கு ஒரு கூலி, பெண்ணுக்குக் குறைந்த கூலி என்றுதான் வழங்குவீர்களா? இப்படி வேறுபாடு இருக்குமானால் இதைச் சாதிப்பதற்கு ஒரு புரட்சி தேவையா?*

*- கர்ணன், விழுப்புரம்.*

★ அரசு அமைப்பு - நிர்வாகத்தில் ஈடுபடுவோர், உற்பத்தியில் ஈடுபடுவோர் ஆகிய இருவகையினரைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. கலெக்டர், பியூன் போன்றவர்களைக் கொண்ட தற்போதைய அரசு அமைப்பு, நிர்வாக நிறுவனங்களை அடித்து நொறுக்கித் தூக்கி எறிந்து விட்டு ஒரு புதிய அரசு ஒழுங்கமைப்பை நிறுவுவதுதான் புரட்சி ஆகும். ஆகவே புரட்சிக்குப் பின் கலெக்டர், பியூன் போன்ற அடிப்படையிலான அமைப்பும், நிர்வாகமும் இருக்காது. எல்லா மட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே, நிர்வாகத்தை நேரடியாக நடத்தும் அரசு அமைப்பே நிறுவப்படும். நியமனத்தின் மூலம் அனைத்து அதிகாரங்களையும் பெற்ற நிர்வாகிகளின் அமைப்பாக அரசு இருக்கக் கூடாது என்பதுதான் நமது திட்டம். இருந்தபோதும் மையத்திலிருந்து பல கிளைகளாக விரிவடையும் அரசு நிர்வாகத்தில் மேல்மட்டம் கீழ்மட்டம் என்று அதிகாரத்திலும், ஊதியத்திலும் வேறுபாடு நீடிக்கவே செய்யும். ஆனால் இப்போது இருப்பதைப் போலன்றி குறைந்த அளவே வேறுபாடு நிலவும்;

## ● கருவறை போராட்டம் ஏன்?
## ● நிலபிரபுத்துவம் ஒழிந்தால் சாதி - மதமும் ஒழியுமா?

அதேபோல தொழிலகங்களிலும், குறிப்பாக மூளை உழைப்புக்கும், உடல் உழைப்புக்கும் இடையில் ஊதிய வேறுபாடு இருக்கும். இவை நிர்வாகத்திறன், அறிவுத்திறன் இவ்வளவு ஆண்டுகளாக ஒரு சிலரிடம் குவிந்து கிடப்பதன் விளைவாகத் தவிர்க்க முடியாது. அதே சமயம் கீழ் நிலையில் உள்ளவர்களின் அடிப்படைத் தேவையைக் கருதி மிகக் குறைந்த விலையில், உணவு, உடை, இருப்பிடம் போன்றவை கிடைக்கும்படி செய்வோம். படிப்படியாக உழைப்புக்கேற்ற ஊதியம் என்பதில் இருந்து தேவைக்கேற்ற ஊதியம் என்பதாக மாற்றப்படும்; அதிகாரக் குவிப்பு, அதிகார முறைகேடு ஆகியவற்றுக்கு எதிராக புரட்சிகர இயக்கங்கள் (கலாச்சார புரட்சிகள்) நடத்தி இந்த வேறுபாடுகள் களையப்படும். ஆனால் ஆரம்பம் முதலே சமவேலைக்குச் சம ஊதியம் என்பதை அமுல்படுத்தி ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஊதிய வேறுபாட்டை அகற்ற முயலுவோம். அதிலும் பல நூறு ஆண்டுகளாக நிலவி வந்த உழைப்புப் பிரிவினை காரணமாக சில ''கடின'' வேலைகளை ஆண்களும், சில ''எளிய'' வேலைகளைப் பெண்களும் செய்வது உடனடியாகத் தவிர்க்க முடியாது என்பதால் அவர்களின் வருவாயிலும் வேறுபாடு நீடிக்கும். ஆனால் அதுவும் அனைத்துப் பணிகளிலும் பெண்களைப் பழக்கப் படுத்துவதன் மூலம் குறைக்கப்படும். திட்டமிட்டு இயந்திரமயமாக்குதல் புகுத்தப்படுவதால் இந்த வேறுபாடு நீண்ட காலம் நீடித்திருக்காது. அரசியல் அதிகார மாற்றத்திற்கு மட்டுமல்ல, அதன் பிறகும் இத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமானால் புரட்சிகள் தொடரவேண்டும்.

● *நிலப்பிரபுத்துவம் பிறந்தபோது பிறந்த சாதி வேறுபாடுகள், சாதிய சுரண்டல், சாதிய அடக்கு முறைகள் நிலப் பிரபுத்துவம் அழியும்போது அழிந்துவிடுமா? அதாவது முதலாளித்துவத்தில் சாதி அழிந்துவிடுமா? முதலாளித்துவத்தில் சாதி அழிந்துவிடும் என்றால் அப்போது இந்து மதம் உயிரோடு இருக்குமா செத்துவிடுமா? இந்துமதத்துக்கும் சாதிக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது? சாதி வர்க்கத் தன்மை இல்லாததா?*

*- இ. தனராசு மற்றும் நண்பர்கள், மாகி.*

★ நிலப்பிரபுத்துவ பண்ணை அடிமைச் சமுதாயம் தோன்றுவதற்கு முன்பே - அடிமைச் சமுதாய அமைப்பிலேயே இங்கு சாதிகள் அதாவது பிறப்பின் அடிப்படையில் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு உரிமைகளை வரையறுப்பது இந்தியாவில் நிலவி வந்திருக்கிறது. பண்ணை அடிமைச் சமுதாயம் பிறந்தபோது அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த பார்ப்பன சனாதன, வருணாசிரம சாதிய அமைப்பு முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகளைக் குறிக்கிறது. இதைத் தகர்க்காமல் முழுமையான முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஏற்பட முடியாது. முதலாளித்துவ உற்பத்தி - உழைப்புப் பிரிவினைக்கும், சந்தைப் பொருளாதாரத்துக்கும், அதற்குப் பொருத்தமான அரசியல், பண்பாட்டிற்கும் இந்தச் சாதிய அமைப்பு தடையாகவே இருக்கிறது. அதன் சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு அடிப்படையைத் தகர்ப்பதுதான் இந்தியாவில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியின் சாரமாக இருக்கிறது. ஆனால் அதன் பிறகும் பெரும் அளவில் பண்பாட்டுத் துறையில் புரட்சியைத் தொடரும்படி அதாவது எஞ்சியிருக்கும் சாதிய ஏற்றதாழ்வு உணர்வுகள், வழக்கங்களைத் தவிர்ப்பதற்கான போராட்டங்களை நடத்தும்படியான அவசியம் நீடிக்கும். இது புரட்சியில் வெற்றிபெற்ற மக்களுக்குள்ளேயே நடக்கும் போராட்டம்; உண்மையில் இதுவும் அரசியல் அதிகாரத்துக்கான போராட்டம். மேல் சாதிகளில் இருந்து வந்த உழைக்கும் மக்கள் கூட தமது ''சாதி ஆதிக்க உணர்வை'' முற்றாக் களையும் வரை இந்தப் புரட்சி நீடிக்கும்.

''இந்து மதம்'' என்று சொல்லப்படுவது பிற மதங்களைப் போல ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடவுள் நம்பிக்கை அடிப்படையிலானது அல்ல. உண்மையில் இந்த ''இந்து மத''த்தின் அடிப்படையே பார்ப்பன சனாதன, வருணாசிரம தர்ம, சாதியை சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு வாழ்க்கை அமைப்பைக் குறிப்பதாகும். இதைத் தகர்ப்பது என்பதே ''இந்து மத''த்தை ஒழிப்பதுதான். ''இந்து மதக் கடவுள்கள்'' எல்லாம் இந்த அமைப்பைக் காப்பதற்காகப் போராடியவர்களே. தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சூத்திர சாதி மக்கள் வழிபடும் கடவுள்கள் - மாரி, காளி, அய்யனார் - எல்லாம் கூட ''இந்து மத''க் கடவுள்களின் அவதாரம் என்கிற சூழ்ச்சி, புளுகு மூலம் அம்மக்களை இந்து மதத்தில் நம்பிக்கை கொள்ளும்படி செய்கின்றனர், பார்ப்பன, மேல்சாதி மதவெறியர்கள். ஆனால் மத வழிபாடு உரிமைகளை மறுத்துத் தமக்குத் தனிக் கோவில்களும், ஆகமவிதிகளும் வகுத்துக் கொண்டுள்ளனர் என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் அறிவர். ஆகவே புரட்சிக்குப் பிறகும் இம்மக்களிடையே கடவுள் நம்பிக்கை நீடித்திருந்தாலும் அது ''இந்து மத'' அடிப்படையிலானதாக இருக்காது. வர்க்கம் என்பது பிரதானமாகப் பொருளாதார உறவை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படும் மக்கள் தொகுப்பாகும். அது முக்கியமாக பிறப்பு அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. சாதி என்பது பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதோடு பொருளாதார அடிப்படையோடு சமூக, அரசியல், பண்பாட்டு உறவுகள் அடிப்படையில் பிரிக்கப்படும் மக்கள் தொகுப்பாக உள்ளது.

● *நீங்கள் என்னதான் புரட்சி செய்தாலும் வலிமை உள்ளவன் வைத்ததுதான் சட்டம் என்ற இயற்கை விதியை மாற்ற முடியுமா? மனித குலம் தோன்றியது முதல் இதுநாள் வரை நடந்த மாற்றங்கள் எதைக்காட்டுகிறது? புரட்சியைச் சாதித்தாலும் கடைசிவரை உயிருடன் இல்லையே ஏன்?*

*- கே.சம்பத், விழுப்புரம்.*

★ நாங்கள் இன்னமும் புரட்சியைச் சாதித்ததாகக் கூறவில்லை; அதற்கான பிரச்சார இயக்கம்தான் - தயாரிப்புதான் செய்து வருகிறோம். ''வலிமையுள்ளவன் வைத்ததுதான் சட்டம் என்ற விதியை'' ஏன் மாற்ற வேண்டும்? உழைக்கும் மக்கள் வலிமையுள்ளவர்களாக மாறவேண்டும் அப்போதுதான் புரட்சியைச் சாதித்து தமக்கான சட்டம் வைக்க முடியும். புரட்சியைச் சாதித்துவிட்டோம்; சட்டம் வைத்துவிட்டோம் என்று ஓய்ந்து விடுவதால்தான் அது நீடித்திருக்க முடிவதில்லை. உழைக்கும் மக்கள் வலிமையுள்ளவர்களாகவும், அவர்களது சட்டத்தின் ஆட்சி நீடிக்கவும் புரட்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையானால் உள்ளேயும் வெளியேயும் இருக்கும் புரட்சியின் எதிரிகள் வலிமை பெற்று எதிர்ப் புரட்சியைச் சாதித்து விடுவார்கள். அதுதான் சீனா, சோவியத் ஒன்றியம் போன்ற முன்னாள் சோசலிச நாடுகளில் நடந்தது.

படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசுடன் பா.ம.க. கூட்டு 'முற்போக்குகளுக்கு' வேட்டு

**பா.ம.க. காங்கிரசுடன் அல்லாமல் தி.மு.க.-வுடன் முதல் வாய்ப்பாகக் கூட்டு வைக்க முனைந்ததும், ஓட்டு - செல்வாக்கு - வெற்றியைக் கருதியே! மற்றபடி கொள்கை, கத்தரிக்காய் என்பதெல்லாம் அணிகளையும் மக்களையும் ஏய்க்கத்தான்.**

"புலிகளை ஆதரிப்போம்; தன்னுரிமை கேட்போம்; பா.ம.க-வை தடை செய்து பார்க்கட்டும்; ஒரு கை பார்த்து விடுகிறோம்'' என்று சவடாலடித்த ராமதாசு, இன்று ''புலிகளின் எல்லா நடவடிக்கைகளையும் அதாவது புலிகளை முழுமையாக ஆதரிக்கவில்லை; அவர்களின் விடுதலைக்கான சட்ட பூர்வமான போராட்டங்களைத் தான் ஆதரிக்கிறோம்'' என்று பேட்டியளித்துள்ளார். அதாவது புலிகளை ஆதரிக்கவில்லை என்பதை மழுப்பலாக சுற்றி வளைத்துச் சொல்கிறார்.

அ.தி.மு.க. - காங்கிரசு மற்றும் தி.மு.க. விற்கு மாற்றாக பா.ம.க. மூன்றாவது அணி என்றும் கொள்கையற்ற - சந்தர்ப்பவாத - பிழைப்புவாத கட்சிகளால் வெறுப்புற்ற மக்களுக்கு மாற்றான ஒரு கொள்கைப் பூர்வமான கட்சி பா.ம.க. என்றும் தம்பட்டம் அடித்தார்கள். தனி ஈழத்தை ஆதரித்தும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தும் ஒரு மொழிக் கொள்கையென அறிவித்தும், மண்டல் கமிஷன் - காவிரிநீர்ப் பிரச்சினை முஸ்லீம்கள் மீதான இந்து வெறியர்களின் தாக்குதல் போன்றவற்றில் 'தடாலடி' முடிவுகள் எடுத்தும், தாழ்த்தப்பட்டவரையே முதல்வராக சுழற்சி முறையில் தீர்மானிப்போம் என்றும் மக்கள் கமிட்டி, மக்கள் நீதி மன்றம், கலப்பு திருமணம் என்றெல்லாம் 'புரட்சிகர கொள்கை'கள் வகுத்தும் தாம் ஒரு கொள்கைப்பூர்வ - முற்போக்கு கட்சி எனக் காட்டிக் கொண்டது, பா.ம.க.

காங் - அ.தி.மு.க., தி.மு.க.வை வக்கிரமாக - கொச்சையாகவெல்லாம் திட்டி தனது மூன்றாவது அணியின் 'கொள்கை'யை நிலைநாட்டியது. இப்படி 'எச்சிலை மாமாக்கள்' என்று காங்கிரசுக் காரர்களையும், 'தவில் இனத் தலைவர்' என்று கருணாநிதியையும் திட்டிய பா.ம.க., இன்று தி.மு.க., காங்கிரசுடன் கூட்டுவைத்துக் கொள்ளத் துடிக்கிறது. ''தி.மு.க.வின் கொள்கைகளை எல்லாம் பா.ம.க. தான் தூக்கிப்பிடித்து முனைப்பாக செயல்படுத்தி வருகிறது. தற்போது வரும் பத்திரிக்கை கணிப்புகளை நம்பி கருணாநிதி பா.ம.க. ஆதரவு இல்லாமல் வெற்றி பெற்றுவிடலாம் என்று நினைத்து பா.ம.க வை ஒதுக்கினால், அவராகவே பா.ம.க. வை காங்கிரசுடன் கூட்டணி வைத்துக் கொள்ள தள்ளி விட்டார் என்பதுதான் அர்த்தம்'' ''ஊழலில் திராவிடக் கட்சிகளைவிட காங்கிரசு கட்சி தேவலாம்'' என்று கூறியுள்ளார் ராமதாசு. இப்படி முதல் வாய்ப்பாக தி.மு.க. வுடனும் அடுத்த வாய்ப்பாக காங்கிரசுடனும் கூட்டு வைத்துக் கொள்ள பா.ம.க. நிர்வாகக் குழு விரும்புவதாக கூறுகிறார் ராமதாசு.

தற்போது தி.மு.க., காங்கிரசுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்குரிய முடிவிற்கு பா.ம.க. கூறும் காரணம், இந்து மத வெறி அபாயம். அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் கூட்டு வைத்து பாசிச அபாயமாக தமிழகத்தில் வளர்ந்து நிற்பதை பிரதானமாகக் காட்டி தனது கூட்டணி முடிவுக்கு நியாயம் கற்பிக்க முனைகிறது. ஆனால் இந்து மத வெறி எதிர்ப்பு என்பது பா.ம.க. விற்கு ஒரு சாக்கே ஒழிய உண்மையில் சந்தர்ப்பவாதமும், பிழைப்புவாதமும்தான் இதற்கு அடிப்படையாகும்.

சென்ற தேர்தலில் தி.மு.க. வுடன், கூட்டணிக்கு நிபந்தனையாக தாழ்த்தப்பட்டவரை முதல்வராக்க வேண்டும் என்று வைத்தது பா.ம.க. ஆனால் இம்முறையோ ஓட்டு அடிப்படையில் சீட்டுக்களையே நிபந்தனையாக வைக்கிறது. இப்பொழுதுகூட காங்கிரசுடன் அல்லாமல் தி.மு.க. வுடன் முதல் வாய்ப்பாகக் கூட்டு வைக்க முனைவதும் ஓட்டு - செல்வாக்கு - வெற்றியைக் கருதியே மற்றபடி கொள்கை, கத்தரிக்காய் என்பதெல்லாம் அணிகளையும் மக்களையும் ஏமாற்றத்தான்.

காங்கிரசும் நயவஞ்சகமான நரி, ஜெயலலிதா, பா.ம.க.வை தன்னுரிமை கோரிக்கை - புலிகள் ஆதரவு தொடர்பாக தடைசெய்யக் கோரியபோது, பா.ம.க.வை தன்பக்கம் வளைத்துப் போடுவதற்காகவே மத்திய அரசு, ஜெயாவின் கோரிக்கையை நிராகரித்து தடை இல்லை என அறிவித்தது. காங்கிரசு விரித்த வலையில் பா.ம.க. வும் விழுந்து, கூட்டணிக்கு தளம் அமைத்துக் கொடுக்கும் வண்ணம் புலி ஆதரவு இல்லை என அறிவித்துள்ளது. மேலும் தானும் வாழப்பாடியும் வன்னியர்கள் என்ற அடிப்படையில் ஒன்றாகி வன்னிய சாதியினருக்கான அறக்கட்டளை ஒன்று தொடங்கியும், காங்கிரசு எம்.பி. கிருஷ்ணசாமியை சம்பந்தியாக்கிக் கொண்டும் ராமதாசு காங்கிரசோடு இன்றே ரகசிய உறவு வைத்திருக்கிறார்.



பா.ம.க.-வினரும் ராமதாசும் சென்ற தேர்தலின் போது எங்களது கொள்கை, லட்சியம், சொன்ன வாக்குகளை நாங்கள் தவற விட்டால் எங்களை முச்சந்தியில் நிறுத்தி, மக்கள் சவுக்கால் அடிக்கட்டும் என்று சவடால் விட்டார்கள். தற்போது கொள்கைப் பூர்வ மூன்றாவது அணி என்று கூறிக் கொண்டதையும் கைவிட்டு சீட்டுக்காக கூட்டு வைத்துக்கொள்ள முயலுவதற்கும், புலிகளின் ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டதற்கும் அதாவது இப்படி மற்ற ஓட்டுக் கட்சிகளைப் போலவே காரியவாத - பிழைப்புவாத 'பல்டி' அடித்ததற்கு சவுக்கடி வாங்க பா.ம.க. தலைமை தயாரா?

பா.ம.க. மற்றும் ராமதாசுவின் 'அந்தர் பல்டி' ஒன்றும் புதிதோ வியப்பிற்குரியதோ அல்ல. இப்படித்தான் செய்வார்கள் என்பதை ''புதிய ஜனநாயகம்'' அப்பொழுதே முன்னறிவித்தது. பா.ம.க.-வின் கொள்கைப்பூர்வ கூட்டணி - முற்போக்கு வேடத்தை திரைகிழித்து புதிய ஜனநாயகம், 16-31 மே '91 இதழிலேயே எழுதினோம். பா.ம.க., வன்னிய சாதிவெறி பின்னணி கொண்ட சந்தர்ப்பவாத - பிழைப்புவாதக் கூட்டணியே என்றும் ஏற்கனவே உள்ள ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், லஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டு பிழைப்புவாதிகளாகச் சீரழிந்து, பரந்துபட்ட மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதால் இருந்த வெற்றிடத்தை நிரப்ப பா.ம.க., கொள்கை - முற்போக்கு வேடம் போடவேண்டிய தேவையிருந்தது என்றும் தெளிவாகக் கூறினோம்.

இதேபோல் பா.ம.க. தன்னுரிமை முழக்கம், புலி ஆதரவு சவடால்கள் அடித்ததை அம்பலப்படுத்தி 'புதிய ஜனநாயகம்', 1-16 நவம். '92 இதழில் எழுதினோம். தன்னுரிமையோ தனிஈழமோ சட்டவாத போராட்ட முறைக்கு அப்பாற்பட்டது; சட்டவாதம்பேசி ஓட்டு பொறுக்கும் கட்சியாக இருக்கும் பா.ம.க.-வால் தன்னுரிமை கோரிக்கையிலோ, தனி ஈழ ஆதரவிலோ ஊன்றி நிற்க முடியாது என்று கூறினோம். மேலும் தமது அமைப்பிற்குள் ஜனநாயகம் வழங்காத; தனிநபர் துதி - சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்தும்; பதவி வெறியர்கள், சாதி, மத, இன, வெறியர்கள், பிழைப்புவாதிகள், இனத்துரோகிகள் இப்படி சந்தர்ப்பவாத - பிழைப்புவாத கும்பலின் கூடார



படிப்பகம்

www.padippakam.com

மாக உருவாகி நிற்கும் பாட்டாளி மக்கள் கட்சியால் ஜனநாயக கோரிக்கைகளுக் கான போராட்டத்தை எடுக்க முடியாது என் பதை சுட்டிக்காட்டினோம்.

இதைவிட மேலாக ஈழத்துரோகியும் காங்கிரசின், ராஜீவின் விசுவாசியுமான பண்ருட்டி ராமச்சந்திரனைகூட வைத்துக் கொண்டே ஈழ ஆதரவு தீர்மானம், காங்கி ரசு எதிர்ப்பு என்பது முழுக்க போலியானது என்றோம்.

இவையெல்லாம் இன்று உண்மை என்று நிரூபனமாகிவிட்டது. ஆனால் போலி கம்யூனிஸ்டு பெ.மணியரசன், முன் னாள் மா-லெ புரட்சியாளர் புலவர் கலிய பெருமாள், தமிழர் தேசிய இயக்கத்தின் ப.நெடுமாறன், தனித்தமிழ் இயக்க பெருஞ் சித்திரனார், சாலை, இளந்திரையன், பொழி லன், தியாகு, சுப.வீரபாண்டியன், பிரபஞ் சன், பா.கல்யாணி முதலான குட்டி முதலா ளித்துவ அறிவு ஜீவிகள், பேராசியர் குழுக் கள், 'புதிய இடதுகள்' சமரன் மற்றும் முன் னோடி குழுவினர் அனைவரும் பா.ம. க.வை கழுதையல்ல குதிரைதான் என்று கூறி முதுகில் ஏறியும், வாலைப் பிடித்துக் கொண்டும் சவாரி செய்தார்கள். பா.ம.க. விற்கு முற்போக்கு சாயம்பூசி அழகு பார்த் தார்கள். ராமதாசை இலட்சியவாதியாக வும் புரட்சிக்காரராகவும் சித்தரித்து புகழ்ந்து புளகாங்கிதம் அடைந்தார்கள். இன்று ராமதாசின் 'பல்டியால்' இவர்களும் சேர்ந்து குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக பேசித் திரிகிறார் கள்.

நாங்கள் ஆண்ட பரம்பரை - சத்திரிய வம்சம் என்று உரிமைப் பாராட்டும் ராம தாசு, தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்க ளுக்காக வடிக்கும் கண்ணீர் எல்லாம் ஓட் டுப் பொறுக்குவதற்குத்தான் என்றோம். ஆனால் மேற்படி பேராசிரியர்களும், குழுக்களும் ''இல்லை; இல்லை அவர் ஒடுக்கப்பட்டவர்களின் தன்னிகரற்ற தலை வர்'' எனத் தூக்கிப் பிடித்தார்கள். பிரபஞ் சனோ, பெரியாரை ராமதாசு வடிவில் காணுவதாக புகழ்ந்து 'சொரிந்து' கொண் டார். இன்று அதே 'பெரியாரிடம்', இன் னொரு இந்து மதவெறிக் கட்சியான காங்கி ரசுடன் கூட்டு வைக்காதீர் என்று கெஞ்சுகி றார், பிரபஞ்சன்.

பெருஞ்சித்திரனார், சாலை, இளந்தி ரையன், ப.நெடுமாறன் முதலானோர் மேடையில் ராமாதாசிடம் லட்சியவாதி யாக கடைசிவரை நீடிக்க வேண்டும் என்று கெஞ்சினார்கள். அதாவது பா.ம.க. வின் தோற்றம் - பின்னணி, வர்க்கப் பின்னணி, நோக்கம், அமைப்பு முறை, செயல்முறை இவற்றையெல்லாம் கணக்கில் கொள்ளா மல் குருட்டுத்தனமாக ராமதாசு மீதே பிள் ளைத்தனமாக நம்பிக்கை வைத்து வேண்டு கோள் விடுத்தார்கள். ஆனால், கூட்டணி பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் ராமதா சுக்கே கொடுக்கப்படும் ராமதாசு எடுத்த முடிவு இப்படி இவர்களுக்கு உதைக்கிறது. மாஜி புரட்சியாளர்களும், 'புதிய இடது'க ளும் ராமதாசை வென்றெடுத்துவிடலாம் என்று அப்பாவித்தனமாக நம்பி அணுகி னார்கள். பாவம்! ராமதாசு 'டாட்டா' காட்டி விட்டார்.

ஏற்கனவே கருணாநிதி மீது நம் பிக்கை வைத்து அவர் எட்டி உதைத்த அனு பவம் கிடைத்தும் பயனில்லை. மீண்டும் அதே பாடத்தை ராமதாசிடமும் கற்றிருக்கி றார்கள். இவர்கள் எப்பொழுதும் யாராவது ஒரு பிரபல தலைவர்களின் தோளில் தொங் கியே அரசியல் நடத்த விரும்புகிறார்கள், சுயமாக மக்களிடம் சென்று தமது கருத்துக் களைப் பிரச்சாரம் செய்வதை காட்டிலும் பிறர் தோளில் தொங்குவது, எதற்கெடுத்தா லும் ஒரு கூட்டு சமைப்பது போன்றவற்றில் தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

காவிரி நீர்ப்பிரச்சினை, ஈராக் - அமெ ரிக்கா போர் பிரச்சினை, இட ஒதுக்கீடு பிரச் சினை, தனிஈழப் பிரச்சினை, ராஜீவ் படு கொலை - புலிகள் மற்றும் ஆதரவாளர்கள் மீதான அடக்குமுறைப் பிரச்சினை என்று எல்லாவற்றிற்கும் கூட்டம் - கூட்ட மைப்பு - மாநாடு - கருத்தரங்கம் போட்ட போதெல்லாம் மேற்படி நபர்கள் குழுக்க ளுக்கு பா.ம.க. வும் ராமதாசும் 'அவதாரப் புருஷர்களாகத்' திகழ்ந்தார்கள். ராமதாசுப் புகழ், பா.ம.க. செல்வாக்கு, கூடும் கூட்டத் தைக் கணக்கிட்டு கூட்டுவைத்து ஆதாய மும், பாதுகாப்பும் தேடிக்கொள்ள முனைந் தார்கள். பா.ம.க. வின் வன்னிய சாதி வெறி, முன்னுக்குப் பின் முரணான அறிக் கைகள் - செயல்பாடுகள், தனிநபர் புகழ் - சர்வாதிகாரம், ஓட்டு பொறுக்கி கட்சிகளின் கலாச்சாரம் - செயல்பாடுகள் அனைத்துட னும் சமரசம் செய்து கொண்டார்களே ஒழிய அவற்றைச் சாடி விமர்சிக்கவில்லை, கண்டிக்கவில்லை. தமது சிறு அணிகளின் திருப்திக்காக கடிந்து கொண்டார்கள் அவ் வளவுதான். புரட்சி பேசும் சமரன், முன் னோடி குழுவினரும் பா.ம.க. வுடன் கூட்டு நடவடிக்கை மேற்கொண்டும், சிறு சம்பவங் களில்கூட பா.ம.க. வை நம்பி உதவிக்குச் சென்றும் ஏமாந்துபோய் நிற்கிறார்கள்.

ஆனால், தமிழின ஆதரவு குழுக்கள், ஈழ ஆதரவு நபர்கள், பேராசிரியர் குழுக் கள், முன்னாள், இன்னாள் புரட்சியாளர்கள் எல்லோரையும் ராமதாசு தமது நீரோட்டத் தில் இழுத்து ஆதாயம் தேடப் பார்த்தார் என்பதே உண்மை. இதற்காகவே புரட்சிகர - ஜனநாயகம் - கொள்கை முழக்கங்கள், தீர்மானங்கள், பேச்சுக்கள் என சவடால டித்து வலம் வந்தார். இவர்களுக்குத் தீனிப் போடுவதற்காகவே 'நானும் ஒரு நக்சலைட் டுதான்' என கட்டுரைத் தொடர் 'எழுதி னார்'; 'தமிழினப் போராளி' என்று பெயர் மாற்றம் செய்தார்; ஈழ ஆதரவு, தன்னு ரிமை கோரிக்கை தீர்மானங்களில் தடை வந்தாலும் உறுதியக நிற்பவராகக் காட்டிக் கொண்டார்; குடிதாங்கி பிரச்சினைகளில் வன்னியர்களையும் பகைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்கள் பக்கம் நின்று 'ஸ்டண்ட்' அடித்தார். இன்று 'பல்டி' அடித் தாலும் அதை மழுப்பலாகவும், கொசுறளவு கொள்கையில் இன்னும் இருப்பதாகவும் காட்டும் வண்ணம் நயவஞ்சகமாகப் பேசு வதும் இதற்காகத்தான் ஒரு மொழிக் கொள்கை, போன்ற பிற சவடால்கள் அடிப் பதும் இந்த ரகமே!

இருந்தாலும் ராமதாசு விட்டு வைத்தி ருக்கும் 'கொசுறுகளான' புலிகளின் சட்ட பூர்வ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப் பது, இந்தி - இந்துவெறி எதிர்ப்பு, ஒரு மொழிக் கொள்கை போன்றவற்றை இன் னும் தூக்கிப் பிடித்துக் கொண்டு திரிகிறார் கள் மேற்படி நபர்களும் குழுக்களும். சிலர் ஓட்டுக் கட்சி அரசியல் பாதையில் இருக் கும் வரை பா.ம.க. இதுபோன்றுதான் நடந்து கொள்ளும் என்று தெரியும் என்றும் முதலாளித்துவ அரசியலில் இப்படி நடப் பது தவிர்க்க முடியாததுதான் என்று வக்கா லத்தும் வாங்குகிறார்கள். ''பா.ம.க. காங்கி ரஸ் கட்சியோடு கூட்டணி சேர வாய்ப் புண்டு என்று நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி வெளியிட்ட செய்தி, அக்கட்சியை நம்பும் நல்லவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. பா.ம.க. மற்றுமொரு தேர்தல் கட்சிதானா என்ற ஐயத்தை உண் டாக்கியிருக்கிறது'' என்று பெ.மணியரசன் எழுதுகிறார். இதைவிட வெட்கக்கேடு வேறு உண்டா? நாம் என்ன செய்ய முடி யும்? பட்டால்தான் புத்திவரும் என்பார் கள். இவர்களுக்கு அப்படியும் புத்தி வர வில்லையே?



பெ.மணியரசன் | பெருஞ்சித்திரனார் | ப.நெடுமாறன்

கடைசியாக வந்த செய்தி: கருணாநிதி கூட்டணியை புறக்கணித்ததால் இடைத் தேர்தலில் காங்கிரசை பா.ம.க. ஆதரிப்ப தாக ராமதாசு அறிவித்துள்ளார். ராமதாசை தூக்கிப்பிடித்த வகையறாக்கள் எல்லாம் இன்று முகத்தை எங்கு வைத்துக் கொள்ளப் போகிறார்கள்?

● ராசு

www.padippakam.com

### கோவில்பட்டி, புகளூர் படுகொலைகள்:

# அதிகார திமிரெடுத்த போலீசும் வாய்க்கொழுப்பெடுத்த ஜெயாவும்

இனி பாதிக்கப்பட்ட பிரிவினர் தங்கள் குறைகளைப் பொது மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல ஊர்வலம் நடத்துவதும், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும் போலீசின் அகராதியில் சட்ட விரோதமாகும்; அவர்களின் அதிகாரத்தை மீறும் செயலாகும். இதனைப் படிப்பவர்களுக்கு 'அப்படியா' என்ற சந்தேகம் எழலாம். ஆனால், இக்கூற்றின் உண்மைத் தன்மைக்கு ஆதாரங்களாகவுள்ளன கோவில்பட்டியில் விவசாயிகளின் மீது நடத்தப்பட்ட தடியடிப் பிரயோகமும், புகளூரில் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடும்.

கடந்த மார்ச் 29-ம் தேதி டாக்டர். சிவசாமி என்பவர் தலைமையில் இயங்கும் தமிழக விவசாய சங்கத்தினர் விவசாயிகளின் நலன்களைப் பாதிக்கும் ஆள்வோரின் கொள்கை முடிவுகளை எதிர்த்து ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டம் நடத்த காவல் துறையினரிடம் முன்கூட்டியே எழுத்து பூர்வமாக அனுமதி பெற்றுள்ளனர். திட்டமிட்டபடி ஊர்வலம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஊர்வலத்தை வழி மறித்த காவல் துறையினர் 'ஊர்வலத்தில் டிராக்டர்களுக்கு அனுமதியில்லை' எனத் தடுத்துள்ளனர். விவசாயி சங்கத் தலைவர்கள் ஊர்வலத்தில் டிராக்டர்களும் வர அனுமதி பெற்றுள்ளதை எடுத்துக்கூறி, ஊர்வலத்தை தொடர்ந்து நடத்துவோம் எனப் போராட ஆரம்பித்துள்ளனர். இதனையொட்டி இரு சாராருக்குமிடையே வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கையிலேயே 'உயர் அதிகாரிகளின் மீது ஊர்வலத்தினர் கல் வீசியெறிந்தனர்' எனும் பழமையான காரணத்தைக் கூறி தடியடிப் பிரயோகத்திற்கு உத்திரவிட்டுள்ளார் துணை ஆட்சித் தலைவர்.

காவல் துறையினர் தங்களின் குண்டாந்தடியில் மட்டுமல்லாது, பூட்ஸ்காலாலும், துப்பாக்கியில் பொருத்தப்பட்டுள்ள கத்தியாலும், துப்பாக்கியின் பின்புற மட்டையாலும் விவசாயிகளை மட்டுமல்லாது, தங்களது கையில் கிடைத்த அத்துணை பேரையும் தாக்கியுள்ளனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெண்களின் ஆடைகளைக் கிழித்து மானபங்கப்படுத்தியுள்ளனர். தாக்குதலில் இருந்து தப்பித்து அக்கம் பக்கத்து வீடுகளில் தஞ்சம் புகுந்தவர்களை வீடுகளில் புகுந்தே தாக்கியுள்ளனர். விவசாயிகளின் வாகனங்களைக் கைப்பற்றி அவற்றின் டீசல் டாங்குகளில் உப்பையும், சர்க்கரையையும் கொட்டியுள்ளனர்; 'டயர்'களைக் கத்தியினைக் கொண்டு கீறியும், வாகனங்களை ஒன்றையொன்று மோதவிட்டும் சேதப்படுத்தியுள்ளனர்.

இக்கொடூரத் தாக்குதலில் இறந்து போன இரு விவசாயிகளின் சடலங்களை பேருந்து நிலையத்திலும், தேசிய நெடுஞ்சாலையிலும் வீசியெறிந்துள்ளனர். பேருந்து நிலையத்தில் கிடந்த ஜோசப் ரெட்டியாரின் சடலத்தை அநாதைப் பிணமென்றும், மாரடைப்பால் இறந்து போனாரென்றும், தேசிய நெடுஞ்சாலையில் வீசியெறியப்பட்ட எத்திராஜ் நாயக்கர் விபத்தினால் இறுந்துவிட்டார் எனவும் பொதுமக்கள் மத்தியில் தானே முன்வந்து பொய் நாடகமாடியது.

எதிர்க் கட்சியினர்தான் சடலங்களின் மீதிருந்த காயங்களைக் கொண்டு 'இது போலீசாரின் மிருகத்தனமான தாக்குதலில் ஏற்பட்ட மரணம்; எனவே, சடலத்தை மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்' என இறந்தவர்களின் உறவினர்களிடமும் பொதுமக்களிடமும் எடுத்துக்கூறி போராட ஆரம்பித்தனர். நிலைமை 'பந்த்' என்ற அளவுக்கு முற்றிய பின்பே மருத்துவப் பரிசோதனைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. அதனுடன், 'போலீஸ் நிலையத்தைத் தாக்கவும், நகரத்தை நாசப்படுத்தவும் திட்டமிட்டிருந்தனர்' எனக்கூறி முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்து கொள்ளாது 30-க்கும் அதிகமான விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைதியாகவே நடந்து முடிந்திருக்க வேண்டிய ஊர்வலமிது. கொடுத்த அனுமதியை ஊர்வலம் தொடங்கிய பின் இடையில் தடுத்து நிறுத்தி மறுத்தது, கல்வீசியது யார் என விசாரிக்காமலேயே தடியடி நடத்த உத்தரவிட்டது, தாக்குதலில் கோரத்தை வேறுயாரும் நேரடியாக பார்த்துவிடக் கூடாது எனக் கருதி சாலையிலிருந்த மின் மாற்றியினை (டிரான்ஸ்பார்மர்) சுட்டுப் பொசுக்கியது இவையாவும் தன்னை யாரும் எதுவும் கேட்க முடியாது என்ற போலீசின் அதிகார திமிர்த்தனத்தைத்தான் காட்டுகின்றன.

கோவில்பட்டியில் விவசாயிகளின் மீது என்றால், புகளூரில் தொழிலாளி வர்க்கத்தினர் மீது காக்கி சட்டையினர் தங்களின் காட்டு தர்பாரை நடத்தியுள்ளனர். ஒரு புறம் தங்களை மீண்டும் வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென ஆலையின் முன் அமைதியான முறையில் போராட வந்த தொழிலாளர் குடும்பத்தினர்; மறுபுறம் ஆலையின் சுற்றுச் சுவருக்குப்பின் பதுங்கிக் கொண்டிருந்த ஆயுதபாணியான போலீசார். எவ்விதமான முன்னெச்சரிக்கையும் செய்யாது, தங்கள் வாழ்க்கைக்கு ஒரு வழி கோரிவந்த அந்த அப்பாவிகளின் மீது பதினைந்து நிமிடத்துக்கும் மேலாக துப்பாக்கிச் சூடு நடத்தி ஓர் இளம் வாலிபன் உட்பட மூன்று பேரை மண்ணில் சாய்த்துள்ளனர்.

புகளூர் சர்க்கரை ஆலையை தனது நிர்வாகத்தின் கீழ் கொணர்ந்த ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் அத்தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்த 700 நிரந்தரத் தொழிலாளர்களையும் எவ்வித முன்னறிவிப்பும் செய்யாது ஒரே நாளில் வேலையை விட்டு அனுப்பிவிட்டது. தொழிலாளர்கள் எதிர்த்துக் கேட்டபொழுது 'மீண்டும் உங்களையே நேர்முகத்தேர்வு மூலம் எடுத்துக் கொள்வோம் என மழுப்பியுள்ளது. நேர்முகத்தேர்வில் 190 பேரை மட்டும் தேர்வு செய்து கொண்டதுடன், மீதிப்பேருக்கு வேலை கிடையாது என்றும், உடனடியாகவே குடியிருப்புகளைக் காலி செய்ய வேண்டும் என்றும் அடாவடித்தனமாக அறிவித்துள்ளது.

மார்ச் இரண்டாவது வாரத்திலிருந்து தொடர் உண்ணாவிரதம் இருந்து வரும் தொழிலாளர்களைப் போலீசைத் தூண்டிவிட்டு கைது செய்வது, ர்வுடிகளைக் கொண்டு தாக்குவது என நிர்வாகம் எதிர்


இறந்தவர்களின் உறவினர்கள்; போலீசுக்கு அதிகாரத்திமிரை ஊட்டி வளர்த்த ஆட்சியாளர்களே இவர்களின் கண்ணீருக்கு பொறுப்பு.





படிப்பகம்

www.padippakam.com



துப்பாக்கி ரவைகளுக்கு இரையான விவசாயி எத்திராஜ் நாயக்கர் மற்றும் புகளூர் தொழிலாளர்கள்; போலீசின் மிருகவெறி.

டவடிக்கைகளை எடுத்துவந்துள்ளது. ஏப்ரல் 10 அன்று தொழிலாளர்கள் நடத்த திட்டமிட்டிருந்த ஊர்வலத்தையும் தடுத்துவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்ட நிர்வாகம் உயர் போலீசு அதிகாரிகளையும், நிர்வாக அதிகாரிகளையும் பணத்தைக் கொடுத்து சரிகட்டியுள்ளது.

ஊர்வலத்தினர் ஆலையினுள் நுழைவதைத் தடுத்துவிட்ட போலீசார் உள்ளே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு வெளியே என்ன நடை பெறுகிறது என்பது தெரியாத வண்ணம் நடவடிக்கைகளை நிர்வாகத்தினருடன் சேர்ந்து எடுத்துள்ளனர். தடியடிப் பிரயோகம் செய்வது, போலி தோட்டாக்களை கொண்டு சுடுவது என்பனவற்றையெல்லாம் செய்யாது எடுத்தவுடனேயே துப்பாக்கி சூடு நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்த பின்னும் சுமார் 3 மணி நேரம் கழித்தே குண்டு காயம்பட்டவர்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். 'தொழிலாளர்கள் போலீசாரைத் தாக்க ஆசிட் பல்பு, நாட்டு வெடிகுண்டு போன்றவற்றுடன் வந்ததால், துப்பாக்கி சூடு நடத்த வேண்டியிருந்தது' எனக் கரூர் டி.எஸ்.பி ஒரு பத்திரிக்கை நிருபருக்கு விளக்கமளித்த பொழுது, ' நாட்டு வெடிகுண்டுடன் வருபவன் குடும்பத்திடனா வருவான்' என நிருபர் வினவ அவர் பதிலேதும் கூறாமல் தொலைபேசியை வைத்துவிட்டாராம். சடலங்களைப் பெற மருத்துவமனைக்குச் சென்ற தொழிலாளர்கள் அங்கேயே மாவட்ட ஆட்சித் தலைவரை முற்றுகையிட்டுள்ளனர். அதன் பின் தான் அவர் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகள் தங்கள் குறைகளை எடுத்து வைக்க ஊர்வலம் செல்வதினாலோ, தொழிலாளர்கள் தங்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையேயான பிரச்சனையை தீர்ப்பதற்கு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதனாலோ போலீசாருக்கு எவ்விதப் பாதகமும் கிடையாது. விவசாயிகள் தங்களை எதிர்த்துப் பேசினர் என்ற காழ்ப்புணர்ச்சியும், முதலாளிகளிடம் தாங்கள் பெற்ற கையூட்டுக்காக தொடர்சியாக போராடும் தொழிலாளர்களுக்கு தாங்கள் யார் என்பதைக் காட்ட வேண்டும் என்ற அகம்பாவமும், வானளாவிய அதிகாரத்திமிரும் ஒன்று சேர தன்னிச்சையாக இக் கொலை பாதகச் செயல்களைப் புரிந்துள்ளனர். கீழ்மட்ட காவல்துறையினர்தான் இவை பொன்ற சம்பவங்கள் நடைபெறக் காரணம் என்பது கிடையாது. கோவில்பட்டி கொடூரத் தாக்குதலின் தளபதிகள் வட்ட காவல் துறை கண்காணிப்பாளரும், துணை ஆட்சித் தலைவருமாகும். புகளூரில் துப்பாக்கி சூடு நடந்த பொழுது கரூர் டி.எஸ்.பி.யும், தாசில்தாரும் ஆலையினுள்ளேதான் இருந்துள்ளார்கள்.

ஜெயா ஆட்சிக்கு வந்த பின்பு சாதாரண மக்களின் போராட்டங்களைக் கூட துப்பாக்கி சூடு நடத்திதான் ஒடுக்கி வருகிறது. அந்தளவிற்கு ஜெயாவின் ஆசீர்வாதம் இத்துறைக்குள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பாகக் கூட சட்டசபையில் எதிக்கட்சியினருக்கு அவர் பதிலளித்த விதத்தைக் கவனித்துப் பாருங்கள்.

கோவில்பட்டி சம்பவம் நடந்து முடிந்த மறுநாளே எதிர்க்கட்சியினர் இப்பிரச்னையை எழுப்ப, அவரால் அன்று பதிலளிக்க இயலவில்லை. அந்தளவிற்கு மெத்தனமாக இருந்துள்ளார். பின் ஏப்ரல் 1-ந் தேதியன்று நடந்த அசம்பாவிதத்திற்கு விவசாயிகளே காரணம் என தனது அடியாள் படைக்கு வக்காலத்து வாங்கியுள்ளார். புகளூர் சம்பவம் பற்றிய கவன ஈர்ப்பு விவாதத்தில் 'போலீசார் குறைந்த பட்ச அடக்கு முறையையே பயன்படுத்தியுள்ளனர்' எனக் கொம்பு சீவிவிட்டுள்ளார். எப்படியிருக்கிறது? மூன்று பேர் உயிரிழந்தது அவருக்கு குறைந்த பட்ச அடக்கு முறையாம்!

கோவில் பட்டி சம்பவத்தில் இறந்த ஒரு வருக்கு நஷ்ட ஈடு வழங்குவதாகவும், விவசாயிகளின் மேல் போடப்பட்டிருந்த வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று மட்டுமே அறிவித்தார், ஜெயா. வீரப்பன் வைத்த கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த போலீசுக்கு அஞ்சலி செலுத்த விமானத்தில் பறந்து சென்ற ஜெயா, இச் சம்பவங்கள் நடந்த திசை பக்கம் இந்நாள் வரை தலை வைத்துக் கூட படுக்கவில்லை. மேலும், இக்கொலைகளுக்கு காரணமான அதிகாரிகள் மீது எந்தவொரு நிர்வாக நடவடிக்கை கூட கிடையாது.

இச் சமூக அமைப்பைக் கட்டிக்காக்க மட்டுமல்லாது, தனது அரசியல் எதிரியினைப் பழி தீர்க்கவும் பயன்படும் கேந்திரமான துறையாக போலீசு துறை இருப்பதால், பாசிச ஜெயா மட்டுமின்றி, எந்தவொரு ஆட்சியாளரும் அதிகார போதை தலைக்கேறி கட்டவிழ்த்துவிடும் இவை போன்ற கொடூர செயல்களை நியாயப்படுத்தியே வருகின்றனர்.

அரசின் பொருளாதாரத் தாக்குதல்கள் ஒரு புறம்; அதன் காரணமாக வாழ்விழந்த உழைக்கும் மக்கள் தங்களின் அடிப்படை தேவைகளுக்காகப் போராடத் துணிந்தால், போலீசார் ஆள்வோரின் துணையுடன் திட்டமிட்டும் தானே தன்னிச்சையாகவும் அவர்களின் மீது கட்டவிழ்த்து விடும் அடக்குமுறைகள் மறுபுறம். நிலைமை கை மீறிப் போகும் பொழுது கண் துடைப்புக்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், தடியடிப்பிரயோகமும், துப்பாக்கிச் சூடும், கொட்டடிக் கொலைகளும் தொடர்கதையாகத்தான் இருந்து வருகின்றன. இவை உழைக்கும் மக்களுக்கு புகட்டும் பாடம் ஒன்றுதான்: 'சொல்லிக் கொள்ளப்படும்' இந்த ஜனநாயக ஆட்சிமுறை நிச்சயமாக உழைக்கும் மக்களுக்கு எதிரானது என்பது தான் அது.

★ ரஹீம்




**விவசாயிகள் தங்களை எதிர்த்துப் பேசினர் என்பதற்காகவும் முதலாளிகளிடம் தாங்கள் பெற்ற கையூட்டுக்காகவும் இவற்றோடு அகம்பாவமும் வானளாவிய அதிகாரத்திமிரும் ஒன்றுசேர தன்னிச்சையாக இக்கொலை பாதகச் செயல்களைப் புரிந்துள்ளது போலீசு.**

படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சாப் - அசாம் தரும் பாரிய படிப்பினைகள்

**கடந்த பத்தாண்டுகளாக இந்திய அரசியலில் முக்கிய சக்தியாக வளர்ந்த பஞ்சாப் - அசாம் போராட்டங்களின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இருந்து பாரிய படிப்பினைகள் பெறுவது புரட்சிகர இயக்கங்களின் கடமையாகும். ஏனெனில் இது இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் நடந்த விசேடமான தொரு விவகாரம் அல்ல. எல்லா நாடுகளிலும் புரட்சிகர இயக்கங்களின் கூடவே தோன்றி அவற்றைத் திசைதிருப்பிவிடும் மிகவும் ஆபத்தான அரசியல் சீரழிவுப் போக்காகும்.**

படுகொலைகளும் பயங்கரவாத நடவடிக்கைகளும் அன்றாட ஒழுங்கு முறையாகி இருந்த பஞ்சாபில் இப்போது நிலைமை மாறிவிட்டது; கடந்த பத்தாண்டுகளாக ஏறத்தாழ 20,000 உயிர்களைக் காவு கொண்டு பயங்கரவாதத்தால் நிலைகுலைந்து போன பஞ்சாபில் அமைதிக்கான புதிய அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது என்று 'தேசிய' பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன. கடந்த பிப்ரவரி 28-ம் தேதியன்று பிந்தரன்வாலே காலிஸ்தான் புலிப்படையின் தலைவனாகிய குர்பச்சன் சிங் மனோசஹால் சுட்டுக் கொல்லப்பட்டதும் சீக்கிய பயங்கரவாதத்துக்கு கடைசி அத்தியாயம் எழுதப்பட்டு விட்டதாக போலீசாரும் ஆட்சியாளர்களும் மார்தட்டுகிறார்கள்.

### பயபீதியில் பாசிச கும்பல்

பஞ்சாப் - கடந்த பத்தாண்டுகளாக இந்திய அரசியலில் அதிமுக்கிய பங்கு வகித்த பிரச்சினை. பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலையும், பிற ஆளும் வர்க்க அரசியல் கட்சித் தலைவர்களையும், அரசு பயங்கரவாதிகளையும் தீராது திகிலூட்டிய பிரச்சினை, சீக்கிய பயங்கர வாதிகளின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்ள ஐ.டி.வி.பி., என்.எஸ்.ஜி., எஸ்.பி.ஜி., எஸ்.எப்.எப். எஸ்.பி., ஏ.ஆர்.சி. - இப்படி புதிது புதிதாக காவற் படைகள், உளவுப் படைகள் அமைக்கப்பட்டன. அவற்றிலும் நம்பிக்கையில்லாமல் அடுத்தடுத்து மாற்றங்களைச் செய்தனர். பிரதமர், 'குடியரசு'-த் தலைவர், துணைத் தலைவர், இராணுவத் தளபதிகள் போன்ற மிக முக்கிய புள்ளிகள் ஒன்றாகக் கூடுவதே ரத்து செய்யப்பட்டது. பொது நிகழ்ச்சிகளில் அவசியம் கருதிப் பங்கேற்றாலும், குண்டு துளைக்காத கண்ணாடி மேடையில் பலத்த பாதுகாப்போடுதான் அவர்களால் பேசவே முடிந்தது. அந்த அளவுக்கு பஞ்சாப் பிரச்சினை அவர்களைப் பயபீதியில் ஆழ்த்தியது. பிரதமர், மந்திரிகள் மட்டுமல்ல; அவர்களது குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் கூட குண்டு துளைக்காத கோட்டு, கார்கள், காவற்படை, உளவுப்படை, பயங்கரவாதக் கருப்புச் சட்டங்கள், என பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டு சிறைக் கைதியைப் போல ரகசிய வாழ்வு நடத்தினர்.

சீக்கிய பயங்கரவாதம் பஞ்சாப் மாநிலத்தோடு முடங்கி விடாமல், இந்தியாவில் எங்கெல்லாம் சீக்கிய மக்கள் குடியிருந்தார்களோ, அங்கெல்லாம் பற்றிப் படர்ந்தது. கனடா, அமெரிக்கா, பிரிட்டன் முதலான மேலை நாடுகளில்கூட புதிய வகையிலான சீக்கிய பயங்கரவாத அமைப்புகள் வளர்ந்தன. 'கனிஷ்கா' விமானத்தில் குண்டு வைத்ததாகவும், ராஜீவைக் கொல்ல சதி செய்ததாகவும் மேலை நாட்டில் வாழும் சீக்கியர்கள் மீது இந்திய அரசு குற்றம் சாட்டிய போதிலும் அவர்களைக் கைது செய்ய முடியவில்லை. பாசிச இந்திராவும் - ராஜீவும் எந்தவொரு வெளிநாட்டுக்குப் போனாலும் மரண பீதி அப்பாசிச கும்பலை அச்சுறுத்தியது. மேலை நாடுகளிடமும் அண்டை நாடான பாகிஸ்தானிடமும் சீக்கியத் தீவிரவாதிகளுக்குப் புகலிடம் தரக்கூடாது; நாடு கடத்த வேண்டும் என்று இந்திய அரசு மீண்டும் மீண்டும் கோருமளவுக்கு பஞ்சாப் பிரச்சினை சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றது.

### பஞ்சாபைக் காட்டி பாசிச சட்டங்கள்

பஞ்சாப் பிரச்சினை, நாட்டின் ஏதோ ஒரு மூலையில் நடப்பது; நம்மை ஒன்றும் பாதிக்காது என்று உழைக்கும் மக்கள் ஒதுங்கியிருந்த நிலைமைபோய், பஞ்சாபைக் காட்டி ''தடா'' எனப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வ கட்சி ஆதரவுடன் இந்திரா - ராஜீவ் கும்பலால் கொண்டு வரப்பட்டது. பஞ்சாபைக் காட்டி, கொண்டு வரப்பட்ட இப்பாசிசக் கருப்புச் சட்டம், பின்னர் அனைத்து மாநிலங்களிலும் உழைக்கும் மக்கள் மீதும், புரட்சிகர ஜனநாயக சக்திகள் மீதும் ஏவப்பட்டது. தமிழகத்தில் புலிபீதியூட்டி, ஈழ ஆதரவாளர்கள் மீதும் புரட்சியாளர்கள் மீதும் இக்கொடிய ''தடா'' சட்டத்தை பாசிச ஜெயா கும்பல் ஏவியது. பஞ்சாபைக் காட்டி ''பிரிவினைவாதம் - பயங்கரவாத்தை முறியடிப்போம்! தேச ஒற்றுமையைக் காப்போம்'' என்று புதிய முழக்கத்தை ஆளும் வர்க்கக் கட்சிகள் எதிரொலித்தன.

இதேபோல, இந்தியாவில் வேறெந்த மாநிலமும் இதுவரை சந்தித்திராத அளவுக்கு தொடர்ச்சியாக 'குடியரசு'-த் தலைவரின் அரசு பயங்கரவாத ஆட்சி பஞ்சாபில் கட்டவிழ்த்து விட்டது. ''தீவிரவாதம் ஓயவில்லை; தேர்தலுக்கான சூழ்நிலை இல்லை'' என்று கூறி சர்வ கட்சி ஆதரவுடன் தொடர்ந்து ராணுவ சர்வாதிகாரம் ஏவிவிடப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பர்னாலா அரசைக்கூட, சீக்கிய தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த தவறிவிட்டதாகக் கூறி பாசிச ராஜீவ் கும்பல் சர்வாதிகாரமாகக் கலைத்தது. பஞ்சாப் மக்கள் தாம் விரும்பிய அரசைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான மிகச் சாதாரண உரிமைகூட மறுக்கப்பட்டு இரண்டாந்தர குடிமக்களாக்கப் பட்டார்கள். சீக்கிய மதக் கட்டளைப்படி சீக்கிய மக்கள் அணிதிரள்வதும், பேரணி நடத்துவதும், குருத்துவாராக்களில் திரளாகச் சென்று வழிபாடு நடத்துவதும் கூட பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலால் பலமுறை தடை செய்யப்பட்டது.

### படுகொலைகளும் பயங்கரவாதமும்

தமது அரசியல் ஆதாயத்துக்காக சீக்கிய மதவெறியைத் துண்டி விட்டு வகுப்புவாதத் தீயில் குளிர்காய எத்தனித்தனர் பாசிச இந்திராவும், முன்னாள் 'குடியரசுத்' தலைவர் கியானி ஜெயில்சிங்கும். ஆனால் சீக்கிய தீவிரவாதம் அவர்களுக்கே எதிரா



ராஜீவ் கும்பலால் தூக்கிலிடப்பட்ட நிரபராதி கேஹார்சிங்



படிப்பகம்

www.padippakam.com

த் திரும்பிய போது, பொற்கோயில் மீது
ிராணுவ அதிரடித் தாக்குதல் நடத்தி, ஆயி
க் கணக்கான சீக்கியர்களைக் கொன்றொ
ித்தார் பாசிச இந்திரா. இதற்குப் பழிக்குப்
ழி வாங்கும் நடவடிக்கையாக பாசிச இந்
ிராவையும், ராணுவத் தலைமைத் தளபதி
வைத்யாவையும் சீக்கியத் தீவிரவாதிகள்
ட்டுக் கொன்றனர்.

பாசிச இந்திரா சாவைத் தொடர்ந்து
டல்லியிலும் பல வடமாநிலப் பெருநகரங்
ளிலும் ஆயிரக் கணக்கான அப்பாவி சீக்கி
ர்களைக் கொன்று காங்கிரசு குண்டர்கள்
வறியாட்டம் போட்டனர். தனது தாயைக்
கான்றதற்காக பழிவாங்கும் வெறியோடு
ாசிச ராஜீவ் சீக்கிய சமூகத்தின் மீது ஏவிய
யங்கரவாத தாக்குதல்கள், மாண்ட் பள்
த்தாக்கு நடவடிக்கை என்ற பெயரில் சீக்
யர் மீதான அடக்குமுறை ஆகியவற்றுக்
ாக பாசிச ராஜீவையும் பஞ்பின் முன்னாள்
பாலீசு தலைமை இயக்குனர் ரிபைரோ
ஆகியோரைப் பழிவாங்க சீக்கிய தீவிரவா
கள் தொடர்ந்து முயற்சித்தனர். 1986 அக்
டாபர் 2-ம் நாளன்று காந்தி சமாதியில்
ாசிச ராஜீவைப் பழிவாங்க நடந்த
காலை முயற்சியில் அதிசயமாக அவர்
ப்பித்தார். பொறுப்பிலிருந்து விலகி ருமே
ியாவுக்குத் தூதராகச் சென்ற ரிபைரோ
வத் தீர்த்துக் கட்ட அங்கேயும் சீக்கிய
ிரவாதிகள் முயற்சித்தனர்.

ராஜீவ் கொலை முயற்சியைத்
தாடர்ந்து பஞ்சாபில் அரச பயங்கரவாதப்
டுகொலைகளும் அடக்குமுறையும் தீவிர
ாகியது. இதற்குப் பழிக்குப் பழி வாங்க
ம், காலிஸ்தான் கனவை நனவாக்கவும்
பான்மையினரான இந்துக்களுக்கு எதி
க பயங்கரவாதத்துக்கு தாக்குதல்கள்
டத்தி சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாபை
ட்டே துரத்த முயன்றனர். அதற்கெதிராக
டல்லியிலும் வடமாநில பெரு நகரங்களி
ருந்து அப்பாவி சீக்கியர்களை இந்து
வறியர்கள் அகதிகளாகப் பஞ்சாபுக்குத்
த்தினர். மதவெறி, பீதி, பயங்கரம், படு
காலைகளுக்கு நடுவே 1947-ல் இந்தியா
பாகிஸ்தான் என நாடு துண்டாடப் பட்ட
தப் போலவே, பஞ்சாபிலும் நிலைமை
ாசமாகியது. ராஜீவ் கும்பலின் சூழ்ச்சி
- சதிகளால் அகாலி தளம் பிளவு பட்ட
ாதிலும், இரண்டாவது முறையாக பொற்
ாயில் மீது போலீசு நடவடிக்கை மேற்
ாண்ட போதிலும் சீக்கிய தீவிரவாதத்தை
ிக்க முடியவில்லை. ராஜீவ் கும்பல்
ாட்ட சமரச ஒப்பந்தம் துப்பாக்கித்
ாட்டாக்களால் துளைக்கப்பட்டது. ஒப்
தத்தில் கையெழுத்திட்ட லோங்கோ
ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பாசிச கும்பலின் பழிவாங்கும் வெறி

ஆட்சியதிகாரத்திலுள்ள தைரியத்தில்
ிய சமூகத்தையே பழிவாங்கும் வெறி
யோடு பாசிச ராஜீவ் கும்பல் செயல்பட்டது. இந்திரா கொலைக்குக் காரணமானவர்கள் - சதி செய்தவர்கள் என்று கூறி நிரபராதிகளான பல்பீர் சிங்கையும் கேஹார் சிங்கையும் பிடித்து கொலைக் குற்றம் சாட்டி கொடூரமாகச் சித்திரவதை செய்தது. மிக நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, தூக்குக் கயிற்றை எதிர் நோக்கியிருந்த பல்பீர்சிங் விடுவிக்கப் பட்டார். ஆனால் அப்பாவி கேஹார்சிங் அநியாயமாக தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்.

இதேபோல, இந்திரா சாவைத் தொடர்ந்து டெல்லியிலே சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப் பட வில்லை. கலவரத்தில் ஈடுபட்ட காங்கிரசு கிரிமினல் குண்டர்களும் தண்டிக்கப்பட வில்லை. நிவாரண உதவிக்காக, அகதிகளாக்கப்பட்ட சீக்கிய மக்கள் டெல்லியிலே பலமுறை போராடிய போதும், மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச பொது மன்னிப்புக் கழகமும் பலமுறை கோரிய போதிலும் பாசிச ராஜீவ் கும்பல் அதற்குச் செவிசாய்க்கவில்லை. விரக்தியடைந்த டெல்லி வாழ் சீக்கியர்களில் பலர் நடை பயணமாகவே பஞ்சாபுக்குத் திரும்பினர்.

1989 தேர்தலிலே பாசிச ராஜீவ் கும்பல் தோல்வியுற்று, பின்னர் வந்த வி.பி. சிங், சந்திரசேகர் ஆட்சிகளின் போதும் பஞ்சாப் பிரச்சினை தீராத விவகாரமாக தொடர்ந்து நீடித்தது. அரச பயங்கரவாதப் படுகொலைகளும், அதற்கெதிராக சீக்கிய பயங்கரவாதிகள் நடத்தும் தாக்குதலுமாக ஏறத்தாழ உள்நாட்டுப் போரின் நிலைமையே நீடித்தது.

இப்படி கடந்த பத்தாண்டு காலமாக இந்திய அரசியலில் பிரிக்க முடியாத முக்கிய அங்கமாக வளர்ந்து ஆட்சியாளர்களை அச்சுறுத்திய பஞ்சாப் போராட்டம் இன்று தோல்வியடைந்து விட்டதாக அரசும், தேசியப் பத்திரிகைகளும் குறிப்பிடுகின்றன. "சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஆதரவும் ஆயுத உதவியும் செய்து தூண்டிவிட்ட பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி இது" என்று கொக்கரிக்கிறார், பஞ்சாப் போலீசு தலைமை இயக்குனரான கே.பி.எஸ்.கில்.

### அரசு பயங்கரவாதமும் அமைதியும்

"கடந்த ஏப்ரல் மாத மத்தியில் நடந்த "பைசாகி" பண்டிகை முன்புபோல பயபீதியுடன் இறுக்கமான சூழ்நிலையில் அல்லாமல், மக்களின் முகங்களில் மகிழ்ச்சி ததும்ப கொண்டாடினர். பஞ்சாபியர்கள் தமது பாரம்பரிய "பங்கரா" நடனத்தை உற்சாகத்தோடு ஆடிப் பாடினர். இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 21 பேர்தான். இதில்கூட கொல்லப்பட்ட போலீசாரின் எண்ணிக்கை 14 பேர். ஆறு மாதங்களுக்கு முன்புவரை கூட இப்படியொரு நிலைமை இருந்ததில்லை. பஞ்சாப் போலீசாரின் அதிரடி நடவடிக்கையின் விளைவாக சீக்கிய பயங்கரவாதத்தின் முதுகெலும்பு முறிக்கப் பட்டு விட்டது.

"தீவிரவாதிகளின் மிரட்டலுக்குப் பயந்து மாலை 6 மணிக்கு மேல் நிசப்தமாகி விடும் பஞ்சாபில், இப்போது இரவிலும் கடைகள் திறந்திருக்கின்றன. நள்ளிரவு வரை பேருந்துகள் இயங்குகின்றன. இப்போது இரவில் மக்கள் தைரியமாக நடமாட முடிகிறது. பயங்கரவாத பீதியினால் பஞ்சாபை விட்டு வெளியேறிய இந்துக்களும் சீக்கியர்களும் மீண்டும் நம்பிக்கையோடு பஞ்சாபுக்குத் திரும்புகிறார்கள். தீவிரவாதி



பஞ்சாப் வீதிகளில் இன்றும் தயார் நிலையில் துணை ராணுவப்படை; துப்பாக்கி முனையில் 'அமைதி'.

படிப்பகம்

www.padippakam.com

களின் மிரட்டலோ, பணம் பறித்தலோ இப்போது அறவே கிடையாது.

''பள்ளிகளில் சீக்கிய தீவிரவாதிகள் நிர்பந்தமாகத் திணித்த சீருடையும், அடிப்படைவாத கல்வி முறையும் இப்போது செல்லாக்காசாகிவிட்டது. தடை செய்யப்பட்ட இந்திய 'தேசிய கீதம்' மீண்டும் இசைக்கப்படுகிறது. இளம் பெண்கள் மதக் கட்டளைப்படி தலையை முக்காடிட்டுக் கொண்டு செல்வது குறைந்து விட்டது. ஓராண்டுக்கு முன்பு நடந்த சட்ட சபைத் தேர்தலின் போது வாக்களிக்கக்கூட அஞ்சிய மக்கள், அண்மையில் நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலின்போது பெருவாரியாக வாக்களித்துள்ளனர். கடந்த மார்ச் 8-ம் தேதியன்று அனந்தபூர் சாகிப்பில் முதல்வர் தலைமையில் நடந்த நல்லெண்ண விழாவில், பஞ்சாபின் பல பகுதிகளிலிருந்து 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உற்சாகத்தோடு பங்கேற்றனர். பஞ்சாபில் அமைதியும் மக்களிடையே புதிய நம்பிக்கையும் துளிர்விடத் தொடங்கியுள்ளதையே இவை நிரூபிக்கின்றன'' — இப்படி ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும் பஞ்சாப் நிலைமையைப் பற்றி பெருமையாகக் குறிப்பிட்டு தமது சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்கள். இது நரசிம்மராவின் புதிய அணுகு முறையால் ஏற்பட்ட வெற்றியா? அல்லது பஞ்சாபின் பொம்மை முதல்வர் பியாந்த்சிங்கின் சாணக்கியத்தனத்தால் ஏற்பட்ட வெற்றியா?. நிச்சயமாக இல்லை. தொடர்ச்சியான காட்டு மிராண்டித்தனமான அரசு பயங்கரவாத அடக்கு முறையால் ஏற்பட்டுள்ள வெற்றியே இது.

### இரத்த வெள்ளத்தில் பஞ்சாப்

பாசிசராஜீவ் கும்பல், ரே-ரிபைரோ-கில் ஆகிய கொலை வெறியர்களின் தலைமையில் அரசு பயங்கரவாத ஆட்சியை நிறுவி பஞ்சாபை இரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டது. ஆயிரக்கணக்கான சீக்கிய இளைஞர்கள், வயோதிகர்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும்கூட கைது செய்யப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டம், தனிக் கோர்ட்டுகள் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் முதலான கொடிய பாசிசக் கருப்புச் சட்டங்கள் ஏவிவிடப்பட்டன. ''போலீசுடன் மோதல்'' என்கிற பெயரில் ஆயிரக் கணக்கான சீக்கிய இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மனித உரிமை மீறல்களும் பத்திரிகை தணிக்கைகளும் கொண்ட அறிவிக்கப்படாத பாசிச ஆட்சியே பஞ்சாபில் நிறுவப்பட்டது. இதற்காகவே 59-வது அரசியல் சட்டப் பிரிவு திருத்தியமைக்கப்பட்டது.

### உளவுப் படை ''ரா''வின் ரகசிய சதி

இது தவிர பொற்கோயில் மீது இரண்டாவது சுற்று தாக்குதல் நடவடிக்கை, மாண்ட் பள்ளத்தாக்கு நடவடிக்கை, காட்டு ரோஜா நடவடிக்கை கருப்பு இடி முழக்க நடவடிக்கை முதலான அரசு பயங்கரவாத நடவடிக்கைகளை பாசிச ராஜீவ் கும்பல் கட்டவிழ்த்து விட்டது. இவற்றின் மூலம் சீக்கிய தீவிரவாதத்தைக் கட்டுப் படுத்த முடியாத போது, உளவுப் படையான ''ரா'' வைக் கொண்டு பல சதிவேலைகளை அரங்கேற்றியது. சீக்கிய தீவிரவாதிகளிடையே ஒரு எடுபிடி கும்பலை உருவாக்கி, அதற்கு நவீனரக ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் கொடுத்து பஞ்சாப் பிரச்சினையைக் கிளறிவிட்டது. இரத்த வெறிபிடித்த ''ரா'' 1987-ம் ஆண்டு இறுதியில், டெல்லி விமான நிலையத்தில் வந்திறங்கிய 23 ஆயுதப் பெட்டிகள் கேட்பாரற்றுக் கிடந்த போது, அதை ''ரா'' உளவாளிகள் ரகசியமாகக் கைப்பற்றிச் சென்றதிலிருந்து இந்த விவகாரம் சர்வதேச பத்திரிகைகளில் அம்பலமாகியது.

### பயங்கரவாதிகளின்



அரசு பயங்கரவாத கொலைகாரர்கள்: ரிபைரோ, ரே, கில்.

### பாசிசக் கொலைப் படை

இது தவிர, ரே-ரிபைரோ-கில் கும்பல் சீக்கிய தீவிரவாதிகளை ரகசியமாகக் கொன்றொழிக்கவும், சீக்கிய இளைஞர்களி டையே ஊடுருவி சீரழிக்கவும், உளவு பார்க்கவும் இரகசிய கொலைப் படைக ளைக் கட்டியமைத்தது. கிரிமினல் போல் சார், சமூக விரோதிகளைக் கொண்ட இக் கொலைப் படையை அரசு பயங்கரவாதி கள் தமது செல்லப் பிள்ளையாக ஊட்டி வளர்த்தனர். ''கொலைக்கு கொலையே பதில்''. ''தீவிரவாதிகள் ஒரு போலீசுக்கார னைக் கொன்றால் பத்து தீவிரவாதிகளைக் கொல்லுவோம்'' என்று பகிரங்கமாகவே வெறியூட்டி இக்கொலைப் படையை ஏவி விட்டார் ரிபைரோ. அப்பாவி சீக்கிய இளைஞர்களையும், நிராயுத பாணிகளான சீக்கிய தீவிரவாதிகளையும் நேருக்கு நே சுட்டு இக்கொலைப் படை பயங்கரவாத தைப் பரப்பியது. பாகிஸ்தான் எல்லையில ருந்து விரட்டப்பட்ட வங்க தேச குடிம களை ''ஊடுருவ முயன்ற சீக்கிய தீவிரவா திகள்'' என்று முத்திரைகுத்தி காட்டு மிராண் டித்தனமாக சுட்டுக் கொன்றது.

பாசிச இட்லரின் ''கெஸ்டபோ'' கொலைப் படையைப் போல செயல்பட்ட இந்த ரகசிய கூலிப் படை, பின்னர் தனது சொந்த நலன்களுக்காக கொலை கொள்ளை, கடத்தல், கட்டாய வசூல், பால யல் வன்முறைகளில் இறங்கி அட்டூழியங் ளில் ஈடுபட்டது. இக்கூலிப் படையை சேர்ந்த தல்பீர்சிங் என்பவன் தற்காலிக நீ கம் செய்யப்பட்டதால் ஆத்திரமடைந் இரு உயர் போலீசு அதிகாரிகளைச் சுட்டு கொன்றான். இரகசிய கொலைப் பன யைப் பற்றி செய்திகள் கசிவதற்கு முன்ப கவே தல்பீர்சிங்கை போலீசார் சுட்டு கொன்று இந்த விவகாரத்தை அமுக்கினர்

### அரசு பயங்கரவாதிகளின் அரக்கத்தன

இரகசிய கொலைப் படைகளை கொண்டு சீக்கியர்களை நரவேட்டையா யது போதாதென்று, 1988-ம் ஆண்டு செ டம்பர் இறுதியில் அரசு பயங்கரவாதிக இதுவரை கண்டிராத கொடுஞ் செயலை அரங்கேற்றினர்.

தீவிரவாதிகளின் செல்வாக்கு மிக் பஞ்சாபின் எல்லைப்புற மாவட்டங்களி பருவ மழை காரணமாக அணைகள் நிரம் வழிந்த போது, சீக்கிய தீவிரவாதிகளைய அவர்களுக்குப் புகலிடம் தரும் கிராம மக் ளையும் ஒரே நாளில் பூண்டோடு ஒழிக்கு திட்டத்தோடு, எச்சரிக்கை அறிவிப்பு எ வுமின்றி பக்ரா-நங்கல் அணையை திறந்து விட்டனர். இதன் விளைவாக, ஈ யிரம் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி 15 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்குப் பயிர்க நாசமாகியது. 50,000 கால்நடைகள் மா டன. நூற்றுக் கணக்கான விவசாயிக வெள்ளத்தில் மூழ்கி மாண்டு போயின



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றில் இது போன்ற அரக்கத்தனம் வேறெங்கும் நடந்ததில்லை.

### பஞ்சாபில் மயான அமைதி

இத்தனை அட்டூழியங்களுக்குப் பின்னரும், அப்பாவி சீக்கிய இளைஞர்களைப் பிடித்து சிறையிலடைத்து சித்திரவதை செய்து கொண்டே, நாங்கள் கைது செய்யவில்லை என்று புளுகுவது, தப்பியோடி விட்டதாக கதை கட்டுவது, தீவிரவாதி என்று சந்தேகப்பட்டு சுட்டுக் கொன்றதாக மாய்மாலம் செய்வது என்பதாக பஞ்சாப் போலீசாரின் பயங்கரவாத வெறியாட்டம் எல்லை மீறிப் போயுள்ளது. கடந்த ஈராண்டுகளாக "நள்ளிரவு நடவடிக்கை" என்ற பெயரில் கிராமங்களை சுற்றிவளைத்து தாக்குவது, அப்பாவிகளைச் சிறையிலடைத்து சித்திரவதை செய்வது என்பதாக அதன் அட்டூழியங்கள் பெருகிவிட்டன. மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச பொது மன்னிப்புக் கழகமும் உண்மையைக் கண்டறிய பஞ்சாபுக்குள் அனுமதிக்கவே மாட்டோம் என்று அரச பயங்கரவாதிகள் இன்னமும் கொக்கரிக்கின்றனர். இதனால் பஞ்சாபில் தற்போது நிலவும் அமைதி சீர்குலைந்துவிடும் என்கின்றனர்.

உண்மையில் இது சுடுகாட்டு அமைதி, பஞ்சாபில் அமைதியாக வீசும் வடதிசைக் காற்றில் பிணவாடையே வீசுகிறது. இது பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதால் ஏற்பட்ட வெற்றி அல்ல. மிகக் கொடூரமான அரசு பயங்கரவாத அடக்கு முறையால் கிடைத்த தற்காலிக வெற்றி!

அதேசமயம் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்திய அரசியலை ஆட்டிப் படைத்த மாபெரும் சக்தியாக வளர்ந்த சீக்கிய பயங்கரவாதம் இன்று பின்னடைந்து பெருந் தோல்வியைச் சந்தித்தது ஏன்?

முதலாவதாக, பஞ்சாபில் நடந்த போராட்டம் தேசிய இனக் கோரிக்கைளைக் கொண்டிருந்த போதிலும் அது தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமே அல்ல. தேசிய இனத்தின் நலன்களை முன்வைத்து தேசிய மூதலாளிகள் - குட்டி முதலாளிகளால் நடத்தப்பட்ட போராட்டமும் அல்ல.

### ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான மோதல்

பசுமைப் புரட்சியின் விளைவாக, நவீன வகை முதலாளித்துவ நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளான "குலாக்குகள்" அடங்கிய சக்திவாய்ந்த புதியவகை ஆளும் வர்க்கப் பிரிவு பஞ்சாபில் வளர்ந்தது. விவசாய உள்ளீடு பொருட்களின் விலையைக் குறைக்கவும் விளை பொருட்களின் விலையைக் கூட்டவும் அதன் மூலம் பசுமைப் புரட்சியின் பகற்கொள்ளையில் பங்குபெறவும் கோரிக்கை எழுப்பிப் போராடினர். இது பெரும் வர்த்தகர்கள், தரகு அதிகாரவர்க்க முதலாளிகளின் நலன்களுக்கு எதிரானது என்பதால் தொடர்ந்த இக்கோரிக்கைகளை அவர்கள் நசுக்கி வந்தனர். மராட்டியத்தில் சரத்ஜோஷி, உ.பி-யில் திக்காயத், கர்நாடகாவில் நஞ்சுண்டசாமி தலைமையிலான சங்கங்கள் இத்தகைய பொருளாதாரக் கோரிக்கையுடன் அவ்வப்போது போராட்டம் நடத்தி முடங்கி விடுகின்றன. முதலில் அகாலிகளின் அனந்தபூர் சாகிப் தீர்மானம் என்கிற மாநில சுயாட்சி தீர்மானம் இந்த ஆளும் வர்க்கப் பிரிவினரின் கோரிக்கைகளைத் தான் உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் இதுவே அரசியலோடு மத வடிவமும் பெற்று புதியவகை பூதமாகக் கிளம்பியது. குறிப்பாக, முன்னாள் 'குடியரசு'த் தலைவர் கியானி ஜெயில்சிங்கும், பாசிச இந்திராவும் தமது குறுகிய அரசியல் ஆதாயத்துக்காக காலிஸ்தான் கோரிக்கைக்கு உயிர் கொடுத்து மதவெறியைத் தூண்டிவிட்டதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். பின்னர் அது அவர்களுக்கே எதிராகத் திரும்பியது.

பஞ்சாபில் சீக்கிய தீவிரவாதிகளால் தொடுக்கப்பட்ட 'தர்ம யுத்தம்', சீக்கியர்களிடையே நவீனரக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஜாட் சாதியினருக்கும், இந்துக்களிடையே வர்த்தகம் மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள பார்ப்பன - பனியா சாதியினருக்கும் இடையிலான - ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான யுத்தமாகவே நடந்தன. பார்ப்பன - பனியாக்கள் தரகு அதிகார முதலாளிகளாகவும் அரசு எந்திரத்தில் மேலாண்மை பெற்றவர்களாகவும் இருப்பதால் அரசு பயங்கரவாத அடக்கு முறையின் மூலம் வெற்றி பெறத் துடித்தனர். சீக்கிய ஜாட் நிலப்பிரபுக்களோ தேசிய இனக்கோரிக்கைகளுடன் மதவெறி பயங்கரவாதத்தை உசுப்பிவிட்டு தமது நோக்கங்களை சாதித்துக் கொள்ள முற்பட்டனர்.



**சீக்கிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவி இந்துக்கள்; காலிஸ்தான் கனவின் நரவேட்டை.**

ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் நலன்களுக்கான போராட்டமாக பஞ்சாப் 'தர்மயுத்த'த்தின் நோக்கம் சுருங்கிப் போனதே அதன் தோல்விக்கு முதன்மையான காரணமாகும்.

### மத ரீதியிலான காலிஸ்தானம் தேசிய இன கோரிக்கையா?

அடுத்ததாக, மாநில சுயாட்சி, பஞ்சாபி மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை பஞ்சாபுடன் இணைப்பது, நதி நீர் பங்கீட்டின் மாநிலத்தின் நியாயவுரிமையைப் பெறுவது ஆகிய பஞ்சாப் மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கொண்டிருந்த போதிலும், சீக்கிய தீவிரவாதிகள் மத ரீதியிலான "காலிஸ்தான்" எனும் தனிநாடு அடைவதையே லட்சியமாகக் கொண்டிருந்தனர். அதாவது தோழர்கள் லெனினும், ஸ்டாலினும் ஆக மிகப் பிற்போக்கானதாகச் சாடி நிராகரித்த அனைத்து இஸ்லாமியவாதம், அனைத்து யூதவாதம் போன்றே காலிஸ்தானமும் மதரீதியிலானது; படுபிற்போக்கானது. இது தேசிய இன மக்களை ஐக்கியப் படுத்துவதற்குப் பதில் மத ரீதியில் மேலும் பிளவுபடுத்தியது. இதுதவிர, நிரங்காரிகள் மீதும் தாழ்த்தப்பட்ட சீக்கியர்கள் மீதும் தீவிரவாதிகள் கொலை வெறித் தாக்குதல் நடத்தியதன் விளைவாக, துவக்கத்திலிருந்தே அவர்கள் பஞ்சாப் போராட்டத்தின் நீரோட்டத்தில் ஐக்கியப்பட முடியவில்லை.

மூன்றாவதாக, பஞ்சாபி தேசிய இனம் என்பது சீக்கிய மதத்தினரை மட்டுமே கொண்டதல்ல. பெரும்பான்மை சீக்கியர்களையும் சிறுபான்மை இந்துக்களையும் ஐக்கியப் படுத்துவதற்குப் பதிலாக, இந்துக்களை விரட்டியடித்துவிட்டு பஞ்சாபை சீக்கியர்களுக்கு மட்டுமேயான காலிஸ்தானமாக மாற்றுவதையே தீவிரவாதிகள் லட்சியமாகக் கொண்டிருந்தனர். இதற்காக அப்பாவி இந்துக்கள் மீதும், பிழைப்புக்காக ஒரிசா, பீகாரிலிருந்து குடியேறிய தாழ்த்தப்பட்ட கூலித் தொழிலாளர்களையும் சுட்டுக் கொன்று பயங்கரவாத வெறியாட்டம் போட்டனர்.

### மதவெறி பயங்கரவாதம் தீர்வாகாது

எல்லாவற்றுக்கும் மேலாக, பஞ்சாப்

படிப்பகம்

www.padippakam.com



அசாமில் ராணுவத்தின் அட்டூழியங்களுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்.

மக்களின் நியாயமான தேசிய இன கோரிக்கைகளுக்காக சக்திவாய்ந்த மக்கள் திரள் அரசியல் போராட்டங்களை கட்டியெழுப்பாமல், பயங்கரவாத சகதிக்குள் வீழ்ந்தனர். வலுவான மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைத்துப் போராடுவதற்குப் பதிலாக, இரகசிய பயங்கரவாத இராணுவ அமைப்புகளையே கட்டியமைத்தனர். போதாக் குறைக்கு ஐக்கியப்பட்ட தலைமையின்றி அதிலேயும் பிளவுகள்; போட்டிக் குழுக்கள். அரசு பயங்கரவாதத்துக்குப் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக சீக்கிய பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட செயல்களும்கூட, பின்னாளில் சீக்கிய மக்களுக்கே எதிரானவையாகத் திரும்பின. கட்டாய நன்கொடை, புகலிடம் கோருவது 'துரோகிகள்' என்று முத்திரை குத்தி சீக்கியர்களையே கொன்றொழிப்பது, அரசு பயங்கர வாதத்தை எதிர்க்கும் அதே சமயம் சீக்கிய மதவெறி பயங்கரவாத அட்டூழியங்களை விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள், அரசியல் கட்சியினர், மனித உரிமை இயக்கத்தினரைக்கூட கொன்றொழிப்பது என சீக்கிய பயங்கரவாதிகள் வெறியாட்டம் போட்டனர்.

அரசு பயங்கரவாத அட்டூழியங்களுக்குப் பழிவாங்கும் நடவடிக்கை என்பதாலும், சீக்கிய மதக் கட்டளை என்பதாலும் அச்சுறுத்தல் காரணமாகவும் சீக்கிய பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு சீக்கிய மக்கள் துவக்க காலத்தில் ஆதரவு அளித்து வந்தனர். பின்னாளில் அது அவர்களுக்கே எதிரானதாக மாறிவிட்டபோது, சீக்கிய பயங்கரவாதிகளுக்கு மக்கள் ஆதரவும் இல்லாமல் சுருங்கிப் போனது. சில பகுதிகளில் கிராம மக்களே ஒன்றிணைந்து சீக்கியத் தீவிரவாதிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. இருவேறு பயங்கரவாதத்தால் நிலைகுலைந்து போன பஞ்சாப் மக்களுக்கு ''அமைதி'' எனும் கானல் நீரைக் காட்டி ஏய்க்கவும் தனிமைப்பட்ட சீக்கிய பயங்கரவாதிகளைத் தாக்கி அழிக்கவும் அரசு பயங்கரவாதிகளுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது.

இக்காரணங்களால் பஞ்சாப் போராட்டம் மதவெறி பயங்கரவாத இயக்கமாகச் சீரழிந்து போனது. தீவிரவாத தலைவர்கள் பிரிட்டனுக்கும் கனடாவுக்கும் தப்பியோடி விட்ட நிலையில், எஞ்சியுள்ள சிதறிய சக்திகளை விரைவில் அழித்தொழித்து விடுவோம் என்று அரசு பயங்கரவாதிகள் கொக்கரிக்கின்றனர்.

### அசாம் போராட்டத்தின் பின்னடைவு

இதேபோல, கடந்த பத்தாண்டுகளாக சக்திமிக்க இயக்கமாக வளர்ந்த அசாம் தேசிய இனப் போராட்டம், மிகக் கொடூரமான அரசு பயங்கரவாத அடக்குமுறைக்குப் பிறகு பிளவுக்கும் பின்னடைவுக்கும் தள்ளப்பட்டுள்ளது. பஞ்சாபைப் போல மத



பிந்தரன்வாலே: சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தின் தந்தை.

வெறி பயங்கரவாத இயக்கமாக சீரழியாத போதிலும், ஆளும் வர்க்கத்தின் ஊடுருவல் காரணமாகவும், குட்டி முதலாளித்துவப் போராட்டத் தலைமையின் காரணமாகவும் அசாம் போராட்டம் பலமுறை திசை திருப்பப்பட்டுள்ளது.

அசாம் மாணவர் சங்கமும், 'அந்நியர்'களை வெளியேற்றும் அதன் கோரிக்கையும் ஆர்.எஸ்.எஸ். மதவெறி கும்பலின் ஊடுருவல் காரணமாக திசை திருப்பப்பட்டு சீரழிந்தது. இனச் சிறுபான்மையினர் வெளியேற்றப்பட்ட பிறகு, அசாம் மாணவர் சங்கம் மேல்சாதி இந்துக்களின் இயக்கமாக சுருங்கியது. அதிலிருந்து தோன்றிய அசாம் கணபரிஷத் கட்சியும் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவாகிய இந்து மேல்சாதி வகுப்புவாதிகளின் கட்சியான பிறகே தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. அரைகுறையாகப் போடப்பட்ட அசாம் ஒப்பந்தம் இன்று கழிப்பறை காகிதமாகிவிட்டது. அசாமியர்கள், மலைச்சாதி தேசிய இனச் சிறுபான்மையினர், வங்காளிகள் என்று தனித்தனியே கூறுபோட்டு மோதவிட்டதுதான் அசாம் ஒப்பந்தம் கண்ட பலன். மேலும், வங்க தேசத்திலிருந்து வந்து குடியேறும் முஸ்லீம் அகதிகள் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் காணப்படாமல் உள்ளது. இதனால் மீண்டும் நெல்லி படுகொலை போன்ற மதவெறித் தாக்குதலுக்கான அபாயம் தொடர்ந்து நீடிக்கிறது.

அசாம் போராட்டத்தைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கணபரிஷத் கட்சி முற்றிலும் பிழைப்புவாத கொள்ளையர் கூடாரமாகச் சீரழிந்து இன்று சீண்டுவாரின்றி புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது.

### ''உல்பா''வின் சந்தர்ப்பவாதம்

மறுபுறம், ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறிய ஐக்கிய அசாம் விடுதலை முன்னணி (உல்பா-ULFA) சக்திவாய்ந்த இயக்கமாக வளர்ந்த போதிலும், தனது குட்டி முதலாளித்துவப் போராட்டத் தலைமையின் காரணமாக 'இடது' வலது சந்தர்ப்ப வாதங்களுக்குப் பலியாகி இன்று பின்னடைவுக்குள்ளாகி பிளவுபட்டுக் கிடக்கிறது.

''சுதந்திர அசாம்'' என்பதை லட்சியமாகக் கொண்ட உல்பா இயக்கம், சாராயம், ஆபாச வீடியோ, போதை மருந்து முதலான சீரழிவுகளுக்கு எதிராக சக்திவாய்ந்த மக்கள் திரள் போராட்டங்களை நடத்தியது. அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிராக மக்களைத் திரட்டி பல கடையடைப்புப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தியது. இத்தகைய சாதகமான நிலைமை இருந்த போதிலும் குட்டி முதலாளித்துவப் போராட்டத் தலைமையின் காரணமாக, பரபரப்பூட்டும் சாகசவாத நடவடிக்கைகளில் அது இடறி விழுந்தது.

### குட்டி முதலாளித்துவ ஊசலாட்டம்

புலிகள் எம்.ஜி.ஆருடன் மேற்கொண்ட சந்தர்ப்பவாத உறவைப் போலவே, உல்பா இயக்கமும் அசாம் கணபரிஷத் கட்சி - ஆட்சியுடன் சந்தர்ப்பவாத உறவை மேற்கொண்டது. பிழைப்புவாத


படிப்பகம்

www.padippakam.com

கணபரிஷத் கட்சியில் நிலவும் கோஷ்டிப் பூசலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாக· அது நியாயம் கற்பித்தது. கொள்கை உறுதிப்பாடும், மக்கள் திரள் அடிப்படையும் கொண்டதாக இயக்கத்தை வளர்த்து முன்னேறிச் செல்வதற்குப் பதிலாக, உல்பா இயக்கம் சந்தர்ப்பவாத சகதியில் வீழ்ந்தது. இதன் விளைவாக, கணபரிஷத் ஆட்சி கவிழ்ந்து ''காண்டா மிருக நடவடிக்கை'' என்ற பெயரில் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதை எதிர்கொள்ள முடியாமல் உல்பா இயக்கம் பின்னடைவுக்குள்ளானது. மேலும் தேசிய இனச் சிறுபான்மையினர், மலைச் சாதியினருடன் அது ஐக்கியப்பட்டு முன்னேறத் தவறியதால், அரசு பயங்கரவாதத் தாக்குதலை எதிர்கொள்ள புகலிடமோ, தளமோ இல்லாமல் பின்வாங்க நேரிட்டது. குட்டி முதலாளித்துவ ஊசலாட்டம் காரணமாக அதன் உயர்மட்ட தலைவர்களும் - தளபதிகளும் சரணடைந்து கைதான பிறகு இயக்கமே பிளவுபட்டு இன்று முடங்கிப் போய்விட்டது.

அதேசமயம் தற்போதைய பின்னடைவு பெருந் தோல்வியைச் சரிகட்டி உல்பா இயக்கமும், சீக்கிய தீவிரவாதமும் மீண்டும் ஒரு சக்தியாகத் திரண்டெழ வாய்ப்புகளும் உள்ளன. ஏனெனில் அசாம், பஞ்சாப் பிரச்சினைக்குக் காரணமான சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படைகள் இன்னமும் நீடிக்கவே செய்கின்றன. அதுபோல எல்லா நாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்துக்கு இணையாக, குட்டி முதலாளித்துவ அராஜகம் - பயங்கரவாதத்துக்கான அடிப்படைகள் தொடர்ந்து நிலவுகின்றன.

### தவறான அணுகுமுறை தடம் புரளச் செய்யும்

பாட்டாளி வர்க்க சித்தாந்தக் கண்ணோட்டம், யதார்த்த நிலைமைகளுக்குப் பொருத்தமான புரட்சிகரத் திட்டம், அரசியல் - ராணுவப் பாதை, கட்டுப்பாடுமிக்க தலைமையும் மக்கள்திரள் அமைப்புகளும்; ஆகியவை மட்டுமே புரட்சியை சாதிக்க முடியும் என்ற படிப்பினையை அசாம், பஞ்சாபின் போராட்ட வரலாறு மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால், நிலைமைகளை யதார்த்த பூர்வமாக ஆய்வு செய்வதற்குப் பதிலாக, பிராந்திய ரீதியிலான பிரச்சினைகளைக்கூட தேசிய இனப் பிரச்சினையாக மதிப்பிடுவது, அதை ஆதரிக்காவிட்டால் தனிமைப்படுவோம் என்ற அச்சத்திலும், தலைமை கொடுப்பதன் மூலம் புரட்சிகர போராட்டமாக மாற்றிவிடலாம் என்கிற ஆர்வத்திலும் சில மார்க்சிய - லெனினிய குழுக்கள் அணுகுகின்றன. ஆனால் இம்மாதிரியான அணுகுமுறை ஒருபோதும் புரட்சியை நோக்கி இட்டுச் செல்லாது. ஒருபுறம் வலது சந்தர்ப்பவாதிகளாகச் சீரழிக்கும் அல்லது எதிரிகளின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் துடைத்தொழித்துவிடும். இந்த அரிய படிப்பினைகளையே அசாம், பஞ்சாப் போராட்டங்கள் உணர்த்துகின்றன.

● மனோகரன்

## மே-1 சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்
# தயாராகிறார்கள் மக்கள்
# அலறுகிறார்கள் இந்து வெறியர்கள்

ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து மே 1-ம் தேதி சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்து அதன் விளக்கப் பொதுக் கூட்டங்களை தமிழகமெங்கும் நடத்தி வருகிறது. திட்டமிட்ட 70 பொதுக் கூட்டங்களுக்கும் மேலாக பல ஊர்களிலிருந்து கூட்டங்கள் நடத்த சொல்லி செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. பல ஊர்களில் அரங்கக் கூட்டங்கள் நடந்து வருகிறது. மக்கள் மத்தியிலும், ஜனநாயக சக்திகளிடமிருந்தும், தி.மு.க., தி.க., பா.ம.க., தலித் சிறுத்தைகள் ஆகியவற்றின் அணிகள் மற்றும் வட்டார பொறுப்பாளர்களிடமிருந்தும் பெருத்த வரவேற்பு கிடைத்துள்ளது. நடக்கின்ற பொதுக் கூட்டங்களுக்கு மக்கள் பெருவாரியாக கூடுவதும், நிதி அளிப்பதும் உற்சாகத்தை தூண்டுவதாக உள்ளது. வயதான தி.மு.க, தி.க. அணிகள் மிகவும் நெகிழ்வுடன் நமது போராட்டத்தை பாராட்டுகின்றனர்.

போராட்டத்தின் வீச்சு நாம் எதிர்பார்த்ததை விடவும் பற்றி படருகிறது. கூட்டம் முடிந்து கலைந்து செல்லும் மக்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராக தங்களது மனக்குமுறலை நம்மிடம் வெளிப்படுத்துகின்றனர். இதையெல்லாம் கண்டு பார்ப்பன கும்பல் பீதி அடைந்து நிலை குலைந்து போயுள்ளனர். போராட்டம் நடக்கவிருக்கும் திருச்சியில் பார்ப்பன கும்பல் அவர்தம் அடிவருடிகள் ஒருபுறம், பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பாளர்கள் மறுபுறம் என இருகூறாக பிரிந்து நிற்கிறார்கள் மக்கள். ஏப்ரல் 4-ம் தேதி இந்து முன்னணி தலைவன் ராமகோபாலன் திருச்சியில் பொதுக் கூட்டம் போட்டு ம.க.இ.க. வினரை பயங்கரவாதிகள் என்றும் நாத்திகர்கள் என்றும் வசை பாடிவிட்டு போலீசு ராணுவத்தை வைத்து கருவறை நுழைவைத் தடுத்து நிறுத்துவதாகவும் மிரட்டியிருக்கிறார். மே-1 காலையில் பக்தர்களைக் கூட்டி தேங்காய் உடைப்புப் போராட்டம் நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார். ராமகோபாலனின் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் பார்ப்பனர்கள் மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்து முன்னணியின் கூட்டத்திற்குப் பிறகு ம.க.இ.க RSYF கூட்டங்கள் புதிய எழுச்சியுடன் நடைபெறத் தொடங்கின. திருவெறும்பூர், காட்டூர், புத்தூர், எடத்தெரு, கல்கண்டார் கோட்டை, பீமநகர், திருவானைக்காவல் என்று நகரின் ஒவ்வொரு மூலையிலும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் ஆதரவு பெருகுவதைக் கண்டு பீதியடைந்த இந்து முன்னணி சிறீரங்கம் கோயிலைச் சுற்றி கருவறை நுழைவை எதிர்த்து கண்டன ஊர்வலம் நடத்தியது. இதிலும் பார்ப்பனர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஊர்வலப் பாதையில் தி.க.வினர் வைத்திருந்த சுவரொட்டிகளையும் பெரியார் படத்தையும் பார்ப்பனக் கும்பல் கிழித்தெறிந்ததுடன் இந்தி வாழ்க, பெரியார் ஒழிக என்று வெறித்தனமாக கூச்சல் போட்டது. காவிக்கொடி எரிப்புப் போராட்டத்திற்காக சென்னை சென்றிருந்த தி.க. இளைஞர்கள் திரும்பி வந்தவுடன் இதைக்கண்டு ஆத்திரம் கொண்டனர். இந்து முன்னணி பார்ப்பனருக்கும் அவர்களுக்கும் நடந்த மோதலில் பார்ப்பனக் கும்பல் வாங்கிக் கட்டிக் கொண்டது. தி.க. இளைஞர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

அதேபோல ம.க.இ.க. சுவரெழுத்துக்களை பார்ப்பனக் கும்பலொன்று சிறீரங்கத்தில் அழிக்க முயன்றபோது ஆத்திரம் கொண்ட தி.மு.க. இளைஞர்கள் தடுத்திருக்கின்றனர். பிறகு போலீசு தலையிட்டு அந்த பார்ப்பனக் கும்பலை மீட்டுச் சென்றது. இத்தகைய பல சம்பவங்கள் இவ்வியக்கத்திற்கு பெருகிவரும் ஆதரவைக் காட்டுகின்றன.

கடைசியாக நேற்று (21.4.93) திருவானைக்காவலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டனர். ஒவ்வொரு வட்டத்தையும் சேர்ந்த தி.மு.க, தி.க.வினரும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட அமைப்பினரும், ரஜினி ரசிகர் மன்றம் உள்ளிட்ட பல நற்பணி மன்றங்களும் ஆதரவும், நன்கொடையும் அளித்தனர். சுற்றுப்புற கிராம மக்கள் எல்லாம் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு பெயரும் கொடுத்தனர்.

மே-1 பார்ப்பன பாசிச எதிர்ப்பு போராட்டத்தின் கம்பீரமான தொடக்கமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ்.-ன் 'தேச' துரோக பார்ப்பன - பாசிச பாரம்பரியம்

## இன்று இந்திய தேசபக்திக்கு ஏகபோக உரிமை பாராட்டும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் காலனிய கால நடத்தை - யோக்கிதை என்ன?

அடுத்து அரசு அமைக்கத் தயாராகக் காத்திருக்கும் கட்சியாகவே பாரதீய ஜனதா நடந்து கொள்கிறது. நாட்டின் அடுத்த பிரதமர் அத்வானிதான் என்கிற தோரணையில் அந்தக் கட்சியும் அதன் பரிவாரங்களும் மட்டுமல்ல பிரபல ''தேசிய'' பத்திரிகைகளும் ஆளும் தரகு அதிகார முதலாளிகளும் நீதிபதிகள் உட்பட அரசு அதிகாரிகளும் கூட நம்புகின்றனர்.

''வட இந்தியா முழுவதும் இந்துத்துவ அலை அடிக்கிறது; கர்நாடகா, ஆந்திரா வரை அது எதிரொலிக்கிறது'' என்று அக்கட்சியின் எதிரிகள் கூட தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொள்கின்றனர். கருத்துக் கணிப்புகள் இதையே மறைமுகமாக உறுதிப்படுத்துகின்றன.

நரசிம்மராவ் தலைமையிலான மத்திய காங்கிரசு அரசு கவிழ்ந்து, பொதுத் தேர்தல் வந்தால் அறுதிப் பெரும்பான்மை பலம் பெறாவிட்டாலும் பாரதீய ஜனதாக் கட்சி தனிப்பெரும் கட்சியாக மாறுவதைத் தடுத்திட முடியாது என்றே பிற எதிர்க் கட்சிகள் அஞ்சுகின்றன. எதிர்க் கட்சிகளின் இந்த அச்சம் காரணமாகவே சிறுபான்மை காங்கிரசு அரசு இன்னமும் நீடித்திருக்கிறது.

ஆனால், பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வருவதென்பது வழமையான நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் கீழ் ஒரு அரசாங்கம் போய் இன்னொரு அரசாங்கம் வருவதாக இருக்காது. அதாவது காங்கிரசு அரசாங்கம் போய் ஜனதா அரசாங்கம் அமைவது, ஜனதா அரசாங்கம் போய் மீண்டும் காங்கிரசு அரசாங்கம் அமைவது போன்ற சாதாரண மாற்றமாக இருக்காது.

இந்து மதவெறி பாசிசத்தின் பகிரங்கமான பயங்கரவாத வடிவிலான சர்வாதிகாரமாகவே பாரதீய ஜனதா அரசாங்கம் இருக்கும் என்பது மட்டும் நிச்சயமானது. இந்த வேறுபாட்டைக் காணத் தவறும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பேராபத்தைத் தடுக்கவே முடியாது. அயோத்தி பாபர் மசூதியை இடித்த டிசம்பர் - 6 நிகழ்ச்சியும் அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் நடத்தப்பட்ட மதவெறிப் படுகொலைகளும் இதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டன.

பாரதீய ஜனதா என்பது இந்து மதவெறி பாசிஸ்டுகளால் முன்னிறுத்தப்படும் ஒரு அரசியல் கட்சி. அதன் பின்னணியில் விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், சிவசேனா, இந்து முன்னணி போன்ற பரிவாரங்களும் இவை அனைத்துக்கும் தாயும் தந்தையுமாக ராஷ்டிரீய சுயம் சேவக் சங்க (ஆர்.எஸ்.எஸ்)மும் திட்டமிட்டு இயங்குவது இப்போது பகிரங்கமான உண்மை.

இந்த இந்து மதவெறி பாசிச பரிவாரங்கள் எப்போதுமே இரட்டை முகங்களைக் கொண்டு, இரட்டை நாக்கோடு பேசி, இரண்டு வேறுவேறான வழிகளில் இயங்கி வந்திருக்கின்றன. அத்வானியின் நிதான மிகு, கவர்ச்சிப் புன்னகையுடன் தரும் அரசியல் விளக்கங்களும் வாஜ்பாயினுடைய வெகுளிச் சிரிப்புடன் கூடிய இலக்கிய சொற்பொழிவுகளும் அப் பரிவாரங்களின் மாண்பும் பண்பும் கூடியதாகக் காட்டும் ஒரு பக்கம்; அதே சமயம் அது ரீதம்பரா, உமாபாரதி ஆகிய ''சந்நியாசினி''களின் ஆத்திரம், அகங்காரம், காட்டுமிராண்டித்தனமான ஆபாச, கழிசடைப் பேச்சுகள் அவற்றின் இன்னொரு பக்கம்.

இந்து மதவெறி பரிவாரங்களில் ஒரு நாக்கு சட்டபூர்வ ஜனநாயகம் பேசினால் இன்னொன்று வன்முறை, பயங்கரவாத பாசிசம் பேசுகிறது. அதன் பாரதீய ஜனதா அரசியல் நிர்ணய சட்டப்படி, ஜனநாயகப்படி, நீதி - ஒழுங்குப்படி நடப்பதாகக் கூறிக் கொள்ளும் அதே சமயம் அவற்றை அதன் ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப., பஜ்ரங்தள், சிவ சேனா ஆகியவை கேளிக் கூத்தாக்கிவிடுகின்றன.

வி.இ.ப., பஜ்ரங்தள் ஆகியவை மத அமைப்புகள்தாம் என்றும் ஆர்.எஸ்.எஸ். ஒரு கலாச்சார அமைப்புதான் என்றும் இவை எதுவும் அரசியல் அமைப்புகள் அல்லவென்றும் இந்து மதவெறி பாசிஸ்டுகள் சாதிக்கின்றனர். ஆனால், சினிமா, விளையாட்டு வரை அனைத்திலும் அவை இந்து மதவெறி அரசியல் நஞ்சு கலந்து விடுகின்றன. ''அரசியலை இந்துமயமாக்கு; இந்துத்துவத்தை இராணுவமயமாக்கு'' என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.க்கு அதன் ஆதி சித்தாந்த குரு சவார்கர் வழங்கிய மூல முழக்கமாகும்.

ஆர்.எஸ்.எஸ்-ன் 2வது சிந்தாந்த குரு கோல்வாக்கர்



அயோத்தியில் மசூதியை இடித்து ராமன் கோவில் கட்டுவது உட்பட இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் ஒரு இந்து அடையாளத்தைத் தேடிக்கொள்வதற்காக நடத்தும் ஒரு தன்னெழுச்சியான மக்கள் திரள் இயக்கத்தைப் பிரதிபலிப்பதே, இந்துத்துவம் என்று ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் கூறிக் கொள்கின்றன. ஆனால் இப்படிச் சொல்வதன் மூலம் ஒரு இந்து ராஷ்டிரத்துக்கான நன்கு திட்டமிட்ட அமைப்பு ரீதியிலான சதி முயற்சிகளை அவை மூடி மறைக்கின்றன.

இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களது உணர்வுகளை, நலன்களை தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாகப் பீற்றிக் கொள்வதன் மூலம் ஒரு ''ஜனநாயக'', ''தேசிய'' நாடகமாடுகிறது இந்து மதவெறி பாசிசம். அது பெரும்பான்மை என உரிமை பாராட்டுவது, மக்கள் தொகை கணக்கின்படி இசுலாமியர், கிறித்துவர் அல்லாத அனைவரும் அடங்கிய 85 சதவீத மக்களைத்தான். ஆனால், இந்த 85 சதவீத மக்களுக்குள்ளே நிலவும் சாதி, மத, இன, மொழி, வர்க்க வேறுபாடுகள் உணர்வுகள், நலன்கள் அனைத்தையும் மூடி மறைக்கிறது. இப்பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையை யாரும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களுக்கு வழங்கிவிடவில்லை. ஆனால் ''இந்து மதம்'' என்பதற்குத் தாமே ஒரு சொந்த விளக்கம் கொடுத்து, அதன் பிரதிநிதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளன.

''இந்தியாவே இந்து, இந்துதான் இந்தியா'' என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் மூலமந்திரம். இதை ஏற்பதுதான் நாட்டு விசுவாசம், தேசப்பற்று. அல்லாதது அனைத்தும் தேச துரோகம், இந்த தேசத்துக்கு அந்நியமானது என்பதுதான் அவர்களது கண்ணோட்டம். ஆக, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் தவிர அனைவருமே இந்த நாட்டின் எதிரிகள்தாம்!

இந்தியாவின் வரலாறு என்பதே இசுலாமியர்களுக்கு எதிரான ஓராயிரம் ஆண்டுகால தொடர்ச்சியான போராட்ட வரலாறு என்கிற புணைச் சுருட்டுத்தான் இந்துத்துவத்தின் அடிநாதமான உள்ளது. இசுலாமியர்கள் அனைவரும் வேறுபாடுகளே இல்லாத அந்நிய, கொடூர ஆக்கிரமிப்பு ஆட்சியாளர்கள்; மற்றவர்கள் அனைவரும் ஒரே வார்ப்பாக விளங்கிய வீரதீரமாகப் போராடிய இந்து தேச பக்தர்கள் என்கிற இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வரலாற்றுப் புரட்டு பல வல்லுநர்களால் ஏற்கனவே

படிப்பகம்

www.padippakam.com



தகர்த்தெறியப்பட்டுவிட்டது. ஆரம்பகால இசுலாமிய ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றால் ஆரியர்களை என்ன சொல்வது என்கிற கேள்விக்கு அவர்களிடமிருந்து பதிலே கிடையாது.

உண்மை என்னவென்றால் அன்றைய ''இசுலாமிய'' ஆளும் வர்க்கம் என்பது பல ஆயிரம் இந்து அரசர்களையும், மிட்டா மிராசுகளையும் ஜமீன்தார் - ஜோத்தோதர் ஆகிய நிலப்பிரபுக்களையும் உள்ளடக்கியது. மராத்திய சீக்கிய அரசர்களுக்கு எதிராக ''கொடிய இசுலாமிய'' ஔரங்கசீப் நடத்திய அடக்குமுறை யுத்தங்களுக்குத் தலைமையேற்றவர்கள் பெரும்பான்மையாக இந்துத் தளபதிகளே. அதே சமயம் கோடிக்கணக்கான இசுலாமிய விவசாயிகளும் கைவினைஞர்களும் இந்த ''இசுலாமிய ஆளும் வர்க்கத்தின் அங்கமாக இருந்ததோ, ஆதாயம் அடைந்ததோ, தமது சக ''இந்து'' மக்களை அடக்கி ஒடுக்கியதோ கிடையாது. மொகலாயர் ஆட்சியின் கீழ் (வழிபாட்டு) மத வரி என்பதாக சிலகாலம் ''ஜெசியா வரி'' இந்துக்களிடம் வசூலிக்கப்பட்டதைப் போலவே, இசுலாமியர்களிடமும் வேறுபிற மத வரிகள் வசூலிக்கப்பட்டன. இசுலாமிய ஆட்சியாளர்கள் வழிபாட்டுத் தலங்களைத் தாக்கி சூறையாடி கொள்ளையிட்டதைப் போலவே இந்து ஆட்சியாளர்களும் செய்துள்ளார்கள்; குறிப்பாக அந்நிய இசுலாமிய பேரரசை எதிர்த்துப் போராடியதாகக் கூறப்படும் இந்து சிவாஜி பல இந்துக் கோவில்களைச் சூறையாடிக் கொள்ளையிட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

இந்து, முசுலீம் அரசர்களுக்கிடையில் பல போர்கள் நடந்திருந்தாலும், இசுலாமியருக்குள்ளேயும், இந்துக்களுக்குள்ளேயும் உள்ள வேறு வேறு பிரிவினரிடையே பல உள்ளூர் மதச் சண்டைகள் நிகழ்ந்திருந்தாலும், பல இந்து சாதிகளுக்கிடையே சாதி மோதல்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை அவை எதுவும் இரு வேறு மதங்கள், வகுப்புகளாக நாடு தழுவிய ரீதியிலான அணிதிரண்ட சமூகப் பகைமையாக ஒருபோதும் இருந்திருக்கவே முடியாது. அத்தகைய அளவை, தன்மையை அடைவதற்கான அடிப்படையான செய்தித் தொடர்பும், போக்குவரத்தும், ஒருங்கிணைந்த பொருளாதாரமும் இங்கு ஏற்பட்டிருக்கவே இல்லை. இந்து, இசுலாமிய, சீக்கிய ஆகிய நாடு தழுவிய மத, வகுப்புவாத அடையாளங்கள் என்பதும் அதேபோல சாதி, வர்க்க, பிராந்திய தேசிய இன சமூகப் பிரிவுகளும் நவீன காலத் தோற்றங்கள்தாம்.

ஆகவே, அந்நிய இசுலாமிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஓராயிரம் ஆண்டுகால இந்துக்களின் போராட்ட வரலாறே இந்திய வரலாறு என்பது பித்தலாட்டம், கட்டுக்கதை. இந்துக்கள் மட்டுமே இந்த மண்ணின் மைந்தர்கள், தேசப் பக்தர்கள், இந்துத்துவம் மட்டுமே உண்மையான ''இந்திய தேசியம்'' என்று சித்தரிப்பதற்காகக் கூறப்படும் புணைச்சுருட்டு. இதே நோக்கத்தோடு கிழக்கு வங்கம், மலபார் போன்ற இடங்களில் இந்து ஜமீன்கள் - மிட்டா மிராசுகளை எதிர்த்து இசுலாமிய விவசாயிகளும், பஞ்சாபில் இந்து பெரும் வியாபாரிகள் - வட்டி லேவாதேவிக்காரர்களுக்கு எதிராக சீக்கிய, இசுலாமிய விவசாயிகளும், உத்திரப் பிரதேசத்தில் இசுலாமிய நவாப்புகள், ஆளுநர்கள், தளபதிகள் அடங்கிய கொடுங்கோலர்களுக்கு எதிரான இந்து விவசாயிகளும் நடத்திய சமூகப் பொருளாதாரப் போராட்டங்களும், அரசியல் சுதந்திர இயக்கங்களும்கூட வகுப்புவாத மதச்சாயம் பூசிக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

இசுலாமிய மீர்சாகிப்பைப் போலவே இந்த நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுத்த ''இந்து'' ஜெய்சிங்குகளும் எட்டப்பர்களும் உள்ளடங்கியதுதான் ''இந்திய தேசிய'' வரலாறு என்பதை ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் மூடி மறைக்கின்றன. காலனிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்ட திப்பு சுல்தான், முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குக் கூட்டுத் தலைமையேற்ற நவாப்புகள் - தளபதிகள் முதல் காங்கிரசுத் தலைவராக இருந்து நேரு போன்றவர்களின் துரோகத்தையும் அம்பலப்படுத்திய அபுல் கலாம் ஆசாத் வரை எவ்வளவோ இசுலாமியர்கள் இந்த நாட்டுக்கு விசுவாசமிக்கவர்களாக நின்று போராடி இருக்கிறார்கள். தோழமை ஏடான புதிய கலாச்சாரம் (டிச, ஜன, பிப். '92) ஆங்கிலேயர்களை வீரதீரமாக எதிர்த்துப் போரிட்ட ஹசரத்மஹல், பைசாபாத் மௌல்வி எனப் பல முஸ்லீம்களை வரலாற்றிருந்து தொகுத்து அறிமுகப்படுத்தியது.

ஆனால் இன்று இந்திய தேசபக்திக்கு ஏகபோக உரிமை பாராட்டும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் காலனிய கால நடத்தை - யோக்கியதை என்ன? ஆர்.எஸ்.எஸ்.இன் சித்தாந்த குரு சவார்கர் மற்றும் நிறுவன குரு கெட்கேவார் ஆகிய இருவரும் காங்கிரசின் சில மலட்டுத்தனமான இயக்கங்களில் தனிப்பட்ட முறையில் பங்கேற்றுள்ளனர். ஆனால் 1925-ல் நிறுவப்பட்டதில் இருந்து 1947 வரையிலான காலனிய ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராக எந்த ஒரு இயக்கத்தையும் அது நடத்தியது கிடையாது. அதற்கு மாறாக ஆங்கிலேய அந்நிய ஆட்சியாளர்களை ஆதரித்து, அதனால் ஆர்.எஸ்.எஸ். ஆதாயம் அடைந்ததற்கு பல சான்றுகள் உள்ளன. அமைப்பு ரீதியில்

படிப்பகம்

www.padippakam.com

பலமும் கட்டுப்பாடும் மிக்க ஆர்.எஸ்.எஸ். தனது சக்தியை அந்நிய ஆட்சிக்கு எதிராகத் திருப்பிவிட்டதே கிடையாது; மாறாக இசுலாமியருக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்துக்கே பயன்படுத்தியது.

. ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷ் எதிர்ப்பு வீரதீர பிரசங்கங்கள் புரிந்தும் எழுதியும் வந்த சவார்கர், 1942-ல் நடந்த ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தின் போது அரசு நிறுவனங்களைப் புறக்கணித்து பதவி விலகும்படி காங்கிரசு முடிவு செய்திருந்தாலும், இந்து மகா சபா உறுப்பினர்கள் (ஆர்.எஸ்.எஸ்.-ன் கூட்டாளி அமைப்பு) பதவியில் நீடித்து வழமையான பணியாற்ற வேண்டும் என்று அதன் தலைவர் என்கிற முறையில் உத்திரவு போட்டார். அன்றைய இரண்டாம் உலகப் போரின் போதுதான், ''அரசியலை இந்து மயமாக்கு; இந்துத்துவத்தை இராணுவ மயமாக்கு'' என்று முழக்கத்தை முன்வைத்து இசுலாமியர் எதிர்ப்பு வெறிப்பிரச்சாரத்தையும், பிரிட்டிஷ் அரசுடன் கூட்டுறவும் கொண்டாடினார். ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தினர் சிறை பிடிக்கப்பட்ட அச்சமயத்தில் பிரிட்டிஷ் விசுவாசத்துக்காக இந்து மதவெறி இயக்கத்தினர் முழுச்சுதந்திரமும் ஆதரவும் பெற்றனர்.

பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது தேசியத்துக்கும் தேசப் பற்றுக்கும் சமமாக கருதுவது பிற்போக்கானது; சுதந்திரப் போராட்ட இயக்கங்களை பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களாக மாற்றுவது இந்து தேசியத் தன்மைக்கு மக்களை ஈர்ப்பதற்கு எதிரானது'' என்று ஆர்.எஸ்.எஸ்.-ன் இரண்டாவது குரு கோல்வால்கர் எழுதியுள்ளார். நேதாஜி அமைத்த இராணுவத்தின் ''ஆசாத் இந்த் பவுஜ்'' என்கிற பெயரில் இசுலாமிய அந்நிய மொழி வாடை இருப்பதாகக் கூறி ஆர்.எஸ்.எஸ். வெறுக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை ஏற்பதாகக் கூறும் அதே சமயம் ஜனவரி-26 குடியரசு தினத்தையோ, ''தேசிய கீதத்தையோ, மூவர்ணக் கொடியையோ ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் ஏற்பதில்லை, கொண்டாடுவதில்லை. காவிக்கொடி, வந்தே மாதரம், விஜயதசமி, ராமநவமி போன்றவையே அது ஏற்றுக் கொண்டு கொண்டாடுபவை.

ஆகவே, உண்மையில் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தேச துரோகிகள், தேசப்பற்று ''தேசியம்'' ஆகியவற்றுக்கும் அவர்களுக்கும் நேரெதிரான உறவுதான் உள்ளது. ஆனால் அவர்கள் தமது மத, வகுப்புவாத, பாசிச நோக்கங்களை ''தேசிய'' சாயம் பூசி மறைக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல ''ராம ராஜ்யம்'' பேசிய காந்தி உட்பட காங்கிரசுப் பெருந்தலைவர்கள் கூட இந்துத்துவத்தையும் தேசியத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பியவர்கள்தாம்.

''அந்நிய ஆக்கிரமிப்பு முசுலீம் ஆட்சியாளர்கள் இந்து தேசியப் போராளிகள்'' என்கிற கட்டுக்கதை பங்கிம் சந்திர சட்டர்ஜி, தாகூர், பாரதியார் போன்ற ''தேசியவாதி''களின் எழுத்துக்களிலேயே காணக் கிடக்கின்றன. முன்பு மராட்டியத்தில் வகுப்புவாதத்தைத் தூண்டிய கணபதி, சிவாஜி விழாக்களை ஏற்பாடு செய்து நடத்தியவர் பாலகங்காரத திலகர்; அவரது ''தேசிய தீவிரவாதம்'' என்பது இந்துத்துவக் கருவைக் கொண்டதுதான்; சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன், சத்தியமூர்த்தி ஆகியோரது ''தேசியமும்'' இத்தகைய இந்து மதவாதத்தில் தோய்த்ததுதான். இதையே ஆர்.எஸ்.எஸ். தனது பாரம்பரியமாக வரித்துக் கொண்டுள்ளது. மதன் மோகன் மாளவியா, லாலா லஜபத் ராய் ஆகிய காங்கிரசுத் தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ்.-ன் முன்னோடியான இந்து மகா சபையில் முக்கிய பங்கு வகித்தனர்; இந்துத்துவ அடிப்படையிலான ''தேசிய''த்தையே பிரச்சாரம் செய்தனர். உள்ளூர் மட்டத்தில் காங்கிரசு மற்றும் மதவாத அமைப்புகளின் அணிகள் இன்னமும் கலந்தே இருக்கின்றனர். வல்லபாய் பட்டேல் காங்கிரசின் தலைமையில் இருந்த இந்து மதவெறி பாசிஸ்டு என்பது பகிரங்கமான உண்மை; எனவேதான் அவரை ஆர்.எஸ்.எஸ். கும்பல் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறது. இந்து - இந்தி - இந்துஸ்தான் என்பதுதான் காங்கிரசின் கண்ணோட்டம் என்பதை இந்து மதவெறி பாசிஸ்டுகளுடன் அக்கட்சி கொண்டுள்ள கள்ளக் கூட்டே நிரூபிக்கிறது.



ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் செட்கேவார்

**இந்துக்கள் மட்டுமே இந்த மண்ணின் மைந்தர்கள், தேச பக்தர்கள், இந்துத்துவம் மட்டுமே உண்மையான ''இந்தியத் தேசியம்''என்று ஆர்.எஸ்.எஸ் கூறுவது பித்தலாட்டம்; கட்டுக்கதை.**

இந்து மதவெறி காங்கிரசுக்காரர்களை மட்டுமல்ல, அதை எதிர்த்துப் போராடிய அம்பேத்கார், பகத்சிங் போன்றவர்களைக் கூட ஆர்.எஸ்.எஸ். கும்பல் தேசியத் தலைவர்களாக கொண்டாடுகிறது. ''தேசியத்தையும்'' ''இந்துத்துவத்தையும்'' கலக்கிக் குழப்புவதன் மூலம் அதனால் அவ்வாறு செய்ய முடிகிறது. எது தேசியம்? யார் இந்து? என்பவற்றுக்கு தமது வசதியைப்போல வியாக்கியானம், விளக்கமளிப்பதன் மூலம் இந்தப் பித்தலாட்டத்தை அதனால் செய்ய முடிகிறது.

ஆர்.எஸ்.எஸ்.-ன் சித்தாந்த குரு சவார்கர் 1923-ல் எழுதிய ''இந்துத்துவம்! யார் இந்து?'' என்கிற நூலில் பின்வருமாறு அப்பட்டமாகவே கூறுகிறார், ''இந்துப் பள்ளத்தாக்கில் இருந்து முக்கடல்கள் வரையிலான பாரத வர்சத்தைத் தனது தந்தை நாடாகவும், தனது புனித பூமியாகவும், தனது மதத்தின் தொட்டிலாகவும் எவனொருவன் கருதுகிறானோ அவனே இந்து''. பிறப்பெடுத்த பூமி, புண்ணிய பூமி என்கிற இந்தக் கண்ணோட்டத்தின்படி அரபு மற்றும் பாலஸ்தீனத்தை மதப் புனிதத் தலமாகக் கொண்டுள்ள இசுலாமியர், கிறித்துவர்களின் தேசபக்தி சந்தேகத்துக்குரியது; தரங்குறைந்தது ஆகிறது. சுருக்கமாகச் சொன்னால் ''இந்து அல்லாதவர்கள், இந்துத்துவத்தை ஏற்காதவர்கள் இந்த நாட்டின் அசலித்தாக இருக்க முடியாது'' என்பதே ஆர்.எஸ்.எஸ். நிலைப்பாடு.

''இந்துக்களில்'' பல பிரிவினரிடையே மதநம்பிக்கைகள், சடங்கு சாத்திரங்கள், சாதி - வருண வேறுபாடுகள் இருக்கலாம்; ஒருமைவாதிகள், ஒரே கடவுள், பல கடவுள் நம்பிக்கையுடையவர்கள், நாத்திகர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் உட்பட அனைவரும் இந்துக்கள். எல்லா வேறுபாடுகளையும் மூடிமறைத்துவிட்டு ''பொதுப் பண்பாடு, பொது நாகரிகம், பொதுப் பாரம்பரியம்'' நிலவுவதாகக் கூறி உண்மையில் பார்ப்பனிய சனாதன வருணாசிரம தர்மத்தைப் புதுப்பிப்பதுதான் இந்துத்துவம். இதுதான் ''பல பூக்கள் ஒரே மாலை; பல ஆறுகள் ஒரே சமுத்திரம்'' என்கிற ஆர்.எஸ்.எஸ்.-ன் இந்து தேசியம்.

ராமகிருஷ்ண பரமகம்சர், விவேகானந்தர், தயானந்த சரஸ்வதி போன்ற இந்து மத மீட்பாளர்களை ஏற்றுக்கொண்டு அவர்களது பாரம்பரிய உரிமை கொண்டாடுகிறது ஆர்.எஸ்.எஸ். ஆனால், இசுலாமியர், கிறித்துவர் மீதான சகிப்புத் தன்மை பற்றிய ராமகிருஷ்ணரின் போதனைகளையும், மேல்சாதி மற்றும் ஆணாதிக்கத்தைப் பற்றிய விமர்சனம் மற்றும் ஏழை மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் சாதுக்கள், பார்ப்பனர்களின் சமூக நிலையை, எழுச்சிறும் சூத்திர சாதியினர் பிடித்து விடுவார்கள் என்கிற விவேகானந்தரின் வாக்குகளையும், பார்ப்பன மூட நம்பிக்கைகளையும் ஊழலையும் தாக்கி ஆரிய சமாஜத் தலைவர் தயானந்தர் செய்த பிரச்சாரத்தையும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஏற்கவில்லை.

இதற்குரிய ஒரே காரணம், அக்கும்பல் உண்மையில் அனைத்து ''இந்துக்களின்'' நலன்களைக்கூட பிரதிபலிப்பது அல்ல. இரட்டைப் பிறப்புடைய வர்ணத்தாரின் குறிப்பாக பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பன சனாதன தர்மத்தை புதுப்பித்து நிலைநாட்டுவதுதான் இந்துத்துவம், இந்து ராஷ்டிரம்.

இன்றைய இந்து மதவெறி பாசிஸ்டுகளின் மாதாவும் பிதாவுமான ஆர்.எஸ்.எஸ். எந்தக் காலகட்டத்தில் எந்த சூழ்நிலையில், எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டு, எவ்வாறு கட்டியமைக்கப்பட்டு வருகிறது? அதன் வரலாறு அமைப்புத் தன்மைகள் என்னவென்பதை கூர்ந்து கவனிக்கும் எவரும் இந்த அடிப்படை உண்மையை அறிய முடியும். இவை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# பதனவாலு படுகொலைகள் இன்னுமொரு நந்தனின் கதை

பதனவாலு கர்னாடகத்தில் தமிழக எல்லையருகே உள்ள சுமார் 5000 பேர் கொண்ட ஒரு சிற்றூர். தாழ்த்தப்பட்டோர், லிங்காயத்துக்கள் இருசாராருமே 2000 பேர் உள்ளனர். கல்வி, வேலை வாய்ப்பால் முன்னவர்களில் சிலர் முன்னேறியுள்ளனர். இதனால் அவ்வப்போது லிங்காயத்து சாதி வெறியர்கள் சச்சரவுகளை எழுப்பி வந்தனர்.

ஊரின் எல்லையில் அமையாத பழைமையான சித்தேசுவரர் கோவிலை புதுப்பிக்கும் பணிக்கு தாழ்த்தப்பட்டோரும் கணிசமாக நிதி அளித்தனர். ஜனவரி 30ம் தேதி கோவில் திறப்பு விழாவில் தாமும் கலந்து கொள்ளக் கோரி அம்பேத்கார் இளைஞர் இயக்கத்தினர் கோவிலைச் சூழ்ந்து கொண்டனர்.

அப்பகுதி காங்கிரசு எம்.எல்.ஏ.வும் லிங்காயத்து சாதிவெறிக்கு பெயர் போனவருமான மகாதேவ், இன்னொரு எம்.எல்.ஏ. சீனிவாசய்யா, பாலகங்காதர சுவாமிகள் ஆகியோர் கோயில் கதவை சாத்திக் கொண்டு திறப்புவிழா நடத்தி விட்டு போலீசின் துணையோடு வெறியேறினர். இருதரப்பிலும் பலரை கைது செய்து பிப்ரவரி 1 ல் அமைதிக்குழு என்று நாடகமாடி போலி சமாதானம் செய்து வைத்து போலீசு விடுவித்தது.

மீண்டும் மார்ச் 26 அன்று கோவிலில் நுழைய போலீசு அனுமதி கோரினது அம்பேத்கார் இளைஞர் இயக்கம். சாதிக்கலவரம் வருமென்ற நிலை இருந்தும் போலீசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. போராட்ட நாளுக்கு முந்தைய நாள், அருகிலுள்ள ஒரு கிராமத்தில் நடந்த 'சமூக நல்லிணக்கத்திற்கான கிரிகெட் போட்டி' ஒன்றில் வெற்றி வாகை சூடி, திரும்பிக் கொண்டிருந்தனர் அம்பேத்கார் இளைஞர் இயக்கத்தினரும் இரு ஆசிரியர்களும்.

ஊருக்கு 3 கி.மீ. தொலைவிலேயே தடிகள், கத்தி, கடப்பாரைகளுடன் காத்திருந்த சுமார் 60 லிங்காயத்து சாதிவெறியர்கள் அவர்கள் மீது பாய்ந்தனர். ஆரம்ப பள்ளி ஆசிரியர் நடராஜ், தலைமை ஆசிரியர் நாராயணசாமி, அவரது மகன் மதுகர் ஆகியோர் அடித்து கொல்லப்பட்டனர். இன்னும் 7 பேர் படுகாயமடைந்தனர். கொலைகாரர்களில் பெரும்பாலோர் 18 முதல் 22 வயதுள்ளவர்கள்; தலைமையாசிரியரிடமே படித்தவர்கள்.

சம்பவம் பகல் 1.30 க்கு நடந்திருந்தும் உடன் தகவல் தெரிவிக்கப்பட்டும் 4 மணி நேரம் போலீசு வரவில்லை. அன்று நடந்த ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் சுவராஸ்யத்தை இடைமறித்து கொள்ள விரும்பவில்லை சர்க்கிள் இன்ஸ்பெக்டர். இதற்குள் தாழ்த்தப்பட்டோர் வீடுகளில் கல்லெறிந்து களேபரம் செய்து மிரட்டிவிட்டு சாதிவெறியர்கள் வேற்றூர்களுக்கு ஓடிவிட்டனர். போலீசோ பூட்டிய வீடுகளைத்தான் பார்க்க முடிந்தது.

மார்ச் 27 அன்று காலை லிங்காயத்துகள் சிலர் வீடு திரும்பியிருந்ததைக் கண்டு ஆத்திரமாக இருந்தனர் தாழ்த்தப்பட்ட மக்கள். போலீசோ, தடியடிப் பிரயோகம் செய்து தாழ்த்தப்பட்டோரை விரட்டியது. கற்களை எறிந்ததாக தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் 10 பேரை கைது செய்து பொய் வழக்கு போட்டது.

மார்ச் 27-ல் நூற்றுக்கணக்கான மாணவர் - இளைஞர்கள், கொலை வெறியைத் தூண்டியதற்காக காங்கிரசு எம்.எல்.ஏ. மகாதேவைக் கைது செய்யக்கோரி ஊர்வலமாக சென்று போலீசு கமிசனரிடம் மனு செய்தனர். ஆனாலும் இச் சம்பவத்திற்கும் மகாதேவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென அடாவடியாக முதல்வர் வீரப்ப மொய்லி மறுத்து விட்டார்.

எதிர்ப்புகள் தீவிரமாகவே, காங்கிரசுக்குள்ளேயே கடுமையான கண்டனக் குரல்கள் எழவே, வேறு வழியின்றி மத்திய அரசின் உளவுப் பிரிவின் (சி.பி.ஐ.) விசாரணை கோரப்படும் என முதல்வர் வீரப்ப மொய்லி அறிவித்தார். இறப்புக்கு இழப்பீடு தொகையை ஒரு லட்சமாக்கியும் இலவச வீடு, வேலைவாய்ப்பு, மாதாந்திர நிதி உதவி, இலவச மருத்துவ சிகிச்சை மட்டுமின்றி இன்றும் பதனவாலு கிராமத்து தாழ்த்தப்பட்டோருக்கான பல உதவிகளையும் மொய்லி அறிவித்தார். தலைமை ஆசிரியர் நாராயணசாமிக்கு அதே ஊரில் சிலை வைப்பதாகக் கூறினார். குற்றம் இழைத்தார்கள் என இனங்கண்டிருக்கும் 36 பேரில் 18 பேர் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார். தீண்டாமையை கடைபிடிக்கும் கோவில்களை அரசே ஏற்க சட்டம் கொண்டுவர இருப்பதாகவும் குறிப்பிட்டார். ''பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்'' என்று நடந்து கொண்டார் வீரப்ப மொய்லி.

காங்கிரசு உட்பட தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த சில எம்.எல்.ஏக்கள் வெறுப்பையும் ஆத்திரத்தையும் உமிழ்ந்தனர். ''அரபு நாடுகளில் கண்ணுக்கு கண் பறிக்கப்படுவதைப் போல் மேல் சாதி வெறியர்களை தண்டிக்க வேண்டும்; தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்க மறுக்கும் சித்தேசுவரா கோவிலை இடித்துத் தள்ள வேண்டும்; அது போன்ற கோயில்களை இழுத்து மூட வேண்டும்; அத்தகைய மத ஊர்வலங்களை தடை செய்ய வேண்டும்'' என்றார் காங்கிரசு எம்.எல்.ஏ. மோட்டம்மா. 10, 20 வருடங்களுக்கு கோயில்களை மூடலாம், மதங்களை தெருவிற்கு கொண்டு வரக்கூடாது என்றார் ஜனதா தள எம்.எல்.ஏ., வி.எச். கௌடா.

''தாழ்த்தப்பட்டோரை அர்ச்சகர்களாக்க வேண்டும்'' என்று கோரினர் சிலர். பேச்சளவில் கூட இத்தகைய கண்டனம் எதுவும் தெரிவிக்காமல் போலீசு முன் கூட்டி தடுக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டது பி.ஜே.பி. இதுவரை எந்த சங்கராச்சாரியும் மடாதிபதியும் கொலைகளைக் கண்டித்து ''அருள்வாக்கு'' அளிக்கவில்லை. தமிழக பத்திரிகைகளும் இக்கொடுமையை புறக்கணித்து விட்டன.

லிங்காயத்துக்களின் சாதி வெறி நாளும் அதிகரித்தே காணப்படுகின்றன. சமீபத்தில் ஹான்சிப்புராவில் (இதே மைசூர் மாவட்டம்) சினிமா டிக்கெட் வாங்கும் பிரச்சினையை அடுத்து 9 பேர் கொல்லப்பட்டனர். 1991-ல் சர்கூர் கொலைகள் பற்றி அளித்த விசாரணை கமிசன் அறிக்கை உறக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் ஒரு காலத்தில் பசவேசர் என்பவரால் பார்ப்பன ஆதிக்கம், சாதியம், சடங்குகளை எதிர்த்து தோற்றுவித்த ஒரு சீர்திருத்த இயக்கத்தின் வழி வந்தவர்கள்தான் இந்த லிங்காயத்துக்கள்.

இவர்களைப் போன்றே தமிழகத்திலும் பெரும்பாலான கிராமங்களில் மேல் சாதியினர் தாழ்த்தப்பட்டோரை கோவில்களில் அனுமதிப்பதில்லை. பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பதாக காட்டிக் கொள்ளும் ஒரு சிலர் தமக்கும் கீழே கைகட்டி நிற்க ஓர் அடிமை இருக்க வேண்டும் என்பதை மட்டும் மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை. இவர்கள் எந்த கட்சியில் இருந்தாலும் பி.ஜே.பி.-யை எதிர்ப்பதாக கூட சவடால் அடித்தாலும் உண்மையில் பி.ஜே.பி.-யின் கைக்கூலிகளே. பார்ப்பனீயத்தின் அடிவருடிகளே. ஏனெனில் சாதி ஆதிக்கமும் சாதி வெறியும்தான் பார்ப்பனீயம் ஆகும்.

இத்தகைய கொடூரங்கள் இந்து மதத்தின் உயிர்நாடியாகத் திகழும் பார்ப்பனீயத்தையும் சாதி ஆதிக்கத்தையும் வேரறுக்கும் பிரச்சாரம், போராட்டம் அவசியமானது; காலத்தின் கட்டாயக் கடமையும் ஆகும். சாதி வெறி கொலைகார பாதகங்களை மூடி மறைத்துக் கொண்டு ''ஏ, இந்துவே, இந்து உணர்வு கொள்'' என்று கூக்குரலிட்டு மாய்மாலம் செய்கின்றன இந்து முன்னணி, பி.ஜே.பி. மற்றும் ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்புகள். இவற்றை இவர்களது வழிக்ளிலேயே முறியடிக்க வேண்டும். ஆம்! இனி தீமூட்டுபவர்களைத்தான் தீ விழுங்க வேண்டும்; நத்தன்களையல்ல.



○ நிரஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ சுற்றுப் புறச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளைக் கூட தங்களுக்கு லாபம் அள்ளித் தரும்படி திட்டமிட்டுக் கொண்டுள்ளனர் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள். சமீபத்தில் அமெரிக்காவின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் வகுத்துள்ள ஒரு திட்டத்தின்படி, அமில மழை பொழிவதற்குக் காரணமான கந்தக வாயுவை, வருடத்திற்கு 1 லட்சம் டன் வரை வெளியேற்றலாம் என அனுமதி பெற்றுள்ள ஒரு தொழிலகம், அவ்வருடத்தில் 80,000 டன் அளவே வெளியேற்றியிருந்தால், மீதமுள்ள அளவை வேறொரு தொழிலகத்திற்கு விற்றுக் கொள்ளலாம். தாங்கள் நிர்ணயித்துள்ள அளவிற்கு இத்தொழிலகங்கள் ஏலத் தொகையை இந்நிறுவனத்திடம் கட்டிவிட்டால் மட்டும் போதும்; வாங்குவதிலும், விற்பதிலும் எவ்விதத்திலும் தலையிடாதாம்!

★ அரசு நிதி உதவி பெறும் கடைநிலைப் பள்ளிகளில் 9-வது மற்றும் 10-வது வகுப்புகளை வரும் கல்வியாண்டிலிருந்து தொடங்கிக் கொள்ள அனுமதி அளித்துள்ளது தமிழக அரசு. ஆனால், இவ்வகுப்புகளை தொடங்குவதற்கும், தொடர்ந்து நடத்துவதற்குமான நிதி உதவியை அரசு தராது என்றும், அவ்வகுப்புகளில் சேரும் மாணவர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்து இச்செலவை ஈடுகட்டிக் கொள்ள வேண்டும் என்றும் வழிகாட்டுதல் கொடுத்துள்ளது. தனியாருடன் போட்டியிட நிதி உதவி பெறும் பள்ளிகளை களத்தில் இறக்கியாகி விட்டது. இனி என்ன? அரசு கல்வி நிறுவனங்களையும் கல்வி வியாபாரத்தினுள் தள்ளிவிட வேண்டியதுதான் பாக்கி!

★ 'அரசியலில் நிரந்தர நண்பனும் கிடையாது; நிரந்தர எதிரியும் கிடையாது' என்ற ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கொள்கையை மிகுந்த வெட்கக்கேடான முறையில் நடைமுறைப் படுத்தியுள்ளனர் வி.பி. சிங் பரிவாரத்தினர். 'மதவாத சக்திகளை முறியடிக்க உறுதி பூணுவோம்' என்று நாடு முழுவதும் 1.5 கோடி பேரிடம் கையெழுத்து பெற்று ஜனாதிபதியிடம் கொடுத்து தங்களை முற்போக்காகச் சித்தரித்துக் கொண்ட இவர்கள், நடந்து முடிந்த பம்பாய் மேயர் தேர்தலில் காங்கிரசு வேட்பாளரைத் தோற்கடிக்க பா.ஜ.க. - சிவசேனை கும்பலுடன் ஒரு புனிதக்கூட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். தேர்தல் என்றாலே அனைத்து ஓட்டு கட்சிகளும் கொள்கைகளை மூட்டைகட்டி வைத்துவிடுவார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்!

★ ஏ.கே. ஹங்கல் - இந்தி திரைப்பட குணச் சித்திர நடிகர். சுதந்திரப் போராட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டுள்ள இவர் கடந்த மார்ச் 23-ல் பம்பாய் பாகிஸ்தான் தூதரகத்தில் நடந்த 'பாகிஸ்தான் நாள்' கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார் என்ற ஒரே காரணத்திற்காக இவர் நடித்த 'ஷோலே' திரைப்படம் நடந்துவரும் திரையரங்கில் 200-க்கும் மேற்பட்ட சிவசேனைக் குண்டர்கள் கூடி 'ஹங்கல் சம்பந்தப்பட்ட காட்சிகளை வெட்டியெறிய வேண்டும்; இல்லையெனில் பின்விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல' எனத் திரையரங்க ஊழியர்களை மிரட்டியுள்ளனர். இதே போன்று ஹிந்தி திரைப்பட நடிகை ஷபனா ஆஸ்மியின் மீதும் இந்தப் பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி பின் அம்பலப்பட்டுப் போயினர் இந்த மதவெறி பாசிஸ்டுகள். இதே காரணத்திற்காக பம்பாய் ஷெரீபை நீக்க வேண்டும் என சட்டசபையில் வெறித்தனமாக கூச்சலிட்டுள்ளனர். அதேவேளையில் டெல்லியிலுள்ள பாக். தூதரகத்தில் நடந்த விருந்தில் கலந்து கொண்ட முரளி மனோகர் ஜோஷியின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என எதிர்த்தரப்பினர் வினவிய பொழுது, 'ஜோஷி மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என ஒப்புக்காக அறிக்கை விட்டது. சிவசேனா தலைமை. இதைக்கூடப் பொறுத்துக் கொள்ளாது சிவசேனாவைக் கண்டித்ததுடன், 'ஜோஷிக்கு அன்று பாக். நாள் எனத் தெரியாது; இஃப்தார் பண்டிகை கொண்டாட்டம் எனக் கருதியே விருந்தில் கலந்து கொண்டார்' என பா.ஜ.க. மழுப்ப முயற்சிக்கிறது.

★ நடந்து முடிந்த சர்வதேச பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் போஸ்னியா முஸ்லீம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் மீது ஏவிவிடப்படும் அடக்குமுறைகள் மற்றும் கற்பழிப்பு அட்டூழியங்களைக் கண்டித்து டில்லியில் ஏப்ரல் 12 முதல் பத்து நாட்கள் நடந்த சர்வதேச பாராளுமன்ற சங்கக் கூட்டத்தின் தீர்மானமாக கொண்டுவர முடிவெடுத்தனர். ஆரம்பத்தில் இக்கோரிக்கையை நிர்வாக காரணங்களைக் காட்டி தட்டிக் கழிக்க முயன்ற சங்கம், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடுமையான வற்புறுத்தலுக்குப்பின், பெண்கள் மீதான இவ்வகை அடக்குமுறையை 'போர்க்கால குற்றமாக' கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. 'உலகின் ஜனத்தொகையில் 52 சதவீதமுள்ள பெண்கள், 11 சதவீத அளவே அரசாங்கங்களிலும், அரசியலிலும், முடிவெடுக்கும் அமைப்புகளிலும் பங்கெடுக்கின்றனர்; இவ்விழுக்காட்டை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதனையும் தனது தீர்மானங்களுள் ஒன்றாக நிறைவேற்றியுள்ளது.



வெள்ளை நிற இனவெறியால் சுட்டுக் கொல்லப்பட்ட போராளி கிரிஸ் ஹானி.

★ அமன்சிங் - பஞ்சாப் முதலமைச்சர் பியாந்த் சிங்கின் பேரன். தாத்தா பயங்கரவாதத்தை ஒடுக்குகிறேன் என்ற பெயரில் நரவேட்டையாடி வருகையில், பேரன் தனக்குள்ள அரசியல் பின்புலத்தைக் கொண்டு படிக்கும் பள்ளியில் அட்டூழியம் புரிகின்றான். சமீபத்தில் நடந்து முடிந்த ஒரு மையத் தேர்வில், தனது விடைத்தாளை வெளியிலிருந்து விடைகளை எழுதிக் கொணரச் செய்ததைத் தடுத்த ஓர் ஆசிரியரை தனது பாதுகாவல் அதிகாரிகளைக் கொண்டு தாக்கியுள்ளதுடன், 'நான் யாரென்று தேர்வு மைய அதிகாரியிடம் கேட்டுத் தெரிந்து கொள்' எனத்திமிராக கூறியுள்ளதுடன், துப்பாக்கியைக் காட்டியும் மிரட்டியுள்ளான். பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்டு பெண்களைக் கேலி செய்வது, தன்னை எதிர்க்கும் சகமாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை வீடு புகுந்து தாக்குவது என அதிகாரத் திமிர் கொண்டு திரியும் இவனை முதலமைச்சரான தாத்தாவும், இராணுவ கர்னலான தந்தையும் மருந்துக்குக்கூட கண்டிப்பதில்லை. பஞ்சாபிலேயே முதலமைச்சருக்கு அடுத்து அதிக பாதுகாப்பு அரசு கொடுத்திருப்பதும் இவனுக்குத்தானாம்.

★ நடந்து முடிந்த வான்கூவர் சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் ரசியாவுக்கு அளித்த 160 கோடி டாலர் உதவியை எல்லா முதலாளித்துவப் பத்திரிக்கைகளும் 'ஆஹா'வெனப் புகழ்ந்து தள்ளியுள்ளன. அதேபோல், அமெரிக்கா அடுத்த ஆண்டு மேலும் 360 கோடி டாலரை கடன் அளிக்கப் போவதாகவும், ஜப்பான் 200 கோடி டாலர் கொடுக்கப் போவதாகவும், ஏழு பெரும் ஏகாதிபத்திய (G7) நாடுகளும் தங்கள் பங்குக்கு உதவலாம் என்றும், ரசியாவை வளமாக்குவதுதான் மேற்குலக நாடுகளின் குறிக்கோள் என்பது போல பூரிப்படைந்து எழுதுகின்றன. ஆனால், உண்மையில் மேற்குலக நாடுகளிலிருந்து ரசியாவுக்குள் செய்யப்படும் முதலீட்டை விட, ரசியாவிலிருந்து மேற்குலக நாடுகளுக்கு கடத்திச் செல்லப்படும் மூலதனம் தான் பலமடங்கு அதிகமாகவுள்ளது. கடந்த ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 4000 கோடி டாலர் மதிப்புள்ள மூலதனம் மறைமுக வழிகளில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. 'யெல்ட்சினும், அவரது பொருளா

படிப்பகம்

www.padippakam.com

தார வல்லுநர்களும்தான். இக்குற்றத்தைப் புரிந்தவர்கள்' எனப் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியுள்ளார் ரசிய துணை ஜனாதிபதி ரூட்ஸ்கோய். உலக வங்கியும் இக்கடத்தலை வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டுள்ளது.

★ பில் கிளிண்டன் தனது தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது தான் ஆட்சிக்கு வந்தால் 'இராணுவச் செலவுகளை குறைப்பேன்; சமூக - பொருளாதாரத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்குவேன்' எனச் சவடால் அடித்தார். இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இராணுவச் செலவுகளில் அவர் வெறும் 118 கோடி டாலரை மட்டும் குறைத்துள்ளார். இது கடந்த ஆண்டைவிட வெறும் 3.9 சதவீதம்தான் குறைவானது. ஆனால் அவர் கொடுத்த வாக்குறுதியோ ஐந்து ஆண்டுகளில் 10,000 கோடி டாலர் பெறுமான இராணுவச் செலவை குறைப்பேன் என்பது. நிதி ஒதுக்கீட்டில் சமூக பொருளாதாரத் திட்டங்களுக்கு அவர் குறைத்துள்ள தொகை மொத்தமாக 11,160 கோடி டாலர். இத்தொகை எதிர்வரும் 4 வருடங்களில் பையப்பைய வெட்டப்படும். ''ரீகனும், புஷ்ஷும் செய்வதற்கு அஞ்சியதை; கிளிண்டன் 'தியாகம் செய்ய வேண்டும்' எனும் பெயரில் தற்பொழுது நியாயப் படுத்தி வருகிறார்'', என அரசியல் விமர்சகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

★ கிரிஸ் ஹானி - தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் உயர் மட்டத் தலைவர்களுள் ஒருவர். நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்து மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் வெள்ளை நிற இனவெறியை எதிர்த்து விட்டுக் கொடுக்காது உறுதியுடன் போராடியதன் காரணமாக மிகுந்த செல்வாக்கு உடையவர். இவர் கடந்த ஏப்ரல் 10 அன்று தனது வீட்டின் அருகிலேயே வெள்ளை நிற இன வெறியினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதன் காரணமாக மீண்டும் தென்னாப்பிரிக்காவெங்கும் வன்முறை நிகழ்ச்சிகள் பரவ ஆரம்பித்துள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவது தொடர்பாக அரசுக்கும், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசிற்கும் இடையே நடந்து வரும் பேச்சு வார்த்தையை தடுத்து நிறுத்துவது. இன மோதல் மற்றும் போராளி குழுக்களிடையே வன்முறையைத் தூண்டிவிடுவது என்ற நோக்கத்திற்காகவே நன்கு திட்டமிட்ட இச்சதிச் செயலை அரங்கேற்றியுள்ளது வெள்ளைநிற இனவெறி நாஜி கும்பல்.

★ பம்பாய் குண்டு வெடிப்பில் பிரதான குற்றவாளியாகக் கருதப்படும் மேமன் சகோதரர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதை எளிதாக்குவதில் அதிகார வர்க்கத்தினரின் ஊழல் நடவடிக்கைகளே மறைமுகமாக உதவியுள்ளன. பல்வேறு கடத்தல் - கிரிமினல் வழக்குகள் மேமன் சகோதரர்கள் மீது இருப்பினும் குண்டு வெடிப்புக்கு இரு மாதம் முன்புதான் அவர்களுக்கு புதிய பாஸ்போர்ட்களை வழங்கியுள்ளது பம்பாய் பாஸ்போர்ட் அலுவலகம். அதுபோல் மாஃபியா தலைவன் தாவூத் இப்ராகிமின் பாஸ்போர்ட் இருமுறை புதுப்பித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, இப்போது பம்பாய் போலீஸ் துறையும், பாஸ்போர்ட் அலுவலக அதிகாரிகளும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு அம்பலப்பட்டு போயுள்ளனர். துபாய் போலீஸ் அதிகாரி இதைச் சுட்டிக் காட்டிய பொழுது, 'இப்ராகிம் வேறு நாட்டுக்கு பாஸ்போர்ட்டை' வைத்திருப்பதாக மழுப்பிய இந்திய அரசு, இதனை விசாரிக்க தன் அதிகாரிகளை நியமித்துள்ளது.

★ கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் காஷ்மீரின் புகழ் வாய்ந்த இருதய நோய் மருத்துவ நிபுணரும், ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் உயர்மட்ட உறுப்பினருமான அப்துல் அஹத் குரு மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து இதுநாள் வரை, டாக்டர் குருவையும் சேர்த்து மக்கள் மத்தியில் பிரபலமான மூன்று செயல்வீரர்கள் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அரசுதான் இத்திட்டமிட்ட சதியை அரங்கேற்றியுள்ளது என அனைத்துப் போராளி குழுக்களும் குற்றம் சாட்டியிருப்பதுடன், பள்ளத்தாக்கு முழுவதும் இரண்டு நாள் பொதுவேலை நிறுத்தத்தையும் நடத்தியுள்ளனர். டாக்டர் குருவின் இறுதிச் சடங்கின் பொழுது நடந்த துப்பாக்கிச்சூட்டில் அவரின் மைத்துனரும் உயிர் இழந்துள்ளார். தான் கொல்லப்படுவதற்கு முன்பு, 'டாக்டர் குரு மத்திய அரசு அமைதியை நிலைநாட்ட எடுக்கவிருக்கும் புதிய முன் முயற்சிகளுக்கு உதவுவார்' என உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டிருந்ததை மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஏப்ரல் 10 அன்று பெருகிவரும் கொட்டடிக் கொலைகளைக் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, எல்லைப் பாதுகாப்பு படை 70-க்கும் அதிகமான பொது மக்களை சுட்டுக் கொன்றிருப்பதுடன், ஸ்ரீநகர் லால்சௌக் பகுதியில் 250-க்கும் அதிகமான வீடுகளையும், கடைகளையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. இந்த அட்டூழியங்களுக்கு அரசு தரும் பதிலோ, 'தான் எடுக்கும் புதிய முன் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தவே போட்டி போராளி குழுக்கள் இத்தகைய வன் செயல்களில் ஈடுபடுகின்றன' என்பதுதான்.



'ஊருக்கொரு நீதி; தனக்கொரு நீதி', பா.ஜ.க. தலைவர் ஜோஷி டெல்லி பாக். தூதரக கொண்டாட்டத்தில்.

★ இந்தியா இதுவரை உலக வங்கி, பல சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் மேற்குலக நாடுகள் முதலியவற்றிடமிருந்து பெற்றுள்ள கடன் தொகையில் சுமார் 61,000 கோடி ரூபாயை எந்தவித முதலீடும் செய்யாது கிடப்பில் போட்டுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்த வேண்டி பொருளாதார மறுசீரமைப்புக்காக சமீபகாலத்தில் உலக வங்கியிடமிருந்து பெற்ற தொகையும் இதில் கணிசமான அளவு உண்டு. முறையான திட்டமின்மையும், அதிகார வர்க்க சிவப்பு நாடாத்தனமும்தான் இதற்குக் காரணம் என முதலாளித்துவ பொருளாதாரவாதிகளே ஒப்புக் கொள்கின்றனர். பெற்ற கடனை முதலீடு செய்தே போண்டியாகிப் போன பல நாடுகள் இருக்கையில், முதலீடு செய்யாது பெற்ற கடனுக்கு வட்டி கட்டியே நாட்டை போண்டியாக்கத் துடிக்கும் அதிகார வர்க்கத்தின் 'தேச பக்தி'யை என்னவென்று கூறுவது?

★ 'தங்களின் இரண்டு இராணுவத் தளங்களை சர்வதேச அணு ஆற்றல் நிறுவனம் சோதனையிட அனுமதிக்க முடியாது' எனக்கூறி வடகொரியா சர்வதேச அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவிட்டது. ஒரு தன்னிச்சையான ஸ்தாபனம் போல் இயங்காமல் அமெரிக்காவின் உளவு நிறுவனமாக சர்வதேச அணு ஆற்றல் நிறுவனம் இயங்கி வருகிறது எனவும் குற்றம் சுமத்தியுள்ளது. இப்பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு எடுத்துச் செல்லப் போவதாக வடகொரியாவை மிரட்டியுள்ள அமெரிக்கா, இந்த ஒப்பந்தத்தையே கேலிக்குள்ளாக்கும் அளவு அணு ஆயுதச் சோதனை நடத்துவதில் உலகிலேயே முதல் நாடாக திகழ்ந்து வருகிறது. மேலும் தென் கொரியா, இஸ்ரேல் போன்ற தனது அடிவருடி நாடுகளில் அணு ஆயுத தடுப்பு சம்மந்தமாக தலையிடுவதே யில்லை. அதேபொழுதில் தன் சொல் கேட்காத நாடுகள் என்றாலோ அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம், சர்வதேச அரசியல் மற்றும் நிதி நிறுவனங்கள் முதலியவற்றைத் தனது கைப்பாவையாகக் கொண்டு அந்நாடுகளின் சுயாதிபத்திய உரிமையினையே காலில் போட்டு மிதித்து ஆட்டம் போடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No. TN/MS(S) 344



# இதுதான் இன்றைய இந்தியா



இது ஹைதராபாத்திலுள்ள ஒரு டிஸ்கோ நடன அரங்கம். முன்னிரவுப் பொழுதையும், வார விடுமுறை நாட்களையும் கழிக்க பாரம்பரிய பழைய பொழுது போக்குகளெல்லாம் மலையேறிவிட்டன. பொது விடுதிகளும், டிஸ்கோ கிளப்புகளும் நகரத்தில் வாழும் வசதி படைத்தவர்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாகி விட்டது. பொது விடுதிகளில் மணிக்கணக்காக குடித்துக் கொண்டே வெட்டி அரட்டையில் ஈடுபடுவது, டிஸ்கோ கிளப்புகளில் காதின் ஜவ்வைப் பிளந்திடும் இசையினூடே கையையும், காலையும் மற்ற அங்க அவயங்களையும் வக்கிரமாக ஆட்டி நடனமாடுவது, மைக்கேல் சாக்சன், மடோனா, சமந்தா ஃபாக்ஸ் என்ற சர்வதேச சீரழிவு கலாச்சாரத்தின் பிரதிநிதிகளின் பெயர்களைப் பிதற்றித் திரிவது — இவைதான் இப்பொழுது இவர்களின் கௌரவத்தை வெளிக்காட்டும் தகுதிகள். ஆண்-பெண், பெரியவர் - சிறியவர் என்பதெல்லாம் கிடையாது இத் தலைக்கேறிய போதை ஆட்டத்தில். எப்படியேனும் பணம் சம்பாதிப்பது, பின் கூத்தடிப்பது - இதைத்தவிர இவர்களின் வாழ்க்கையில் வேறு எதற்கும் முக்கியத்துவம் கிடையாது. சீட்டு கிளப் என்றாலே முகம் சுளிக்கும் பிற பகுதி நடுத்தர வர்க்கத்தினரையும் இச் சீரழிவு விட்டு வைக்கப் போவதில்லை. இதற்காகவே மியூஸிக் டி.வி., ஸ்டார் டி.வி., தூர்தர்ஷனில் விளம்பரதாரர் நிகழ்ச்சி என்று பொறி வைக்கப்பட்டுள்ளது. இதனுடன் 1 லட்சம் ரூபாய் கட்டினால் போதும்; இத்தொழில் ஆரம்பித்துக் கொள்ளலாம் என 'தாராளமயமாக்கியிருக்கிறது அரசு.

இது அதே ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த பிரதமரின் தொகுதியான நந்தியாலின் பகுதியிலுள்ள சுண்ணாம்பு சூளைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள். தொடர்ச்சியான வறட்சி காரணமாக விவசாயத்தைக் கைவிட்டு பிழைக்க வேறு வழியின்றி இந்த வேலையை செய்து வரும் இவர்களுக்கு பொழுதுபோக்கு என்பதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆற அமர்ந்து சாப்பிடகூட நேரமில்லாதபடி இடைவிடாத, கடினமான வேலை. வெள்ளி முளைத்ததிலிருந்து இரவு வரை வேலை செய்தால்தான் ஒரு நாள் பிழைப்பை ஓட்ட முடியும். அதுவும் குடும்பத்திலுள்ள ஆறு வயது குழந்தை முதல் அறுபது வயது கிழவர் வரை சூளையின் நெருப்பில் வெந்தால்தான். ரேஷன் பொருட்களின் விலை ஏறிய பின் அரிசிச் சோறு என்பதெல்லாம் இவர்களுக்கு கைமீறிய காரியம்; சூளை படிகளில் நிற்காது ஏறி இறங்குவதால் வரும் களைப்பைப் போக்கிக் கொள்ள குடிக்கும் தேநீர் தான் ஆடம்பரச் செலவு. சூளையின் வெப்பமும், தூசியும் இவர்களின் வாழ்நாளை காசநோயின் மூலமும், ஆஸ்த்மா மூலமும் பாதியாக்கி விடுகிறது. இத்துனை கஷ்டங்களினூடேயும், 'படித்தாலாவது தங்கள் வாழ்க்கை மாறாதா' என்ற ஆதங்கத்துடன் இரவுப் பள்ளிகளுக்குச் செல்கின்றனர் பலர்.

வறுமையூடேயும், கடினமான பணிகளினூடேயும் தம்மை கலாச்சார ரீதியாக உயர்த்திக் கொள்ள முயலும் உழைக்கும் மக்கள் ஒரு புறம்; குடிப்பதையும், கூத்தடிப்பதையுமே சமுதாயம் முழுமைக்குமான கலாச்சாரமாக திணிக்கத் துடிக்கும் மேட்டுக்குடி கும்பலும், அரசும் மறுபுறம். இனியுமா, இக்கொடுமைகள் தொடர அனுமதிப்பது?

படிப்பகம்